இன்ப வாசகம்
முதற் புத்தகம்
தேவயிரககம் (எஸ்)

# இன்ப வாசகம்

INPA VĀCAKAM

## முதற் புத்தகம்

Ed by Devayirakkam (S)

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

1819

Editor:

எஸ். தேவயிரக்கம், எம். ஏ., எல். டி.

வெளியிடுவோர்:

திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ,

பாளையங்கோட்டை.

பதிப்புரிமை] 1954 [விலை 0—4—0

First Edition 1950
Second Edition 1951
Third Edition 1954

*Approved by the Madras Text Book Committee for use in Elementary Schools—Vide Fort St. George Gazette Page 3 dated 13—3—1951*

Printed at the Hilal Press, Tirunelveli —1954

# முன்னுரை

கைத் தொழில் வல்லார் தமது முதிர்ந்த அறிவையும், அநுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு தத்தம் தொழிலை எளிதிலும், விரைவிலும் நடத்தப் பல புதிய முறைகளைக் கண்டு பிடிக்கின்றனர். பின்னர், அம்முறைகளை மேற்கொண்டு பயனடைகின்றனர். அவ்வாறே, கல்வித் துறையிலும் அநுபவமும், அறிவும் முதிர்ந்த அறிஞர் பலரது முயற்சியால் பழைய முறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் இருவென இருந்து, அவர் சொல்லென, நெடுங் கணக்கை வரிசைப்படி ஒப்புவிக்கும் முறை நம் நாட்டில் நெடு நாளாக உலவிய பழைய முறை. கல்வி முறையில் மனோதத்துவ நிபுணரின் புத்தப் புதிய ஆராய்ச்சிகள் புகுந்து பழைய முறையில் பல மாறுதல்களை உண்டாக்கிவிட்டன. அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தைப் படிப்பவருக்கு இவ்வுண்மை எளிதில் புலனாகும்.

நமது வீட்டிலும், வீதியிலும், பள்ளியிலும் காணக்கூடிய பொருட்களையும், பிராணிகளையும் படத்தில் பார்த்துக் குதூகலங் கொள்வதே குழந்தை முதற்வகுப்பில் கற்கும் ஆரம்பப் பாடம். அக்குழந்தையுடன் கூடி மகிழ்வதே அவ்வகுப்பு ஆசிரியரின் வேலையாகும்.

படத்தில் காணும் பொருள்களின் அல்லது பிராணிகளின் பெயரைச் சொல்லக் கற்பதே குழந்தைகளின் இரண்டாம் கல்வி.

சொல்லக் கற்ற பின்னரே, குழந்தைக்கு எழுதக் கற்பிக்க வேண்டும். எழுத்துக்களை சொற்களில் அமைத்தே குழந்தை கற்கிறது. அவ்வெழுத்துக்களின் உபயோகத்தை குழந்தை தெரிந்துகொள்கிறது.

எழுதுவதிலும் இலகுவான நேர் கோட்டு எழுத்துக்களை முதலிலும் கடினமானவற்றை இறுதியிலும் பழகுவதற்கேற்ற முறையில் பாடங்களை அமைப்பதே சிறந்த முறையாகும். இம்முறைப்படியே இப்புத்தகத்தை அமைத்துள்ளோம்.

சுருங்கக் கூறின் இப்புத்தக வரிசை புதிய பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவருக்கு விருந்தாகவும் ஆசிரியருக்கு உதவியாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர்.

26 MAY 1956
MADRAS



ப ட ம்     ட



ப ட் ட ம்     ப



ம ட ம்     ம



வ ட ம்     வ



வ ட் ட ம்     ட்



ச ட் ட ம்     ச

| | | |
|---|---|---|
|  | கட்டம் | க |
|  | தட்டம் | த |
|  | சரம் | ம் |
|  | மரம் | ர |
|  | மலர் | ல |
|  | நகம் | ந |



கப்பல் ல்



சன்னல் ன



பந்தல் ந்



வயல் ய



பழம் ழ



பணம் ண



ச ங் க ம் — ங்



ம ஞ் ச ள் — ஞ்



த ச் ச ன் — ச்



ப ற் க ள் — ற்



ச க் க ர ம் — க்



ம த் த ள ம் — ள

## பயிற்சி

**ஆசிரியருக்குக் குறிப்பு:**

க், ங், ச், ட், முதலிய எழுத்துக்கள் வரும் படங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப் படங்களைப் பிள்ளைகள் காட்டும்படி செய்யவும். இது ஒரு நல்ல விளையாட்டு.



| | | |
|---|---|---|
| பட | பட | பட் |
| மட | மட | மட் |
| சட | சட | சட் |
| டப | டப | டப் |
| டம | டம | டம் |
| கண | கண | கண் |

| | |
|---|---|
| சர | சர |
| பர | பர |
| மழ | மழ |

## பயிற்சி

வார்த்தைக்குப் பொருத்தமான படத்தைக் காட்டு :—

| | | |
|---|---|---|
| கலயம் | நகரம் | கண் |
| களம் | மன்னன் | பந்தம் |
| வனம் | பதக்கம் | கம்பம் |
| மத்தளம் | ரம்பம் | பம்பரம் |
| மஞ்சம் | பந்தயம் | வயல் |



## பயிற்சி

படங்களின் பெயர்களை எழுது:—



## உயிர் எழுத்துக்கள்



அரம் — அ



அன்னம்



ஆரம் — ஆ



ஆட்டம்



இதழ் — இ



இரதம்



ஈக்கள் — ஈ



ஈச்சமரம்



உரல் — உ



உடல்



ஊதல் — ஊ



ஊஞ்சல்




எ ண் எ



எ ள்



ஏ ர் ஏ



ஏ ற் ற ம்



ஐ ய ர் ஐ



ஐ வ ர்



ஒ ட் ட க ம் | ஒ



ஒ ட் ட ர்



ஓ ட ம் | ஓ



ஓ ட் ட ம்



ஔ ட த ம் | ஔ

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

## பயிற்சி

படத்தைப் பார்த்துப் படி.



அ ஆ





| | |
|---|---|
| க | கா |
| ச | சா |
| ட | டா |
| ண | ணா |
| த | தா |
| ந | நா |

கல் — கால்

சரல் — சாரல்

டமாரம் — அண்டா

அண்ணன் — வண்ணான்

தகரம் — தாத்தா

நகரம் — நாகம்

அப்பா படம். மலர் ஆரம்.

தகர டப்பா. வண்ணான் வந்தான்.

# அ ஆ





| | | | |
|---|---|---|---|
| ப | பா | பழம் | பாய் |
| ம | மா | மதம் | மாதம் |
| ய | யா | வயல் | பாயாசம் |
| ர | ரா | ரம்பம் | ராகம் |
| வ | வா | வண்டி | வாத்து |

அக்கா வா. அம்மா பார்.

சாதம் தா. பால் சாதம்.

நாய் வால். தாத்தா வயல்.

# இ ஈ





| | | | |
|---|---|---|---|
| கி | கீ | கிளி | கீரி |
| சி | சீ | சிப்பி | சீப்பு |
| ணி | ணீ | கிண்ணி | தண்ணீர் |
| தி | தீ | திரி | தீனி |
| நி | நீ | நிலம் | நீலம் |
| பி | பீ | பிடி | பீடி |

என் இனம். ஈ படம்.

கடல் சிப்பி. கிளி பார்.

இ ஈ





| | |
|---|---|
| ரி | ரீ |
| மி | மீ |
| லி | லீ |
| வி | வீ |

நரி கிரீடம்

மிதி மீன்

எலி லீலா

விசிறி வீதி

எலி பிடி. ஏரி நீர்.

நில வளம். நீள வீதி.

மணி அடி. கண் விழி

சிறிய விசிறி. சிறிய கிண்ணி.

உ ஊ





| | |
|---|---|
| கு | கூ |
| சு | சூ |
| டு | டூ |
| ணு | ணூ |
| து | தூ |
| பு | பூ |

| | |
|---|---|
| குருவி | கூண்டு |
| சுவர் | சூரியன் |
| மாடு | குண்டூசி |
| கணு | பூணூல் |
| துரும்பு | தூண் |
| புலி | பூட்டு |

குருவிக் கூண்டு. குண்டூசி எடு.

சிறிய துரும்பு. நல்ல நுங்கு.

| உ | ஊ |
|---|---|
|  | <br> |

| | |
|---|---|
| ரு | ரூ |
| யு | யூ |
| நு | நூ |
| லு | லூ |
| று | றூ |

| | |
|---|---|
| கரும்பு | ரூபாய் |
| வாயு | சேயூர் |
| நுங்கு | நூல் |
| எலும்பு | ஏலூர் |
| கிணறு | சிற்றூர் |

புனுகுப் பூனை. பூணூல் நூல்

சோறு போடு. உள்ளூர் மாடு.

கழுகு மூக்கு. முழு ரூபாய்.

| எ | ஏ |
|---|---|
|  |  |

| | |
|---|---|
| கெ | கே |
| செ | சே |
| டெ | டே |
| ணெ | ணே |
| தெ | தே |
| நெ | நே |
| பெ | பே |

| | |
|---|---|
| கெண்டி | கேணி |
| செக்கு | சேவல் |
| சுண்டெலி | கண்டேன் |
| வெண்ணெய் | கண்ணே |
| தெப்பம் | தேர் |
| நெற்றி | நேற்று |
| பெட்டி | பேனா |

செக்கு மாடு. புலி கண்டேன்.

ஏலூர் தேர். வண்ணான் கேணி.

எ ஏ





| | |
|---|---|
| வெ | வே |
| மெ | மே |
| ரெ | ரே |
| ளெ | ளே |

**வெங்காயம்** **வேர்**

**மெய்** **மேடு**

**ரெங்கன்** **ரேகை**

**வெள்ளெலி** **உள்ளே**

கண்ணே வா. இது என்ன வேர்?

கேள்வி நேரம். உள்ளே வா.

தெப்பம் பார். தேர் வடம்.

இது வெள்ளெலி. ஏணி எங்கே?

# ஐ



| |
|---|
| கை |
| சை |
| டை |
| ணை |
| தை |
| பை |

**கை விரல்**

**மீசை**

**சடை**

**தலையணை**

**கதை**

**பையன்**

கைவிரல் ஐந்து.

உன் பாயை எடு.

இது என்ன விதை?

இது கீரை விதை.

பூனை மீசை நீளம்.

தலையணை எங்கே?

# ஐ



மை

ரை

லை

வை

ழை

ளை

மைக் கூடு

தரை

வலை

வைகை

வாழை

மரக் கிளை

இது பனை ஓலை விசிறி.

இவன் பறை அடிக்கிறான்.

நேற்று மழை பெய்தது.

வலையில் மீன் இருக்கிறது.

வைகை நதியில் தண்ணீர் இல்லை.

ஒ ஓ





| | |
|---|---|
| கொ | கோ |
| சொ | சோ |
| தொ | தோ |
| நொ | நோ |
| பொ | போ |
| மொ | மோ |

**கொக்கு** **கோப்பை**

**சொத்து** **சோப்பு**

**தொப்பி** **தோப்பு**

**நொண்டி** **நோய்**

**பொட்டு** **போர்வை**

**மொட்டு** **மோதிரம்**

பையன் கோலி ஆடுகிறான்.

பெண் கோலம் போடுகிறாள்.

இது மோதிர விரல்.

அது மல்லிகை மொட்டு.

நீ தொட்டில் ஆட்டு.

இது சோளச் சோறு.

# ஔ



| | |
|---|---|
| வௌ | **வௌவால்** |
| சௌ | **சௌக்கியம்** |
| மௌ | **மௌனம்** |
| பௌ | **பௌர்ணமி** |
| யௌ | **யௌவனம்** |
| கௌ | **கௌரி** |

நல்ல ஔடதம்.
ஔவையார் பெரியவர்.
பௌர்ணமி நிலா.
கௌரி சௌக்கியம்.
வௌவால் பறக்கும்.
யௌவன வயது.

பயிற்சி

என் பெயரை எழுது:—



## பயிற்சி

என் பெயரைச் சொல்லு:—



கோடிட்ட இடங்களில் தகுந்த எழுத்தை எழுதிப் படி :—

| | | |
|---|---|---|
| சா — ம் | ப — ம் | ப — |
| மா — ம் | வ — ம் | கி — |
| பா — ம் | த — ம் | த — |
| லா — ம் | கு — ம் | வீ — |

| | | |
|---|---|---|
| ரம்ப — | பந்—ல் | க— |
| க — பம் | க — தல் | கா — |
| ச — கம் | தந்த — | பா— |
| சட் — ம் | வண்ட — | ந— |

| | | |
|---|---|---|
| அணி — | எ — ம்பு | சீ—பு |
| தவ — | பட்ட — | உ—ல் |
| குதி — | பண்ட — | க—வு |
| எரு — | வி — க்கு | ச — ல் |

விட்ட எழுத்துக்களை சேர்த்து வாசி:—

| | |
|---|---|
| ச் ச | ங் க |
| தச்சன் | அங்கம் |
| ம — — ம் | ச — — ம் |
| மி — — ம் | த — — ம் |
| அ— — ம் | பொ- - ல் |
| ஞ் ச | ற் ற |
| கொஞ்சம் | ஏற்றம் |
| ல — — ம் | சு — — ம் |
| த — — ம் | வ — — ல் |
| ப — — ம் | கு— — ம் |

கொடுத்த எழுத்துக்களை உபயோகித்து வார்த்தைகளை ஒழுங்காக அமை:—

அ ன் ச ர — அரசன்
ை ர தி கு —
ன் ய ை ப —
ள் ர ல் வி க —
ங் ம ா ய் க ா —
ர் ணி ண் த —
ழ ன் வ உ —



| | |
|---|---|
| தலை | கழுத்து |
| கண் | மார்பு |
| காது | தோள் |
| மூக்கு | வயிறு |
| நெற்றி | இடுப்பு |
| வாய் | கால் |
| நாக்கு | கை |
| உதடு | விரல் |

கண் பார்க்கிறது.
காது கேட்கிறது.
மூக்கு முகருகிறது.
வாய் பேசுகிறது.
நாக்கு சுவைக்கிறது.
கால் நடக்கிறது.
கை வேலை செய்கிறது.



| | |
|---|---|
| அப்பா | அம்மா |
| அண்ணன் | தம்பி |
| அக்காள் | தங்கை |
| தாத்தா | பாட்டி |
| மகன் | மகள் |
| மாமா | மாமி |
| சித்தப்பா | சித்தி |
| பெரியப்பா | பெரியம்மா |

அப்பா வாசிக்கிறார்.
அம்மா நிற்கிறாள்.
அண்ணன் படத்தைப் பார்க்கிறான்.
தம்பி விளையாடுகிறான்.
அக்காள் தைக்கிறாள்.
தங்கை பாடுகிறாள்.

# எண்கள்

ஒன்று, யார்க்கும் தலை  1 ௧

இரண்டு, முகத்தில் கண்  2 ௨

மூன்று, முக்காலிக்குக் கால்  3 ௩

நான்கு, நாற்காலியின் கால்  4 ௪

ஐந்து, ஒரு கை விரல்  5 ௫

ஆறு, ஈயின் கால்  6 ௬

ஏழு, வாரத்தின் நாள் 

7 ௭

எட்டு, சிலந்தியின் கால்  8 ௮

ஒன்பது, தானிய வகை  9 ௯

பத்து, இரு கை விரல்  10 ௰

# ஒருமை, பன்மை.

இது ஒரு  இவை 

இது ஒரு  இவை 

இது ஒரு  இவை 

அது ஒரு  அவை 

அது ஒரு  அவை 

அது ஒரு  அவை 

இவன் ஒரு  இவர்கள் 

அவள் ஒரு  அவர்கள் 

அவன் ஒரு  அவர்கள் 

# செய்கைகள்

எழுந்து நில்.

கீழே உட்கார்.

பாடம் படி.

வெளியே போ.

உள்ளே வா.

கதவைத் திற.

கதவை அடை.

சோறு சாப்பிடு.

தண்ணீர் குடி.

பந்து ஆடு.

கும்மி அடி.

மணி அடி.

முகம் கழுவு.



**இது ஒரு வயல்.**
**வயலில் தண்ணீர் இருக்கிறது.**
**வயலை உழவன் உழுகிறான்.**
**வயலில் நெல் விளைகிறது.**
**நெல்லைக் குத்தி அரிசி எடுக்கலாம்.**
**அரிசியை சமைத்து சாப்பிடலாம்.**

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு:—

1. வயலில் தண்ணீர் —
2. வயலை — உழுகிறான்.
3. நெல்லில் — இருக்கிறது.
4. நாம் அரிசியை — சாப்பிடுகிறோம்.

பயிற்சி

படம் பார்த்து எழுது:—



மாடு ..............



குதிரை ..............



பையன் ..............



பெண் துணி ..............



பையன் ..............



பையன்கள் ..............

## பயிற்சி

படத்தைப் பார்த்து பழத்தின் பெயரைச் சொல்லு:—













# வாகனங்கள்

படம் பார்த்துப் படி.













# காய்கறிகள்

படம் பார்த்துப் படி.















இராமன் நல்ல பையன்.

அவன் காலையில் எழுந்திருக்கிறான்.

கடவுளைத் தொழுகிறான்.

பல் தேய்க்கிறான்.

துணி துவைக்கிறான்.

உடம்பைத் தேய்த்துக் குளிக்கிறான்.

சாதம் சாப்பிடுகிறான்.

பாடம் படிக்கிறான்.

சாயங்காலம் விளையாடுகிறான்.

இரவில் நித்திரை செய்கிறான்.



காக்காய்! காக்காய்!
ஓடி வா!
பிள்ளை கண்ணுக்கு
மைகொண்டு வா.

குருவி! குருவி!
ஓடி வா,
பிள்ளை கொண்டைக்குப் பூ
கொண்டு வா.





கிளியே! கிளியே!
ஓடி வா,
குழந்தைக்குப் பழம்
கொண்டு வா.

பசுவே! பசுவே!
ஓடி வா,
சின்னக் குழந்தைக்குப்
பால் கொண்டு வா.





நிலா! நிலா! ஓடி வா,
நில்லாமல் ஓடி வா,
மலைமேலே ஏறி வா,
மல்லிகைப் பூ கொண்டு

**விட்ட வார்த்தைகளை அல்லது எழுத்துக்களை எழுது:—**



அம்மா துணி ..........



பெண்கள் கும்மி ..........



தச்சன் மரம் இழைக் ..........



உழவன் ஏர் ..........



குயவன் பானை ..........



கொத்தன் வீடு ..........

ஆசிரியருக்குக் குறிப்பு :—

மேல், கீழ், முன், பின் என்ற வார்த்தைகளைப் படிப்பிக்க இந்தப் பாடத்தை உபயோகிக்க வேண்டும்.



புத்தகம் மேசையின் — இருக்கிறது.



நாய் மேசையின் — இருக்கிறது.



மேசை நாற்காலியின் — இருக்கிறது.



பையன் நாற்காலியின் — நிற்கிருன்

ஆசிரியருக்குக் குறிப்பு :—

பெரிய, சிறிய, கொழுத்து, மெலிந்து, நெட்டையான, குட்டையான என்ற வார்த்தைகளைப் பொருத்தமான இடங்களில் அமைக்க இந்தப் பாடத்தை உபயோகிக்க வேண்டும்.



யானை — மிருகம்.
பூனை — மிருகம்.





எருது ———
இருக்கிறது.

நாய் ———
இருக்கிறது.





இராமன் ——— பையன்.
பாண்டியன் ——— பையன்





## ரோஜா

| | |
|---|---|
| ஜலம் | வருஷம் |
| ஜாதி | விஷம் |
| ஜில்லா | புஷ்பம் |
| ஜீவனம் | கஷ்டம் |
| ஜௌளி | பாஷாணம் |
| பூஜை | கிருஷி |
| ஜோதி | பாஷை |

கஷ்ட ஜீவனம்.

ரோஜாப் புஷ்பம்.

கிருஷித் தொழில்.

ஜலதோஷம்.



புஸ்தகம்

சரஸ்வதி அக்ஷரம்
ஸாது லக்ஷ்மி
ஹனுமான் க்ஷேமம்
விவாஹம் பரீக்ஷை
முஹூர்த்தம் பக்ஷி
ஹைதர் ஸ்ரீமான்

சரஸ்வதி பூஜை.

விவாஹ முஹூர்த்தம்.

விஷப் பாம்பு.

ஸ்ரீமான் சுந்தரம்.

26 MAY 1956

படத்தைப் பார்த்து பூக்களின் பெயரைச் சொல்.



1. ஒவ்வொரு பூவும் என்ன நிறம் என்பதை சொல்.
2. உனக்குத் தெரிந்த வேறு பூக்களின் பெயரையும் சொல்



இவர் மகாத்மா காந்தி.
இவர் மிகவும் நல்லவர்.
இவர் எல்லோரிடமும் அன்பு
காட்டி வந்தார்.
இவர் ஏழைகளிடம் இரக்கம்
காட்டினார்.
இவருக்குக் குழந்தைகளிடம்
அதிகப் பிரியம்.
இவர் எப்பொழுதும் உண்மையே
பேசி வந்தார்.
இவர் சாந்த குணமுள்ளவர்.
இவரை எல்லோரும் மகாத்மா
என்று புகழ்கிறார்கள்.

# இன்ப வாசகம்

## இரண்டாம் புத்தகம்

B.k. 2

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

Editor :

எஸ். தேவயிரக்கம், எம். ஏ., எல். டி.

1519

வெளியிடுவோர் :

திருநெல்வேலி டயோசிசன் புக் டெப்போ,

பாளையங்கோட்டை.

பதிப்புரிமை]   1954   [விலை 0—5—0

First Edition 1950
Second Edition 1951
Third Edition 1954

RB 5/3-54

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

*Approved by the Madras Text Book Committee for use in Elementary Schools—Vide Fort St. George Gazette Page 3 dated 13—3—1951*

54609
26C211

Printed at the Hilal Press, Tirunelveli —1954

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

# முன்னுரை

---

கைத் தொழில் வல்லார் தமது முதிர்ந்த அறிவையும், அநுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு தத்தம் தொழிலை எளிதிலும், விரைவிலும் நடத்தப் பல புதிய முறைகளைக் கண்டு பிடிக்கின்றனர். பின்னர், அம்முறைகளை மேற்கொண்டு பயனடை கின்றனர். அவ்வாறே, கல்வித் துறையிலும் அநுபவமும், அறிவும் முதிர்ந்த அறிஞர் பலரது முயற்சியால் பழைய முறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் இருவென இருந்து, அவர் சொல்லென, நெடுங் கணக்கை வரிசைப்படி ஒப்புவிக்கும் முறை நம் நாட்டில் நெடு நாளாக உலவிய பழைய முறை. கல்வி முறையில் மனோதத்துவ நிபுணரின் புத்தப் புதிய ஆராய்ச்சிகள் புகுந்து பழைய முறையில் பல மாறுதல்களை உண்டாக்கிவிட்டன. அரசாங்கத்தார் அண்மை யில் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தைப் படிப்பவருக்கு இவ் வுண்மை எளிதில் புலனாகும்.

இப் புத்தக வரிசை புதிய பாடத் திட்டத்தை அடிப்படை யாகக் கொண்டு மாணவருக்கு விருந்தாகவும் ஆசிரியருக்கு உதவி யாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர்.

28 MAY 1958
MADRAS

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பயிற்சி (படம் பார்த்துச் சொல்லுதல்) ... | 1 |
| பயிற்சி ,, ... | 2 |
| பயிற்சி ,, ... | 3 |
| பயிற்சி ,, ... | 4 |
| தொடர் மொழிகள் ... | 5 |
| பறவைகளின் ஒலிகள் ... | 6 |
| மிருகங்களின் ஒலிகள் ... | 7 |
| நிறங்கள் ... | 8 |
| சைக்கிள் வண்டி (பாட்டு) ... | 9 |
| எங்கள் வீடு ... | 10 |
| வகுப்பு அறை ... | 11 |
| அபிநயப் பாட்டு ... | 12 |
| பசு ... | 13 |
| சிங்கமும் எருதுகளும் ... | 14 |
| விளையாட்டுகள் ... | 15 |
| பசுவும் கன்றும் ... | 16 |
| பயிற்சி ... | 17 |
| சூரியன் ... | 18 |
| இரண்டு சேவல்கள் ... | 19 |
| அறுசுவைகள் ... | 20 |
| கிளிப்பாட்டு ... | 22 |
| பெரியவரும் சுந்தரமும் (உரையாடல்) ... | 23 |
| கிளி ... | 24 |
| குல்லா வியாபாரி ... | 26 |
| கூடை முடைதல் ... | 27 |
| மரங்கள் ... | 29 |
| அணில் பாட்டு ... | 31 |
| விடுகவிகள் ... | 32 |
| அறிவுள்ள காகம் ... | 33 |
| பேராசை ... | 35 |
| மிருகங்கள் ... | 37 |
| பருத்திச்செடி சொன்ன கதை ... | 39 |
| ஒரு விடுகவி ... | 41 |
| மௌனமாய்ப் படித்தல் ... | 42 |
| மௌனமாய்ப் படித்தல் ... | 43 |
| உரையாடல் ... | 44 |
| வாரத்தின் நாட்கள் ... | 46 |
| வட மொழிகள் ... | 47 |
| ஜவஹர்லால் நேரு ... | 48 |
| பயிர்த் தொழில் பழமொழிகள் ... | 50 |
| ஆத்திச் சூடி ... | 50 |
| உலக நீதி ... | 51 |
| எங்கள் நாடு ... | 52 |

## பயிற்சி

**குறிப்பு :** படத்தைப் பார்த்து 'இது இன்னது' என்று சொல்லவும் எழுதவும் செய்யவும்.



## பயிற்சி 2

**குறிப்பு:** படத்தைப் பார்த்து 'இது இன்னது' என்று சொல்லவும் எழுதவும் செய்யவும்.



## பயிற்சி 3

குறிப்பு : படத்தைப் பார்த்து 'இது இன்னது' என்று சொல்லவும் எழுதவும் செய்யவும்.



## பயிற்சி 4

குறிப்பு: இப்படத்தை நன்ருய்க் கவனித்துப் பார். இப்படத்தில் உனக்குத் தெரிந்த பொருள்களையெல்லாம் வரிசையாய் எழுது.



1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.
11.
12.

பாடம் 1.

# தொடர் மொழிகள்



பழக் கூடை



கிளிக் கூடு



மரப் பெட்டி



பிரம்பு நாற்காலி



தீப் பெட்டி



பசுங் கன்று



ஊர்க் கிணறு

பாடம் 2

# பறவைகளின் ஒலிகள்



கூவும்



கரையும்



கொஞ்சும்



அகவும்



அலறும்



கத்தும்

பாடம் 3

# மிருகங்களின் ஒலிகள்



குரைக்கும்



கனைக்கும்



ஊளையிடும்



சீறும்



கீச்சிடும்



கர்ச்சிக்கும்

பாடம் 4.

# நிறங்கள்

காகம் கருமை நிறம்.

பால் வெண்மை நிறம்.

பவளம் சிவப்பு நிறம்.

கிளி பச்சை நிறம்

வாழைப் பழம் மஞ்சள் நிறம்.

ஆகாயம் நீல நிறம்.

பயிற்சி.

முடித்து எழுது:—

1. பஞ்சு — நிறம்.
2. பூசணிப் பூ — நிறம்.
3. சுண்ணும்பு — நிறம்.
4. தலைமயிர் — நிறம்.
5. இரத்தம் — நிறம்.

பாடம் 5.



## சைக்கிள் வண்டி

1. சிங்கார மான வண்டி
   சீமையிலே செய்தவண்டி.

2. இரும்பாலே செய்த வண்டி
   எங்கெங்கும் ஓடும் வண்டி.

3. மாடில்லை குதிரை இல்லை
   மாயமதாய்ப் பறந்திடும் பார்.

4. தீயில்லை புகையு மில்லை
   தீவிரமாய்ச் சென்றிடும் பார்.

5. காலாலே மிதிப்ப தனல்
   கடும் விசையில் போயிடும் பார்.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

பாடம் 6.



## எங்கள் வீடு

இது எங்கள் வீடு.
இது நல்ல வீடு.
இது சுத்தமாக இருக்கிறது.
இதில் ஏழு அறைகள் இருக்கின்றன.
அறைகளில் சன்னல்கள் இருக்கின்றன.
சன்னல்கள் வழியாய் காற்றும் வெளிச்சமும் வருகின்றன.
வீட்டின் பின்னே மரங்கள் இருக்கின்றன.
வீட்டின் பின்னே கிணறும் இருக்கிறது.
கிணற்றின் அருகில் தோப்பு இருக்கிறது.
தோப்பில் மரங்கள் இருக்கின்றன.

**பயிற்சி :** முடித்து எழுது:—

1. இதில் — இருக்கின்றன.
2. வீட்டின் — மரங்கள் —
3. — பின்னே கிணறும் இருக்கிறது.
4. கிணற்றின் — — இருக்கிறது.

பாடம் 7.



# வகுப்பு அறை

இது எங்கள் வகுப்பு அறை.
இது சிறிய அறை.
இதில் நான்கு சன்னல்கள் இருக்கின்றன.
இதற்கு இரண்டு கதவுகள் உண்டு.
ஆசிரியர் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறார்.
அவருக்கு எதிரே ஒரு மேசை இருக்கிறது.
அவருக்குப் பின்புறம் இருப்பது கரும்பலகை.
பிள்ளைகள் பலகைகளின் மேல் உட்கார்ந்து இருக்கிறார்கள்.
அவர்களுக்கு முன் இருப்பது சாய்வு மேசை.
ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.

**கேள்விகள் :**

1. இந்த அறையில் எத்தனை சன்னல்கள் உண்டு?
2. எத்தனை கதவுகள் உண்டு?
3. ஆசிரியரின் எதிரே இருப்பது என்ன?
4. கரும்பலகை எங்கே இருக்கிறது?
5. பிள்ளைகள் எதன்மேல் உட்கார்ந்து இருக்கிறார்கள்?
6. ஆசிரியர் என்ன செய்கிறார்?

பாடம் 8.

## அபிநயப் பாட்டு

நெல்லும் கம்பும் விளையுமே,
நெல்லும் கம்பும் விளையுமே.
உனக்கும் எனக்கும் தெரியுமே,
உழவன் இப்படி விதைப்பானே!

இப்படிச் சும்மா நிற்பானே;
காலைத் தட்டி கையைத் தட்டி
வயலைச் சுற்றிப் பார்ப்பானே
ட்ராலலாலலா — ட்ராலலாலலா —
ட்ராலலாலலா.

பாடம் 9.



## பசு

இது ஒரு பசு.
இதற்கு நான்கு கால்கள் உண்டு.
இதன் வால் நீளமானது
வால் நுனியில் மயிர்க் குஞ்சம் உள்ளது.
இதற்கு இரண்டு கொம்புகள் உண்டு.
பசு புல் மேயும். மேய்ந்தபின் அசைபோடும்.
பசு பால் கொடுக்கிறது
பசுவின் பால் இனிப்பாய் இருக்கும்.
பசு ஒரு சாதுவான மிருகம்.

**பயிற்சி:** முடித்து எழுது :—

1. பசுவுக்கு — கால்கள் —.
2. வாலின் நுனியில் — உள்ளது.
3. பசு புல் —
4. பசுவின் — இனிப்பாய் இருக்கும்.
5. பசு ஒரு சாதுவான —.

பாடம் 10

# சிங்கமும் எருதுகளும்

குறிப்பு: படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லு.



*பாடம் 11.*

# விளையாட்டுகள்



இந்தப் பையன்கள் பட்டம் விடுகிறார்கள். பட்டங்கள் காற்றில் பறக்கின்றன.



அந்தப் பையன்கள் பந்து விளையாடுகிறார்கள். பந்து மேலே எழும்புகிறது.



இந்தப் பெண்கள் கோலாட்டம் ஆடுகிறார்கள். கோல்கள் கைகளில் இருக்கின்றன.



அந்தப் பெண்கள் கும்மி அடிக்கிறார்கள். அவர்கள் பாட்டுப் பாடுகிறார்கள்.

*பாடம் 12.*

## பசுவும் கன்றும் (பாட்டு)



தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு — அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி.



அம்மா! என்குது
வெள்ளைப் பசு — உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி.



நாவால் நக்குது
வெள்ளைப் பசு — பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி.

முத்தங் கொடுக்குது
வெள்ளைப் பசு — மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி.

— **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.**

## பாடம் 13.

படத்தைப் பார்த்துப் பெயருடன் செயலைச் சேர்த்து எழுது:



1. பையன் —
2. பெண் —
3. கழுகு —
4. மயில் —
5. உழவன் —
6. புலி —

பாடம் 14.



# சூரியன்

சூரியன் காலையில் உதிக்கிறது.
சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.
சூரியன் பகலில் வெளிச்சமும் வெப்பமும் தருகிறது.
சூரிய வெளிச்சம் இல்லாத காலம் இரவு எனப்படும்.
சூரிய வெளிச்சம் உள்ள காலம் பகல் எனப்படும்.
மாலையில் சூரியன் மேற்கில் மறைகிறது.
பகலும் இரவும் சேர்ந்து ஒரு நாள்.

**பயிற்சி:** முடித்து எழுது:—

1. சூரியன்—திசை கிழக்கு,
2. மாலையில்—மேற்கில்—
3. பகலும்—சேர்ந்து—நாள்.

பாடம் 15.

மௌனமாகப்படித்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லுதல்:

# இரண்டு சேவல்கள்

ஓர் ஊரில் இரண்டு சேவல்கள் இருந்தன. ஒரு நாள் இரண்டும் சண்டை போட்டன. ஒன்று தோற்றது. ஒன்று வென்றது, தோற்ற சேவல் ஓடி ஒளித்துக் கொண்டது. வென்ற சேவல் ஒரு வீட்டின் மேல் ஏறிக் கூவினது. அந்தக் குரலை ஒரு கழுகு கேட்டது. அது பறந்து வந்து அச் சேவலைத் தூக்கிச் சென்றது.

**கேள்விகள் :**

1. எத்தனை சேவல்கள் இருந்தன?
2. அவைகள் என்ன செய்தன ?
3. தோற்ற சேவல் என்ன செய்தது ?
4. வென்ற சேவல் என்ன செய்தது ?
5. கூவின சேவலுக்கு என்ன நேர்ந்தது ?

**பயிற்சி :** கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விளையாட்டை விளையாடிப் பார் :-

| | |
|---|---|
| 1. சேவல்கள் சண்டை போடுகின்றன. | சேவல்கள் சண்டை போட்டன. |
| 2. ஒரு சேவல் ஒளித்துக் கொள்கிறது. | ........................................ |
| 3. ........................................ | இரண்டு சேவல்கள் இருந்தன. |
| 4. ........................................ | அந்தக் குரலை ஒரு கழுகு கேட்டது. |
| 5. வென்ற சேவல் கூவுகிறது. | ........................................ |

பாடம் 16.

# அறு சுவைகள்



இது புளியங்காய்.
இதைத் தின்ருல்
புளிப்பாய் இருக்கும்.



இது கரும்பு. இதன்
சாறு இனிப்பாய் இருக்
கும். கரும்பிலிருந்து
வெல்லம் செய்யலாம்.



இவை மிளகாய்கள்.
மிளகாய் உறைப்பாய்
இருக்கும். இதன் நிறம்
பச்சை.



இது பாகற்காய். இதன் நிறம் பச்சை. இது கசப்பாய் இருக்கும்.



இது வாழைப் பூ. இது துவர்ப்பாய் இருக்கும். இதன் நிறம் சிவப்பு.



அதோ கடலில் படகு செல்கிறது. கடல் நீர் உவர்ப்பாய் இருக்கும்.

பாடம் 17.

# கிளிப் பாட்டு

1. பச்சைக் கிளியே வா! வா!
பாலுஞ் சோறும் உண்ண வா!
கொச்சி மஞ்சள் பூச வா!
கொஞ்சி விளையாட வா!

2. பையப் பையப் பறந்து வா!
பாடிப் பாடிக் களித்து வா!
கையில் வந்தி ருக்கவா!
கனி யருந்த ஓடிவா!

3. வட்ட மாயுன் கழுத்திலே
வான வில்லை ஆரமாய்
இட்ட மன்னர் யாரம்மா
யானறியக் கூறம்மா!

4. கவலை யெல்லாம் நீங்கவே
களிப் பெழுந்து பொங்கவே
பவள வாய் திறந்து நீ
பாடு வாயோ தத்தம்மா!

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பாடம் 18

# பெரியவரும் சுந்தரமும்

(உரையாடல்)

பெரியவர் : தம்பி, உன் பெயர் என்ன ?

சுந்தரம் : ஐயா ! என் பெயர் சுந்தரம்.

பெரியவர் : உன் கையில் என்ன இருக்கிறது ?

சுந்தரம் : என் கையில் பை இருக்கிறது.

பெரியவர் : அதனுள் என்ன இருக்கிறது ?

சுந்தரம் : இதனுள் புத்தகங்கள் இருக்கின்றன.

பெரியவர் : நீ எங்கே போகிறாய் ?

சுந்தரம் : நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

பெரியவர் : நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் ?

சுந்தரம் : நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.

பெரியவர் : உன் தந்தையின் பெயர் என்ன ?

சுந்தரம் : என் தந்தையின் பெயர் தினகரன்.

பெரியவர் : உனக்கு வயது என்ன ?

சுந்தரம் : எனக்கு வயது ஆறு

பெரியவர் : நீ நல்ல பையன். நான் போய் வருகிறேன் தம்பி

சுந்தரம் : நல்லது ஐயா, வணக்கம்.

பாடம் 19



# கிளி

கிளி ஓர் அழகான பறவை. கிளிகளிற் பல வகை உண்டு. நம் நாட்டில் பச்சைக் கிளிகளே மிகவும் அதிகம். பஞ்சவர்ணக் கிளி ஐந்து நிறங்களைக் கொண்டது. அது எங்கும் சாதாரணமாகக் காணப் படுவதில்லை. வெள்ளைக்கிளி மற்ற வகைக் கிளிகளை விடப் பெரிதாக இருக்கும்.

கிளியின் மூக்கு வளைந்து இருக்கும். அதன் நிறம் சிவப்பு. அதன் நுனி கூர்மையாக இருக்கும். அது உறுதியாகவும் இருக்கும். கிளியின் ஒவ்வொரு

காலிலும், முன் பக்கம் இரண்டு விரல்களும் பின் பக்கம் இரண்டு விரல்களும் உண்டு. விரல் நுனியில் நகம் உண்டு. அதன் கழுத்தில் கறுப்பு ஆரம் உண்டு. கிளி தன் விரல்களால் மரக்கிளைகளைப் பற்றிக் கொள்ளும். அது கிளைகளில் உட்கார்ந்துகொண்டே தூங்கும். கிளி மரப் பொந்துகளில் வசிக்கும்.

கிளி, பழம், கொட்டை முதலியவைகளைத் தின்னும். சிலர் கிளிகளை வீட்டில் வளர்க்கிறார்கள். வீட்டுக் கிளிகள் சோறு தின்னும். கிளி நன்றாய்ப் பேசும். நாம் சொல்வதையே திரும்பச் சொல்லும்.

"சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை"

**கேள்விகள் :**

1. கிளிகளில் மூன்று வகைகளைச் சொல்.
2. எவ்வகைக் கிளிகள் நம் நாட்டில் அதிகம்?
3. கிளியின் மூக்கு எப்படி இருக்கிறது?
4. கிளியின் உணவு என்ன?

பாடம் 20.

# குல்லா வியாபாரி

படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்.



பாடம் 21



## கூடை முடைதல்

இந்தப் படத்தைப் பார். இவர்கள் செய்வது என்ன? இவர்கள் கூடை முடைகிறார்கள். இவர்கள் ஒரே வீட்டில் வாழ்கிறார்கள். இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

தந்தை மூங்கில் தடியைக் கத்தியால் வெட்டிப் பிளக்கிறான். பின் அவற்றைச் சிறு சிம்புகளாகச் சீவுகிறான். சிம்புகளுக்குப் பல நிறங் கொடுக்கிறான்.

தாய் என்ன செய்கிறாள்? அவள் கூடை முடைய அடி போடுகிறாள். இதுதான் கூடை முடைவதின் தொடக்கமாகும்.

சிறுவர்கள் அந்த அடிகளைத் தாயிடமிருந்து வாங்கிச் சிம்புகளால் கூடை பின்னுகிறார்கள். பல நிறங்கொண்ட சிம்புகளால் கூடை பின்னுகிறார்கள். கூடை பார்க்க அழகாய் இருக்கும்.

முடைந்த கூடைகள் நமக்கு உபயோகம் ஆகின்றன. பழங்கள் வைக்கும் கூடை, பழக்கூடை பூக்கள் வைக்கும் கூடை, பூக்கூடை.

கூடை முடைகிறவர்கள்; முறம், சல்லடை முதலியவற்றையும் பின்னுவார்கள். முறம் புடைக்க உதவும். சல்லடை சலிக்க உதவும்.

**கேள்விகள் :**

1. கூடை எதனால் முடைகிறார்கள்?
2. கூடை முடைவதில் தந்தையின் வேலை என்ன? தாயின் வேலை என்ன?
3. சிறுவர்கள் என்ன செய்கிறார்கள்?
4. கூடை எதற்கு உதவும்?
5. சல்லடை எதற்கு உதவும்?

---

பாடம் 22

## மரங்கள்

இந்தப் படத்தில் என்ன பார்க்கிறாய்? வாழை



மரமும் அதன் கன்றுகளும் நிற்கின்றன. வாழை மரத்திற்குக் கிளைகள் இல்லை. வாழைக் கன்றுகள் வாழையின் வேரிலிருந்து வளருகின்றன. வாழைக் குலையைப் பார். காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்கின்றன. அன்னை வாழை இலையில் சோறு படைக்கிறாள். வாழைப் பழம் இனிப்பாய் இருக்கும். வாழைக்காய் கறி சமைக்க உதவும். வாழைகளிற் பலவகை உண்டு.

இது மாமரம். இதில் பல கிளைகள் இருப்பதைப் பார். மாம்பழங்கள் கொத்துக் கொத்தாய்த் தொங்குகின்றன. பழம் உருசியாய் இருக்கும். காய் ஊறுகாய் போட உதவும். புது வீடுகளில் மா இலைகளைக் கட்டுகிறார்கள்.





இந்தப் பனைமரத்தைப் பார். இது உயரமானது. இதை வாழை மரத்துடன் ஒப்பிட்டுப் பார். இது குலை குலையாகக் காய்க்கும். இதன் ஒவ்வொரு பாகமும் பயன் படுகிறது. இதன் ஓலை, மட்டை, நார் முதலியன வீடு கட்ட உதவும். இதன் காயை நுங்கு என்பர். அது மிகவும் இனிப்பாய் இருக்கும். பனையிலிருந்து பத நீர் கிடைக்கும். பதநீரைக் காய்ச்சி வெல்லம் தயாரிக்கலாம்.

இது வேப்ப மரம். இது வெப்பமான நாடுகளில் மட்டும் வளரும். நமது நாட்டில் இது அதிகம். வேப்ப மரத்தை வீடுகட்ட உபயோகிக்கிறார்கள். வேப்பெண்ணெய் மருந்துக்கு உதவும்.



**கேள்விகள் :**

1. வாழை மரத்தினால் நமக்கு என்ன பிரயோஜனம் ?
2. மாங்காய் எதற்கு உபயோகப்படுகிறது ?
3. பனைமரத்தினால் நமக்கு என்ன பிரயோஜனம் ?
4. வேப்பெண்ணெய் எதற்கு உபயோகப்படுகிறது ?

---

பாடம் 23

# அணில் பாட்டு

1. சின்னஞ் சிறு அணிலே!
சிங்கார அணிலே!
என்னைச் சற்று பாராய்,
என்றன் சொல்லைக் கேளாய்

2. மரத்தின் மேலே ஏறுவாய்,
மலர்களைக் கோதுவாய்,
கிளைகளில் ஓடுவாய்,
கொத்திப் பழம் போடுவாய்.

3. உன்னைப் போல் நானுமே,
ஊக்கம் பெற வேணுமே,
சின்னஞ் சிறு அணிலே!
சிங்கார அணிலே!

பாடம் 24.

# விடு கவிகள்



1. ஒரு புட்டியில் இரண்டு தைலம். அது எது?



2. பச்சை சன்னல், வெள்ளை அங்கி, கறுப்பு மனிதன், உள்ளே தூங்குகிறான்.



3. ஆயிரம் தச்சர் கூடி, அழகான மண்டபங் கட்டி, ஒருவன் கண் பட்டு உடைந்ததாம் மண்டபம்.



4. முள்ளு முள்ளுக் குள்ளே, முந்திரித் தோப்புக் குள்ளே, வைக்கோற் போருக் குள்ளே, கண்டெடுத்தேன் வைரமணி.

பாடம் 25.



## அறிவுள்ள காகம்

1. தாகம் மிகுந்த காக மொன்று
தனியாய் அந்தக் காடெங்கும்,
வேக மாகப் பறந்து சென்றே
மீண்டது நீர்கா ணுதெங்கும்.

2. வரும்போ தங்கோர் மண்சாடி
வழியில் இருக்கக் கண்டதுவே;
நிரம்பத் தண்ணீர் எனப்பாடி
நெஞ்சில் மகிழ்ச்சி கொண்டதுவே

3. ஆவலாக அருகடைந்து
அதனுள் தன் அல கைநுழைத்தே
மேவும் நீர்எட் டாமல் நொந்து
மீண்டது செய்யும் வகை நினைத்தே

4. சிறுகல் சல்லி களைமிகவே
   தேடி ஒவ்வொன் றுய்எடுத்து
குறுகிச் சாடியின் உள் இடவே
   குறைநீர் உயர்ந்தது வாய் அடுத்து

5. கண்டே அந்தக் கருங்காகம்
   களித்தே "கா, கா" எனக் கூவிக்
கொண்டே தணியத் தன் தாகம்
   குடித்துப் பறந்த தேதாவி.

பயிற்சி: கோடிட்ட இடத்தில் பொருத்தமான வார்த்தைகளைப் போட்டு வாக்கியத்தை முடித்தெழுது.

1. காகம் வேகமாகப் ——— சென்றது.
2. ஒரு மண் ———க் கண்டது.
3. அதனுள் தன் ——— நுழைத்தது.
4. சாடிக்குள் சிறு ———ப் போட்டது.
5. உடனே ———மேலே வந்தது.
6. காகம் நீர் ———

## பாடம் 26.

குறிப்பு : மௌனமாகப் படித்துக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை எழுது.

# பேராசை

பாலு என்று ஒரு நாய் இருந்தது. ஒரு நாள் அதற்கு ஒரு மாமிசத் துண்டு கிடைத்தது. அதை வாயில் வைத்துக்கொண்டு ஒரு வாய்க்கால் பாலத்தின் மேல் நடந்து சென்றது. வாய்க்காலில் தண்ணீர் வேகமாக ஓடினது. நாய் குனிந்து பார்த்தது. தண்ணீருக்குள் அதன் நிழல் தெரிந்தது. அது தன்னுடைய நிழல் என்பதை அந்த நாய் தெரிந்து கொள்ளவில்லை. வேறு ஒரு நாய் மாமிசத் துண்டை வாயில் வைத்துக் கொண்டு அங்கே இருந்ததாக நினைத்தது.

அந்த நாயுடன் சண்டை போட்டு அந்தத் துண்டையும் பிடுங்கிக் கொள்ள எண்ணியது. ஆகையால் குரைப்பதற்காக வாயைத் திறந்தது. மாமிசத் துண்டு தண்ணீரில் விழுந்தது. நாய் ஏமாந்து போயிற்று.

### கேள்விகள்:

1. நாயின் பெயர் என்ன ?
2. அதன் வாயில் என்ன இருந்தது ?
3. அது எங்கே நடந்தது ?
4. வாய்க்காலில் தண்ணீர் இருந்ததா ?
5. நாய் தண்ணீருக்குள் பார்த்தது என்ன ?

6. உடனே நாய் என்ன நினைத்தது?
7. நாயின் வாயிலிருந்த மாமிசத்துண்டு தண்ணீரில் விழுந்தது எப்படி?

பயிற்சி: இருக்கிறது—இருந்தது.

1. எங்கள் வீட்டில் ஒரு நாய் இருக்கிறது.
2. ராமன் வீட்டில் ஒரு நாய் இருந்தது.

1. இப்பொழுது ஒரு நாய் நடந்து செல்கிறது.
2. நேற்று ஒரு நாய் நடந்து —.

1. தண்ணீருக்குள் நிழல் தெரிகிறது.
2. தண்ணீருக்குள் நிழல் —.

1. குரைப்பதற்காக வாயைத் —.
2. குரைப்பதற்காக வாயைத் திறந்தது.

பாடம் 27.

# மிருகங்கள்



இது ஒரு எருது. உழவர் இதை விருப்பத்துடன் வளர்க்கிறார்கள். அது அவர்களுக்கு நிலத்தை உழுவதற்கும், கபிலை இழுக்கவும், வண்டி இழுக்கவும் உதவுகிறது. இது வைக்கோல், புல், பருத்திக் கொட்டை முதலியவற்றை உண்ணும். கழுநீரை இது ஆவலுடன் குடிக்கும்.



நாய் வீட்டில் வளரும் பிராணி. பலவகை நாய்கள் உண்டு. சோறும் மாமிசமும் அதற்கு மிக்க விருப்பம். மோப்பம் பிடிப்பதில் அதற்கு நிகர் கிடையாது. வீட்டை நன்றாய்க் காவல் செய்யும். வேட்டைக்காரர்கள் நாயை வேட்டை ஆடுவதற்கு உபயோகிக்கிறார்கள். நாய் நன்றியுள்ள பிராணி. அது வளர்ப்பவரைக் கண்டால் வாலை ஆட்டும்.



ஆடு ஒரு சாதுவான மிருகம். இது புல், பூண்டு, தழைகளைத் தின்னும். ஆட்டின் உரோமம் கம்பளி செய்ய உதவுகிறது. இது பசுவைப் போலப் பால் கொடுக்கும். ஆட்டின் தோலைப் பதனிட்டு உபயோகிக்கிறார்கள்



இது ஒரு பூனை. பூனை வீடுகளில் வசிக்கும் ஒரு பிராணி. நாம் கொடுக்கும் பால், சோறு முதலியவற்றைத் தின்னும். எலியைப் பிடித்துத் தின்னுவதில் பூனைக்கு அதிக ஆசை. பூனைகளில் பலவகை உண்டு.

கேள்விகள் :

1. எருது உண்ணும் உணவு என்ன?
2. எருது நமக்கு எவ்விதம் உபயோகப்படுகிறது?
3. நாயை நாம் ஏன் வளர்க்கிறோம்?
4. ஆடு நமக்கு என்ன தருகிறது?
5. பூனையை நாம் ஏன் வளர்க்கிறோம்?

பாடம் 28.



# பருத்திச் செடி சொன்ன கதை

கோடை காலத்தில் ஒருநாள் நல்ல மழை பெய்தது. உழவன் உழுது என்னை விதைத்தான். சில தினங்களில் நான் முளைத்து வெளிக் கிளம்பினேன். அப்பொழுது எனக்கு இரண்டு இலைகள்தான் இருந்தன.

பெண்கள் என்பக்கத்தில் வளர்ந்த களைகளைப் பிடுங்கினார்கள். சூரிய வெப்பம் எனக்கு மிகவும் விருப்பம். நான் நன்றாக வளர்ந்து மூன்று மாதங்களில் பூத்துக் காய்த்தேன். சூரிய வெப்பத்தில் என் காய்கள் வெடித்தன.

அச்சமயம் பெண்கள் கூட்டம் கூட்டமாக வந்து நெற்றுகளிலிருந்து என்னைப் பிரித்து எடுத்தார்கள். அப்பொழுது என்னைச் 'சுளை' என்று சொல்லு

வார்கள். பிறகு மூட்டைகளாகக் கட்டி என்னை ஆலைக்காரர்களிடம் விற்று விட்டார்கள். அவர்கள் பஞ்சைத் தனியே பிரித்து எடுத்து, அதை நூலாக நூற்ருர்கள்.

நெசவுக்காரர் நூலை வாங்கித் தறியிலிட்டு, வேட்டி, சேலை முதலியன நெய்தார்கள். நெசவுக்காரரிடம் இருந்து துணி வாங்கி நீங்கள் அதைச் சட்டைகளாக்கி அணிகிறீர்கள்.

**கேள்விகள்:**

1. எத்தனை மாதங்களில் பருத்திச் செடி பூத்துக் காய்க்கிறது?
2. நெற்றிலிருந்து வெளிப்பட்ட பஞ்சுக்கு என்ன பெயர்?
3. நெசவுக்காரர் என்ன செய்கிருர்கள்?

பாடம் 29.



# ஒரு விடுகவி

பேச்சில்லை, மூச்சுவிடுவான்.
உணவில்லை, ஊரைச் சுமப்பான்.
உயிரில்லை, ஓடித் திரிவான்.
சோறில்லை, நீரைக் குடிப்பான்.
கண்ணில்லை, காதம் பறப்பான்.
குரல் இல்லை, கூச்சலிடுவான்.
கண்டதுண்டமாய்க் கரியைத் தின்பான்.
மழையில் நனைவான், வெயிலில் காய்வான்.
நோய் இல்லை, மருந்தும் தின்னுன். எப்படிச்
சொன்னுலும் அப்படிப் போவான்.
அவன் யார்?

## பாடம் 30.

மௌனமாகப் படித்து அதன்படி செய்.

ஆசிரியருக்குக் குறிப்பு: கீழே கொடுக்கப் பட்டிருக்கும் 10 கட்டளைகளையும் அட்டைகளில் எழுதி வைத்துக்கொண்டு, ஒரு அட்டையை ஒரு பையனிடம் காட்ட வேண்டும். அவன் அதை மனதிற்குள் அர்த்தம் பண்ணிக்கொண்டு அதன்படி செய்ய வேண்டும். இன்னொரு பையனிடம் இன்னொரு அட்டையைக் காட்டவேண்டும். அவன் அந்த அட்டையில் எழுதப்பட்டிருப்பதை மௌனமாக வாசித்து அதன்படி செய்ய வேண்டும்.

1. எழுந்து நில்
2. புத்தகத்தைத் திற.
3. புத்தகத்தை மூடு.
4. சன்னல் அருகே போ.
5. சன்னல் கதவை மூடு.
6. ஐந்தாம் பாடத்தை வாசி.
7. உன் வலது கையை நீட்டு.
8. கரும்பலகையைச் சுத்தம் செய்.
9. உன் புத்தகங்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டு.
10. தரையில் உட்கார்.

## பாடம் 31.

மௌனமாகப் படித்து விடை எழுது.

1. இன்று காலையில் நீ எத்தனை மணிக்கு எழுந்தாய்?
2. உன் பெயர் என்ன?
3. உன் தகப்பனுரின் தொழில் என்ன?
4. நீ படிக்கும் பள்ளிக்கூடத்தின் பெயர் என்ன?
5. இன்று காலையில் நீ என்ன சாப்பிட்டாய்?
6. நீ பார்த்திருக்கும் மூன்று மிருகங்களின் பெயரை எழுது.
7. உங்கள் வீட்டில் பசு இருக்கிறதா?
8. நீ இரவில் படிக்கிருயா?
9. உனக்குப் பிரியமான பண்டிகை எது?
10. மூன்று மரங்களின் பெயரை எழுது.

பாடம் 32



## உரை யாடல்

கடைக்காரன் : தம்பி, உனக்கு என்ன வேண்டும்?

மாணவன் : எனக்கு ஒரு பேனுக்கட்டை வேண்டும்.

கடை : நல்லது, மரக்கட்டையால் செய்தது வேண்டுமா? தந்தத்தால் செய்தது வேண்டுமா?

மாண : எனக்குத் தந்தத்தால் செய்த பேனு வேண்டும்.

கடை : அதன் விலை மூன்று அணு.

மாண : விலை அதிகமாக இருக்கிறதே!

கடை : (வேறொன்றைக் காட்டி) இந்தப் பேனு இரண்டணுத்தான். குறைந்த

விலைக்கு வேண்டுமானால் இதை வாங்கிக் கொள்ளலாம்.

மாண : அந்தப் பேனாவையே வாங்கிக்கொள்கிறேன்.

கடை : வேறு என்ன வேண்டும்?

மாண : எனக்கு இரண்டாம் வகுப்புப் பாடப் புத்தகமும் ஒன்று வேண்டும்.

கடை : அதன் விலை ஐந்தரையணுத்தான்.

மாண : எனக்கு அந்தப் புஸ்தகத்தைக் கொடுங்கள். நான் எவ்வளவு கொடுக்க வேண்டும்?

கடை : எல்லாம் சேர்த்து எட்டரைஅணுக் கொடுக்க வேண்டும்.

மாண : என்னிடம் சில்லரை இல்லை. ஒரு ரூபாய் இருக்கிறது.

கடை : சரி, கொடு. இதோ, மீதி ஏழரை அணு.

கேள்விகள்.

1. மாணவன் எங்கே போனான்?
2. அவன் என்ன வாங்கினான்?
3. அவன் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டியது எவ்வளவு?

பாடம் 33.

# வாரத்தின் நாட்கள்

நான் பிறந்தது ஞாயிற்றுக் கிழமை
என் தம்பி பிறந்தது திங்கட் கிழமை
என் தங்கை பிறந்தது செவ்வாய்க் கிழமை
என் அண்ணன் பிறந்தது புதன் கிழமை
என் அக்காள் பிறந்தது வியாழக் கிழமை
என் அன்னை பிறந்தது வெள்ளிக் கிழமை
என் அப்பா பிறந்தது சனிக் கிழமை

# மாதங்களின் பெயர்கள்

| | |
|---|---|
| சித்திரை | ஐப்பசி |
| வைகாசி | கார்த்திகை |
| ஆனி | மார்கழி |
| ஆடி | தை |
| ஆவணி | மாசி |
| புரட்டாசி | பங்குனி |

**கேள்விகள்.**

1. வாரத்தின் நாட்கள் எவை?
2. இன்று என்ன கிழமை?
3. நேற்று என்ன கிழமை?
4. இந்த மாதத்தின் பெயர் என்ன?

---

பாடம் 34.

# வட மொழிகள்



இது ரோஜா புஷ்பம். இது வாசனையாக இருக்கும். இதிலிருந்து பன்னீர் செய்கிறார்கள்.



இது ஸர்ப்பம். ஸர்ப்பம் விஷமுள்ள ஜந்து. அது கடித்தால் மரணம் நேரிடும்.



இது திராக்ஷைத் தோட்டம். திராக்ஷைப் பழத்தைப் பிழிந்து ரஸம் எடுக்கலாம். திராக்ஷைப் பழ ரஸத்தை சிலர் பானம் பண்ணுகிறார்கள்.



இது ஹாரம். ரோஜாப் புஷ்பங்களைக் கொண்டு ஹாரம் செய்வதுண்டு.

பாடம் 35.



## ஜவஹர்லால் நேரு

இந்தப் படத்தில் இருப்பவர் யார் தெரியுமா? இவர்தான் ஜவஹர்லால் நேரு. இவர் நமது தேசப் பிரதம மந்திரி. இவர் மிகவும் நல்லவர். இவர் நமது நாட்டுக்காக ஓய்வில்லாமல் உழைக்கிறார். இவருக்கு நாட்டுப் பற்று மிகுதி.

இவர் அலகபாத் நகரில் ஆனந்த பவனம் என்னும் மாளிகையில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் மோதிலால் நேரு. அவர் வக்கீல் தொழில் செய்து வந்தார். ஜவஹர் செல்வத்திற் பிறந்து செல்வமாக வளர்ந்து வந்தார்.

தனது பதினைந்தாம் வயதில் இவர் இங்கிலாந்து சென்று, சட்டக்கலை பயின்ருர். பின் நமது நாட்டிற்கு வந்து நற்குணவதியான கமலா அம்மை யாரை மணந்தார். தமது தந்தையைப் போலவே இவரும் வக்கீல் தொழிலை மேற்கொண்டார்.

நமது நாட்டிற்காக உழைக்க இவர் தீர்மானித் தார். அதற்காக இவர் வக்கீல் தொழிலை விட்டார். சுகவாழ்வை விட்டார். காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து உழைத்தார்.

ஆங்கிலேயர் ஆட்சி ஒழிய வேண்டுமென்று இவர் அரும்பாடு பட்டார். இவ்வாறு இவர் பாடுகளை அனுபவித்துக்கொண்டு இருக்கையில், இவருடைய மனைவியார், கமலா நேரு அம்மையார் இறந்து போனர். எனினும், இவர் மனந்தளராது நமக்காக உழைத்து வருகிருர். கடவுள் இவரைக் காப்பாராக.

**கேள்விகள்.**

1. ஜவஹர்லால் நேருவின் தந்தை யார்?
2. இவர் எங்கே பிறந்தார்?
3. இவரின் தொழில் என்ன?
4. இவர் நாட்டிற்காக உழைக்கத் தீர்மானித்தபொழுது இவர் செய்ததென்ன?

**முடித்தெழுது :—**

1. ஜவஹர்லால் நமது தேசப் ——— மந்திரி.
2. ஜவஹர் ——— பிறந்து ——— வளர்ந்து வந்தார்.
3. ஜவஹர்லால் கமலா அம்மையாரை ———.
4. ஆங்கிலேயர் ——— ஒழிய வேண்டுமென்று இவர் ——— பட்டார்.

பாடம் 36.

## பயிர்த்தொழில் பழமொழிகள்

1. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.
2. வைகாசி மழை வாழை பெருகும்.
3. அகல உழுவதைவிட ஆழ உழு.
4. ஆடிப் பட்டம் தேடி விதை.
5. ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்.
6. இளைத்தவன் எள்ளை விதைப்பான்.
7. கடலை விதைப்பது கரிசல் நிலத்தில்.
8. பசித்தவன் பயிரை விதைப்பான்.
9. பருவத்தே பயிர் செய்.

---

# ஆத்திச் சூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயமிட்டு உண்.
10. ஒப்புர ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.

# உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
5. போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
8. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
9. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்.
10. கற்றவரை ஒரு நாளும் மறக்கவேண்டாம்.
11. எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்.
12. தெய்வத்தை ஒரு நாளும் மறக்கவேண்டாம்.

# எங்கள் நாடு

1. செந்தமிழ் பயில்வதும்
   செந்நெல் விளைவதும் — எங்கள் நாடு

   சந்தனம் வளர்வதும்
   சாகரம் சூழ்வதும் — எங்கள் நாடு

2. முத்துப் பிறப்பதும்
   முத்தமிழ் உடையதும் — எங்கள் நாடு

   சத்தியம் மிக்கதும்
   தருமம் தழைப்பதும் — எங்கள் நாடு

3. வானம் பொழிவதும்
   வளங்கள் மிகுவதும் — எங்கள் நாடு

   கானகம் சூழ்ந்ததும்
   காட்சிகள் நிறைந்ததும் — எங்கள் நாடு

4. கல்வி சிறந்ததும்
   கற்றோர் நிறைந்ததும் — எங்கள் நாடு

   செல்வம் மிகுந்ததும்
   தேசம் புகழ்வதும் — எங்கள் நாடு

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

# இன்ப வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

Bh 5

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

*Editor :*

எஸ். தேவ இரக்கம், எம். ஏ., எல். டி.,

*(Director, Publication Dept.)*
*(Diocesan Book Depot, Palayamkottai)*

1819
3

வெளியிடுவோர்:

திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ

பாளையங்கோட்டை

பதிப்புரிமை] 1954 [விலை 0—10—0

First Edition 1950
Second Edition 1951
Third Edition 1952
Fourth Edition 1954

RB. 6/3-54

54609
26C211

Printed at the Hilal Press, Tirunelveli—1954.

# முன்னுரை

கைத்தொழில் வல்லார் தமது முதிர்ந்த அறிவையும், அநுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு, தத்தம் தொழிலை எளிதிலும், விரைவிலும் நடத்தப் பல புதிய முறைகளைக் கண்டுபிடிக்கின்றனர். பின்னர், அம்முறைகளை மேற்கொண்டு பயனடைகின்றனர். அவ்வாறே, கல்வித் துறையிலும் அநுபவமும், அறிவும் முதிர்ந்த அறிஞர் பலரது முயற்சியால், பழைய முறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் இருவென இருந்து, அவர் சொல்லென, நெடுங்கணக்கை வரிசைப்படி ஒப்புவிக்கும் முறை நம் நாட்டில் நெடுநாளாக உலவிய பழைய முறை. கல்வி முறையில் மனோதத்துவ நிபுணரின் புத்தப் புதிய ஆராய்ச்சிகள் புகுந்து, பழைய முறையில் பல மாறுதல்களை உண்டாக்கி விட்டன. அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தைப் படிப்பவருக்கு இவ்வுண்மை எளிதில் புலனாகும்.

இப்புத்தக வரிசை, புதிய பாடத்திட்டத்தை அடிப் படையாகக் கொண்டு மாணவருக்கு விருந்தாகவும் ஆசிரியருக்கு உதவியாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி | 1 |
| 2. | தமிழ் மொழி வாழ்த்து | 4 |
| 3. | தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் | 5 |
| 4. | காய் கறிகள் | 9 |
| 5. | பாபர் சக்கரவர்த்தி | 13 |
| 6. | கடிகாரம் | 16 |
| 7. | சாலமோன் மன்னரும், எறும்புகளும் | 20 |
| 8. | இரும்பு | 23 |
| 9. | ஆறு | 27 |
| 10. | முத்துக் குளித்தல் | 28 |
| 11. | ஜெம்ஸெட்ஜி டாட்டா | 32 |
| 12. | தொழில் | 36 |
| 13. | தளபதி வாஷிங்டன் | 37 |
| 14. | இளந் தமிழனுக்கு | 39 |
| 15. | ரேடியோ நிலையம் | 40 |
| 16. | பிளாரன்ஸ் நைட்டிங்கேல் | 44 |
| 17. | மகாத்மாவின் குணாதிசயங்கள் | 49 |
| 18. | செய்தித்தாள் | 52 |
| 19. | பத்திரிகைச் செய்தி | 56 |
| 20. | வீர கட்டபொம்மு | 58 |
| 21. | பண்டிகைகள் | 62 |
| 22. | ஒற்றுமை | 66 |
| 23. | இயேசுநாதரின் பொன்மொழிகள் | 67 |
| 24. | நிறுத்தக் குறிகள் | 70 |
| 25. | வீர சிவாஜி | 72 |
| 26. | தேயிலை | 75 |
| 27. | நெசவு | 78 |
| 28. | மாதிரிக் கடிதங்கள் | 80 |
| 29. | படம் பார்த்துக் கதை சொல்லல் | 85 |
| 30. | செய்யுட் பகுதி | 87 |

# 1. தமிழ் மொழி

உலகின் வெவ்வேறு பாகங்களிலும் வசிப்பவர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். நம்முடைய நாடு, வடக்கே வேங்கடமும், கிழக்கே வங்காள குடாக் கடலும், தெற்கே குமரிமுனையும், மேற்கே அரபிக் கடலும், ஆகிய நான்கு எல்லைகட் குட்பட்ட நிலப்பரப்பு ஆகும். இதனைத் தமிழ் நாடு என்பர். இந் நாட்டினர் பேசும் மொழி தமிழ் மொழி எனப்படும்.

தமிழ் மொழியே நமது தாய்மொழி. தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழ் மொழி மிகவும் பழமை யானது. தமிழ் முனிவர் என்று சிறப்பாகப் பாராட்டப்படும் அகத்திய முனிவர் பாண்டிய நாட்டிலுள்ள பொதிய மலையில் வீற்றிருந்து தமிழ் மொழியை வளர்த்தார். தமிழ் நாட்டு வேந்தர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சியில் மிகவும் கவனம் செலுத்தி வந்தார்கள். அவர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தனர். பாண்டிய நாட்டின் தலை நகராகிய மதுரையில் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டிருந்தது. தமிழகத்தின் பல பாகங்களிலும் உள்ள தமிழ்ப் புலவர்கள் அச் சங்கத்தில் கூடிப் பல நூல்களை இயற்றினர்கள். அதனல் தமிழ்மொழி வளர்ச்சியடைந்தது.

தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் திருக்குறள் என்னும் சிறந்த நீதி நூலை இயற்றினர். இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் என்னும் அழகிய நூலை இயற்றியுள்ளார். சைவ சமயத்தை வளர்த்து வந்த நாயன்மார்களும், வைணவ சமயத்தைப் பரப்பி வந்த ஆழ்வார்களும் தமிழ் மொழியில் பல அருமையான பாடல்களை இயற்றினர்கள். கம்பர் என்னும் பெரும் புலவர் இராமாயணத்தைத் தமிழில் பாடினர். வில்லிப்புத்தூரார் பாரதத்தைப் பாட்டுக்களில் அமைத்தார்.

இவ்வாறு பல பெரியார்களுடைய முயற்சியால் தமிழ் மொழி திருந்திய செம்மொழியாக விளங்குகிறது.

தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது; இனிமையும், எளிமையும் கொண்டது; இலக்கியச் சிறப்பு வாய்ந்தது. பிற மொழிகள் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே தமிழ், இலக்கண இலக்கியங்களுடன் சீர் பெற்று விளங்கியது. தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் முதலிய மொழிகளெல்லாம் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவை.

இத்துணைச் சிறப்புடைய தமிழ் மொழியை நாம் திருத்தமாகப் பேசவும் எழுதவும் பழக வேண்டும். தமிழ் மொழியில் உள்ள பழம் பெரும் நூல்களைக் கற்றுணர வேண்டும். நம்முடைய தமிழ் மொழியைத் தாயைப்போல் நேசிக்க வேண்டும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம், நம்முடைய மொழி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு அதனைப் போற்றி வளர்ப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

## பயிற்சிகள்

### I. சொற் பயிற்சி:

வாக்கியத்தில் அமைத்துப் பழக வேண்டிய வார்த்தைகள்:—

| | |
|---|---|
| வெவ்வேறு | புலமை |
| இயற்றினர்கள் | வேந்தர்கள் |
| முனிவர் | தமிழகம் |
| சமயம் | |

### II. வினாக்கள்:

1. மொழி என்பது யாது?
2. தமிழ் மொழி எங்குப் பேசப்படுகிறது?
3. தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவிய பெரியார் யாவர்?
4. தமிழகத்தின் எல்லைகளைக் கூறு.
5. தமிழ் நூல்களில் சிறந்தவை நான்கின் பெயர்களைக் கூறு.

III. பயிற்சி: பூர்த்தி செய் :—

(1) திருவள்ளுவர் இயற்றிய நூல் ——— எனப்படும்.
(2) கம்பர் ——— தமிழில் இயற்றினர்.
(3) இளங்கோவடிகள் ——— இயற்றினர்.
(4) ——— மகாபாரதத்தை இயற்றினர்.
(5) தமிழ்ச் சங்கத்தில் பல ——— கூடினர்கள்.

IV. இலக்கணம்

1. ழ, ள, ல — இவைகளைச் சரியாக உச்சரி.
2. 'ழ' கரத்தை உடைய ஐந்து சொற்கள் எழுது.
3. எழுத்துக்கள் தனித்து நின்றுவது, சேர்ந்து நின்றுவது பொருளைக் குறிப்பது 'சொல்' எனப் பெயர் பெறும்.

'பூ', 'வா' இவை ஓர் எழுத்தாக நின்று பொருளைத் தந்து சொற்களாயின.

வீடு, நட, கூடினர்கள் இவை ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களோடு கூடிப் பொருளைத்தந்து சொற்களாயின

4. சொற்கள் (1) பெயர்ச்சொல் (2) வினைச்சொல் (3) இடைச்சொல் (4) உரிச்சொல் என நான்கு வகைப் படும். மொழி, புலவர், உள்ளம், இனிமை, இவை பெயர்ச் சொற்கள்.

உதவுகிறது, வளர்த்தார், இயற்றினர்கள், பாடினர் இவை வினைச் சொற்கள்.

தனித்து வராமல் பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் ஒட்டி வருவது இடைச் சொல்.

'சொல்லுக்கு' இதில் 'கு' இடைச்சொல்
'வந்தனர்' அதில் 'அர்' இடைச்சொல்
'அவனும் இவனும்' இதில் 'உம்' இடைச்சொல்

பெயர், வினைகளின் தன்மை அல்லது குணத்தைக் காட்டுவது உரிச்சொல்.

'தலைநகரம்' இதில் 'தலை' பெயர் உரிச்சொல்
'மிகவும் பாடுபட்டனர்'. இதில் 'மிகவும்' வினை உரிச்சொல்.

# 2. தமிழ் மொழி வாழ்த்து

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

— சுப்பிரமணிய பாரதியார்

# 3. தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார்

நம் தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்தில் தேசிய உணர்ச்சியையும் தாய் மொழிப் பற்றையும் பொங்கி எழச்செய்த பெரியாருள் தேசீய கவி சுப்பிரமணிய பாரதியாரும் ஒருவர். இவர் 1882-ஆம் ஆண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள எட்டையாபுரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையாரான சின்னச்சாமி ஐயர், எட்டையாபுரம் ஜமீனில் சமஸ்தான வித்துவானாக இருந்தார். இவருடைய தாயாரான இலட்சுமி



அம்மாள், பாரதியார் ஐந்து வயதுச் சிறுவரா யிருக்கும் போதே மரணம் அடைந்தார். ஆகவே தந்தையாரே தாய் போல் அன்பு காட்டி அவரைப் பராமரித்து வளர்த்து வந்தார். தந்தையார் பாரதிக்கு இளமையிலேயே தமிழ்ப் பயிற்சியளித்து வந்தார். அதன் பயனைப் பாரதியார் ஏழு வயதுச் சிறுவரா யிருக்கும்போதே இனிய தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து இயற்றும் திறமை பெற்றார். இவருடைய கவித் திறத்தைக்கண்ட தமிழ்ப் புலவர் சிலர்

இவருக்குப் 'பாரதி' என்ற பட்டத்தை அளித்தனர். 'பாரதி' என்னும் சொல்லுக்கு சரஸ்வதி என்பது பொருள்.

பாரதியாரின் பதினைந்தாம் ஆண்டில் செல்லம்மாள் என்னும் பெண்மணியை அவருக்கு மணம் செய்து வைத்தனர். அப்பொழுது பாரதியார் திருநெல்வேலி இந்துக் கலாசாலையில் ஐந்தாவது படிவத்தில் படித்துவந்தார். அச் சமயம் பாரதியாரின் தந்தையார் மரணம் அடைந்தார். ஆதரவற்றிருந்த பாரதியார் காசியில் வசித்துவந்த தமது அத்தையாரிடம் போய்ச் சேர்ந்தார். அங்கு அவர் சமஸ்கிருதம் பயின்று அலகாபாத் சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் முதல்வராய்த் தேறினர்.

அங்கு மேலும் தொடர்ந்து படிக்க வசதி யில்லை. எட்டையாபுரம் ஜமீன்தாரின் அழைப்புக் கிணங்கி அங்கே போய் அவருடைய சமஸ்தானத்தில் உத்தியோகத்தில் அமர்ந்தார். அப்பொழுது இவர் அநேக பாடல்களை இயற்றினர்.

பாரதியார் 1904-ம் ஆண்டில் 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியராக அமர்ந்தார். அப்பொழுதே அவருக்கு நாட்டுப் பற்று அதிகமாக இருந்தது. அவருடைய உள்ளம் மலர்ச்சி அடைந்தது. அவர் உணர்ச்சி ததும்பும் கட்டுரைகளை எழுதினர். அவருடைய எளிய, இனிய நடை எல்லார் உள்ளத்தையும் கவர்ந்தது. அவருடைய பாடல்கள் மக்களை விழிப்படையச் செய்தன. அவருடைய பாட்டில், புதிய உணர்ச்சிகளும், புதிய கருத்துக்களும் மலிந்து கிடந்தன. தேசாபிமானம், வீரம், ஒற்றுமை, எளியாரைப் பேணல், பெண் சுதந்திரம், ஆகியவற்றைப் பற்றி இவர் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

அச் சமயத்தில் அரசாங்கத்தார் அடக்குமுறைகளைக் கையாண்டு, பல தேசபக்தர்களைச் சிறையில் அடைத்தனர்.

தமிழ் நாட்டு வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளையும் சிறையி லிடப்பட்டார். பாரதியார் அரசாங்கத்தின் கொடுஞ் செயல்களை வன்மையாகக் கண்டித்தார். அதன் பயனாக அவருக்கும் சிறைவாசம் நேரும் என்று நினைத்துப் புதுச் சேரிக்குச் சென்று, அங்கே பத்து ஆண்டுகள் விலங்கற்ற கைதியாய் வாழ்ந்து உடல் நோயாலும் வறுமையாலும் வாடினார். துன்பம் நிறைந்த இக்காலத்தில்தான் அவர் எண்ணிறந்த நூல்களை இயற்றிக் குவித்தார்.

இவர் 1918-ம் ஆண்டு தாமாகவே புதுச்சேரியிலிருந்து வெளியேறினார். உடல் நலன் குன்றியிருந்தபடியால் கடையத்துக்குச் சென்று சிறிது ஓய்வு எடுத்தார். மறுபடி யும் 1920-ம் ஆண்டு சென்னைக்குச் சென்று 'சுதேச மித்திரன்' பத்திரிகையின் துணையாசிரியராக அமர்ந்தார். நாளடைவில் இவர் தேக பலம் குன்றி, இறுதியில் 1921-ம் ஆண்டு திருவல்லிக்கேணியில் உயிர் துறந்தார்.

தேசாபிமானமும் வீரமும் பொருந்திய இவருடைய பாட்டுகளைப் படித்த தமிழ் மக்கள் இவருடைய உயர்ந்த கருத்துக்களைப் போற்ற ஆரம்பித்தனர். இவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. இவரை 'வரகவி' என்றும் 'தேசிய கவி' என்றும் அழைப்பது பொருத்தமானதே.

### பயிற்சிகள்

**I. சொற்பயிற்சி:**

(a) வாக்கியத்தில் அமைத்துப் பழக வேண்டிய வார்த்தைகள்:—

கவித்திறன், ஆதரவற்ற, உணர்ச்சி ததும்பும், சர்வ கலாசாலை, அடக்குமுறை, எண்ணிறந்த, இயற்றி னர், உடல் நலன்.

(b) எதிர்ப் பதம் கூறு:— பிறந்தார், முதல், துன்பம், பொய்.

**II. வினாக்கள்:**

1. பாரதியார் எங்கே பிறந்தார்?

2. அவர் எப்பொழுது கவி எழுத ஆரம்பித்தார்?
3. பாரதியாருக்கு அப்பெயர் வரக் காரணம் யாது?
4. அவருடைய பாடல்கள் எப்படிப்பட்டவை?
5. அவர் எந்த விஷயங்களைப் பற்றிப் பாடினார்?
6. அவர் புதுச்சேரிக்குப் போகக் காரணம் யாது?

III. இலக்கணப் பயிற்சி:

(a) பெயர்ச் சொற்களை எழுது :—

1. அவருடைய பாட்டில் புதிய உணர்ச்சிகளும், புதிய கருத்துக்களும் மலிந்து கிடக்கின்றன.
2. பாரதியாரின் எளிய, இனிய நடை தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது.
3. அச் சமயத்தில் அரசாங்கத்தார் அடக்குமுறைகளைக் கையாண்டு பல தேசபக்தர்களைச் சிறையிலடைத்தனர்.

(b) சொற்றொடர் :—

'சின்னச்சாமி ஐயர் எட்டையாபுரம் ஜமீனில் சமஸ்தான வித்துவானாக இருந்தார்.' இது கருத்து முடியும்படி அமைந்த ஒரு வாக்கியம். ஏதேனும் ஒரு கருத்து முடியும்படி சொற்கள் தொடர்ந்து வரின் **சொற்றொடர்** அல்லது **வாக்கியம்** எனப்படும்.

ஒவ்வொரு சொற்றொடரிலும் எழுவாயும், பயனிலையும் இருக்கவேண்டும். சில வாக்கியங்களில் செயப்படு பொருளும் இருக்கும்.

'பாரதியார் எண்ணிறந்த நூல்களை இயற்றினார்.' இதில்

பாரதியார்—எழுவாய்
இயற்றினார்—பயனிலை
நூல்களை—செயப்படுபொருள்.

பின் வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கண்டுபிடி.

1. அரசாங்கத்தார் அடக்கு முறைகளைக் கையாண்டனர்.
2. அவருக்கு நாட்டுப்பற்று அதிகமாக இருந்தது.
3. அவருடைய பாடல்கள் மக்களை விழிப்படையச் செய்தன.
4. பாரதியார் அரசாங்கத்தாரின் கொடுஞ்செயல்களை வன்மையாகக் கண்டித்தார்.

# 4. காய் கறிகள்

தானியங்கள், காய்கறிகள், பழங்கள், மாமிசம், பால், தயிர், நெய் ஆகிய உணவுப் பொருள்களை நாம் உண்கிறோம். இவற்றுள் காய்கறிகள் மிகவும் சத்து நிரம்பியவை. காய் கறிகளில் தேக வளர்ச்சிக்கும், சரீர ஆரோக்கியத்திற்கும் வேண்டிய பல சத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

நாம், சாதாரணமாக முருங்கைக்காய், வாழைக்காய், அவரைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய் முதலிய காய்களைச் சாப்பிடுகிறோம். இவைதவிர முள்ளங்கி, சேனை, உருளைக்கிழங்கு முதலிய கிழங்குகளையும், அரைக்கீரை, முளைக்கீரை, முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, முதலிய கீரை களையும் உண்கிறோம்.

காய்கறிகள் பயிரிடுவதற்கு நிலம் செழிப்பானதாக இருக்கவேண்டும். நிலமே செடியின் உணவுக் களஞ்சியம். நிலத்தில் தாதுப் பொருள்கள் இருக்கின்றன. பூமியின் மேல்மண் மனிதனுக்குக் கடவுள் அளித்த பெரிய வரப் பிரசாதம். நிலத்தின் மேற்பரப்பில் சூரிய உஷ்ணம், காற்று முதலிய இயற்கைச் சக்திகளினுல் நல்ல வளம் ஏற்பட்டுள்ளது. ஒரு தோட்டத்திற்கு வேண்டிய நிலம் மென்மையாகவும், வெட்ட வெளியாகவும் இருத்தல் வேண்டும். மணலோடு கூடிய நிலங்களில் வண்டல்களைக் கலந்து பண்படுத்தல் வேண்டும். செடிகளும், மரங்களும் நன்ருய் வளர்ந்து செழிப்பாய் இருக்க வேண்டுமானுல், உழுதல், உரமிடுதல், களைபிடுங்குதல், தண்ணீர் பாய்ச்சுதல், ஆகிய விஷயங்களில் கவனம் செலுத்தல் வேண்டும்.

விதை விதைப்பதற்கு ஏற்றகாலம் ஆடிமாதமேயாகும். ஆகவேதான் 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்னும்

பழமொழி வழங்கி வருகிறது. மழைக் காலத்திற்கு முன் காய்கறிச் செடிகள் நன்றாக வளர்ந்து பூக்க ஆரம்பிக்கும். மழைக்காலத்தில் தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை. பூமியின் இயற்கையான ஈரம் கொண்டே செடிகள் வளர்ந்து பலன் தரும்.

காய்கறிகளில் கீரைவகைகள் தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் ஏற்றவை. அவற்றால், மலச்சிக்கல், வாய்ப்புண் முதலியவை வராமல் தடுக்கலாம்.

தக்காளி, இப்பொழுது நம் நாட்டில் ஏராளமாய்ப் பயிரிடப்படுகிறது. இதில் சத்துப்பொருள் அதிகமாக இருக்கிறது. தக்காளியைக் கத்தரியைப்போலவே பயிரிட லாம். அதைப்போலவே உபயோகிக்கலாம். தக்காளிப் பழரசம் ஆரஞ்சுப் பழரசத்தைப் போலவே சத்து நிரம்பி யுள்ளது. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் கொடுப் பதற்கு ஏற்றது.

ஆகவே, சத்துமிகுந்த காய்கறி வகைகளை நாம் தோட்டங்களிலும், வீட்டின் பின்புறமுள்ள காலி இடங்களிலும், பள்ளிக்கூடத் தோட்டங்களிலும் பயிர் செய்தல் வேண்டும். அது பயன் உள்ள நல்ல பொழுது போக்கும் ஆகும். ஆனால், என்ன செடிகளை எந்தக் காலத்தில், பயிரிடல் வேண்டும், என்ன முறையில் பயிரிடுதல் வேண்டும் என்பனவற்றை முதலில் அறிந்து கொள்ளவேண்டும்.

## பயிற்சிகள்

### I. சொற் பயிற்சி:

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள் :—

| | |
|---|---|
| களஞ்சியம் | வளம் |
| தாதுப் பொருள் | மிருது |
| வரப்பிரசாதம் | வெட்டவெளி |
| தேக ஆரோக்கியம் | |

II. வினுக்கள்:

1. நாம் சாப்பிடும் உணவுப் பதார்த்தங்கள் யாவை?
2. காய்கறி சாப்பிடுவதால் என்ன நன்மை ஏற்படுகிறது?
3. கீரை வகைகளின் குணம் என்ன?
4. தக்காளிப்பழம் ஏன் சிறந்தது?
5. எவ்விதமான பூமி பயிரிட ஏற்றது?

III. இலக்கணப் பயிற்சி: எழுவாய், பயனிலைகளைப் பொருத்திக் கூறுக:—

| | | |
|---|---|---|
| 1. | குழந்தை | பாடினர்கள் |
| 2. | பெண் | ஓடுகின்றன |
| 3. | வீரர்கள் | படித்தாய் |
| 4, | பூனை | எழுதினீர்கள் |
| 5. | எலிகள் | விளையாடினேம் |
| 6. | நான் | பாடுகிறுள் |
| 7. | நீ | போர் புரிகிறுர்கள் |
| 8. | நீங்கள் | சென்றேம் |
| 9. | நாங்கள் | படித்தேன் |
| 10. | அவர்கள் | விளையாடினேம் |
| 11. | நானும் நீயும் | பாய்கின்றது |
| 12. | அவனும் நானும் | அழுகிறது. |

'காய்கறிகள்' என்னும் சொல்லில் ஆரம்பித்து நான்கு வாக்கியங்கள் எழுது:

உதாரணம்: 1. காய்கறிகள் மிகவும் சத்துள்ளவை.
2. காய்கறிகள்...............
3. காய்கறிகள் ...............
4. காய்கறிகள்........ ... ..
5. காய்கறிகள்..... .. ......

தமிழில் உள்ள எழுத்துக்கள் நான்கு வகைப்படும்:

| | | | |
|---|---|---|---|
| அவை: | 1. உயிரெழுத்து | அ முதல் ஔ வரை | 12 |
| | 2. மெய் எழுத்து | க் முதல் ன் வரை | 18 |
| | 3. உயிர்மெய் எழுத்து | பதினெட்டு மெய்யின் மீதும் பன்னிரண்டு உயிரும் தனித்தனியாக ஏற | 216 |
| | 4. ஆயுத எழுத்து | ஃ | 1 |
| | | ஆகமொத்தம் | 247 |

எழுத்துக்கள் ஆகும்.

# 5. பாபர் சக்கரவர்த்தி

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர், நம்முடைய இந்திய தேசத்தின் ஒரு பகுதியை, பாபர் என்னும் கீர்த்தி பெற்ற சக்கரவர்த்தி ஆண்டுவந்தார். 'பாபர்' என்னும் பதத்திற்குச் 'சிங்கம்' என்பதுபொருள். அவர் குடிகளிடம் மிகவும் அன்பு பாராட்டிக் குடிகளுக்கு ஏற்படும் குறைகளைத் தீர விசாரித்து நியாயம் புரிந்து வந்தார்.

பாபர் மாறுவேடம் பூண்டு நகர சோதனை செய்வது வழக்கம். அதனுல், நாட்டில் நடைபெறும் எல்லாக்



காரியங்களையும் நேரில் அறிந்து கொள்வது அவருக்கு முடிந்தது. எளியாரை வலியார் துன்புறுத்த அஞ்சினர்கள். உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்காமல் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து வந்தார்கள். இதனுல், மக்கள் அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் பாபர் சக்கரவர்த்தி சாதாரண மனிதனைப் போல் உடை தரித்துக்கொண்டு, டில்லி நகரின் வீதி

வழியே போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது மதங் கொண்ட யானை யொன்று கட்டு மீறி ஓடிவந்து கொண் டிருந்தது. தெருவிலிருந்த முதியோர், ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவரும் மறைவிடங்களுக்குத் தப்பி யோடினர். அப்படி ஓடுகையில் ஒரு சிறு குழந்தை, கால் இடறிக் கீழே விழுந்துவிட்டது. யானை குழந்தையின் சமீபத்தில் வந்து கொண்டிருந்தது. இரண்டொரு நிமிடத்தில் யானை அக் குழந்தையை மிதித்துக் கொன்றுவிடும் என்று எண்ணி மறைவிலிருந்த மக்கள் அனைவரும், குழந்தையின் கதியை நினைத்து வருந்தினர்.

அச் சமயம், ஒரு வாலிபன் திடீரென்று விரைந்து சென்று கீழே கிடந்த குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு அப்பால் ஓடினான். நல்ல வேளையாகக் குழந்தை உயிர் தப்பியது. கீழே குனிந்த வாலிபனது தலைப்பாகை நழுவி விழுந்தது. என்ன ஆச்சரியம்! தம் உயிரை வெறுத்துக் குழந்தையைக் காப்பாற்றிய வீரன் தங்கள் சக்கரவர்த்தியே என்பதை அனைவரும் கண்டு கொண்டனர். அந் நாட்டுக் குடிகள் யாவரும், அரசர் தங்கள்மீது கொண்டிருந்த அன்பை எண்ணி வாயார வாழ்த்தினர்.

**பயிற்சிகள் :**

**I. சொற் பயிற்சி :—**

(a) வாக்கியங்களில் அமைத்துப் பழக வேண்டிய வார்த்தை கள்:—

| | |
|---|---|
| தீரவிசாரித்து | துன்புறுத்த |
| நியாயம் புரிந்து | கதி |
| மாறுவேடம் பூண்டு | வஞ்சம் |
| வலியார் | கட்டுமீறி |

**எதிர்ப்பதங் கூறு :**

(b) நியாயம், சாத்தியம், சமீபத்தில், எளியோர்.

**II. வினாக்கள் :**

(1) பாபர் என்னும் வார்த்தைக்குப் பொருள் யாது?

(2) பாபர் சக்கரவர்த்தி எவ்வித குணமுடையவர்?

(3) பாபர் ஏன் மாறுவேடம் அணிந்து நகர் சோதனை செய்து வந்தார்?

(4) பாபர் குழந்தையை எவ்வாறு ஆபத்திலிருந்து காப்பாற்றினார்?

(5) மக்கள் அவரை எப்படிக் கண்டு கொண்டனர்?

**இலக்கணம் :**

| | | | | |
|---|---|---|---|---|
| அப்பொழுது | = | அ | + | பொழுது |
| அச்சமயம் | = | அ | + | சமயம் |
| இக்குழந்தை | = | இ | + | குழந்தை |
| இந்நாடு | = | இ | + | நாடு |

அப்பொழுது, அச்சமயம், இந்நாடு, இக்குழந்தை, என்பனவற்றின் முன் அ, இ, என்னும் எழுத்துக்கள் சேர்ந்துள்ளன. அவை சுட்டிக் காட்டுகின்றன. ஆகவே, அ, இ, என்ற இரண்டும் சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

ஆனால், அரசர் என்னும் வார்த்தையில் 'அ' சுட்டெழுத்து அன்று.

# 6. கடிகாரம்

முற்காலத்தில் மக்கள் பகலில் சூரியனுடைய நிழலைக் கொண்டும், இரவில் நக்ஷத்திரங்களைக் கொண்டும் நேரத்தை அறிந்து கொண்டனர். நாளடைவில் நேரத்தை அறிவதற்குச் சிற்சில கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. தற்காலத்தில் கடிகாரம் என்னும் கருவி காலத்தை அறியப் பெரிதும் பயன்படுகிறது.




ஓர் இரவும் ஒரு பகலும் கொண்டது ஒரு நாள் எனப்படும். ஒரு நாள் இருபத்திநான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவும் ஒரு மணி எனப்படும். பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரமும், இரவுக்குப் பன்னிரண்டு மணி நேரமும் உண்டு. ஒரு மணி நேரத்தை அறுபது பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிரிவும் ஒரு நிமிஷம் ஆகும். நிமிஷத்தை அறுபது பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவையும் விநாடி என்று அழைக்கிறோம். கடிகாரத்தின் படத்தைப் பாருங்கள்.

அதன் முகப்பு வட்டவடிவமாக இருக்கிறது. அதன் ஓரத்தில் ஒன்றுமுதல் பன்னிரண்டு வரை எண்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. வட்டத்தின் நடுவில் இரண்டு முள்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று பெரியது, மற்றொன்று சிறியது. பெரிய முள் ஒரு எண்ணிலிருந்து மற்றொரு எண்ணுக்கு வர ஐந்து நிமிஷங்கள் செல்லும். சிறிய முள் ஒரு எண்ணிலிருந்து மற்றொரு எண்ணுக்குச் செல்ல ஒரு மணி நேரம் ஆகிறது. சிறியமுள் இருக்கும் இடத்தைக் கொண்டு மணியையும், பெரிய முள் இருக்கும் இடத்தைக் கொண்டு நிமிஷங்களையும் கணக்கிடுகிறோம்.

கடிகாரத்தின் அடிப்பாகத்தில் ஒரு கனத்த வட்டமான பித்தளைத் தகடு ஆடிக்கொண்டிருக்கிறது. அது 'பெண்டுலம்' எனப்படும். அது ஆடுவதினால்தான் கடிகாரத்தின் இயந்திரம் அசைகிறது. அதனால் முள்கள் நகருகின்றன.

சில கடிகாரங்களில் வினாடி முள் என்ற மூன்றாம் முள்ளும் இருக்கும். அந்த முள் அறுபது வினாடிகள் நகரும்பொழுது, நிமிஷ முள் ஒரு நிமிஷம் நகரும்.

கடிகாரங்கள் பலவகைப்படும். அவை, சுவரில் மாட்டும் கடிகாரம், சட்டைப்பையில் வைக்கும் கடிகாரம், கையில் கட்டிக்கொள்ளும் கடிகாரம் என்பன. கடிகாரத்தின் இயந்திரம் எஃகினால் செய்யப்படுகிறது. வெளிக்கூடு, மரம் அல்லது உருக்கு, வெள்ளி, தங்கம் முதலிய உலோகங்களால் செய்யப்படுகிறது. கடிகாரத்தின் உறுதிக்கும், வேலைப் பாட்டிற்கும் தகுந்தபடி அதன் விலை வித்தியாசப்படும்.

சுவிட்சர்லாந்து, ஜெர்மனி முதலிய மேனாடுகளும், ஜப்பான் நாடும் கடிகாரம் செய்வதில் பெயர்பெற்றவை. அவைகளுள் சுவிட்சர்லாந்து கடிகாரங்களே சிறந்தவைக ளென உலகமெங்கும் கருதப்படுகின்றன.

## பயிற்சிகள்

### I. சொற்பயிற்சி:

வாக்கியத்தில் அமைத்துப் பழக வேண்டிய வார்த்தைகள்:
முற்காலம், நாளடைவில், தற்காலத்தில், வேலைப்பாடு, முதன்மையானவை, பயன்பட்டு, வித்தியாசம், கருதப்படுகின்றன.

### II. கேள்விகள்:

1. முற்காலத்தில் மக்கள் எவ்வாறு நேரத்தை அறிந்து கொண்டனர்?
2. ஒருநாள் எத்தனை பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது?
3. எத்தனை வினாடிகள் கொண்டது ஒரு நிமிஷம்?
4. கடிகாரம் செய்வதில் பெயர் பெற்ற நாடுகள் யாவை?
5. கடிகாரத்தில் சில வகைகளைக் கூறு.

### III. பயிற்சி:

பின்வரும் வாக்கியங்களை இரண்டிரண்டாகப் பிரித்தெழுதுக:—

1. முற்காலத்தில் மக்கள் பகலில் சூரியனுடைய நிழலைக் கொண்டும், இரவில் நக்ஷத்திரங்களைக் கொண்டும் நேரத்தை அறிந்துகொண்டனர்.
2. பெரிய முள் இருக்கும் இடத்தைக்கொண்டு நிமிஷங்களையும், சிறிய முள் இருக்கும் இடத்தைக் கொண்டு மணியையும் கணக்கிடுகிறோம்.
3. சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, முதலிய மேனாடுகளும் ஜப்பான் நாடும் கடிகாரம் செய்வதில் பெயர் பெற்றவை.

### IV. இலக்கணம்:

பெயர்ச்சொற்களை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப் பெயர், தொழிற்பெயர், என்று ஆறு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் (உ-ம்) நாற்காலி.

2. இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் (உ-ம்) பாளையங் கோட்டை.

3. காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் (உ-ம்) காலை.

4. உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் (உ-ம்) தலை.

5. குணத்தைக் குறிக்கும் பெயர் பண்புப் பெயர் (உ-ம்) துவர்ப்பு.

6. தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் (உ-ம்) படித்தல்

பயிற்சி:— இப்பாடத்திலிருந்து பன்னிரண்டு பெயர்ச் சொற்களைப் பொறுக்கி எடுத்து அவை ஒவ்வொன்றும் எவ்வகையைச் சேர்ந்தன என்று எழுதவும்.

# 7. சாலமோன் மன்னரும் எறும்புகளும்

பாலஸ்தினத்தை ஆண்டுவந்த சாலமோன் மன்னர் ஒருநாள் தமது மந்திரி, பிரதானிகள் புடைசூழக் குதிரை மீதமர்ந்து, ஜெருசலம் நகரின் வெளிப்புறத்தில் பவனி வந்துகொண்டிருந்தார். ஷீபா நாட்டரசியும் மன்னரின் அருகில் மற்றொரு குதிரையின்மேல் சவாரி செய்துகொண்டு வந்தாள். நடுப்பாதையில் ஒரு எறும்புப் புற்று இருந்தது. ஆயிரக் கணக்கான எறும்புகள் புற்றிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தன. மன்னர் குதிரையை நிறுத்தினர். ஷீபா இராணியாரும், மற்றவர்களும் தத்தம் குதிரைகளி னின்றும் இறங்கி நின்றனர். ஷீபா இராணியார் மன்னரை நோக்கி "அரசே, தாங்கள் ஏன் குதிரையினின்று இறங்கிக், கால்நடையாகச் செல்லுகிறீர்கள்?" என்று வினவினள். மன்னர், பாதையின் நடுவிலிருந்த எறும்புப் புற்றையும், அதனின்றும் வெளி வந்துகொண்டிருந்த எறும்புக் கூட்டத் தையும் சுட்டிக் காட்டினர். "எறும்புகள் தங்களுக்குள் என்ன சொல்லிக்கொள்ளுகின்றன தெரியுமா? இதோ சாலமோன் மன்னர் தமது பரிவாரங்களுடன் வருகிறார். மக்கள் அவரை மதியூகி என்றழைக்கின்றனர். ஆனல், அவருடைய குதிரையின் காலடியில் நாம் மிதிபட்டு நசுக்கப் படுவது திண்ணம் என்று கூறிக்கொண்டிருக்கின்றன" என்று கூறினர்.

இராணியார், "உமக்கு அது எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

அரசர், "எனக்கு உலகிலுள்ள எல்லாப் பிராணிகளின் பாஷையும் தெரியும்" என்று கூறினர்.

இராணியார், "என்ன! இந்தச் சிறு பிராணிகள் உம்மைப்பற்றி முணுமுணுப்பது சரியா? உமது காலடியில் மிதிபட்டுச் சாவதே ஒரு பெருமையல்லவா?" என்று கேட்டாள்.

சாலமோன் மன்னர், "பலசாலிகளும் புத்திசாலிகளும் தம்மிலும் பலம் குறைந்தவர்களைக் காப்பாற்றுவது கடமை யாகும்" என்று கூறிவிட்டு எறும்புப் புற்றைக் கடந்து அப்பால் சென்றார்.

ஷீபா இராணியார் அரசரின் பெருந்தன்மையையும் மதிநுட்பத்தையும் கண்டு வியந்து, "எந்த நாட்டில் அரசர் புகழுரைக்குமட்டும் செவி சாய்க்காமல், ஏழைகளின் குறை களைக் கவனிக்கிறாரோ அந்த நாடே சிறந்தது". என்று உரைத்தாள்.

### பயிற்சிகள்

**I. சொற் பயிற்சி:**

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்:

| | |
|---|---|
| பிரதானிகள் | புடைசூழ |
| பவனி வருதல் | புகழுரை |
| மதியூகி | செவிசாய்த்தல் |
| மதிநுட்பம் | பெருந்தன்மை |
| பரிவாரம் | வியந்தார் |

**II. கேள்விகள்:**

1. சாலமோன் மன்னர் குதிரையை ஏன் நிறுத்தினர்?
2. ஷீபா இராணியார் அவரிடம் வினவியது யாது?
3. எறும்புகள் கூறியது யாது ?
4. ஷீபா இராணியார் எறும்புகளைப்பற்றி யாது கூறினள் ?
5. சாலமோன் மன்னர் அதற்குக் கூறிய மறுமொழி யாது ?
6. எத்தகைய நாட்டு மக்கள் சந்தோஷமாயிருப்பார்கள்?

**III. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்காக எழுது:**

1 பவனி வந்துகொண்டிருந்தார் நகரின் வெளிப்புறத்தில் சாலமோன் மன்னர் ஒருநாள் ஜெருசலம்.

2. இருந்தது நடைப்பாதையில் ஒரு எறும்புப் புற்று.

3. எறும்புகள் புற்றிலிருந்து ஆயிரக் கணக்கான வந்து கொண்டிருந்தன வெளியே

4. அழைக்கின்றனர் மதியூகி அவரை மக்கள் என்று.

5. தெரியும் பிராணிகளின் எனக்கு உலகிலுள்ள எல்லாப் பாஷையும்.

6. பெருமையல்லவா காலடியில் உமது மிதிபட்டுச் சாவதே ஒரு.

IV. இலக்கணம் :

1. ஒரு சொல்லின் கடையெழுத்தும் அதனை அடுத்து வரும் மற்றொரு சொல்லின் முதல் எழுத்தும் ஒன்று சேருவது சந்தி ஆகும்.

2. சந்தி :- இயல்பு, விகாரம் என இருவகைப்படும்.

சிறு + பிராணிகள் = சிறு பிராணிகள்
மதி + நுட்பம் = மதி நுட்பம்

இவ்விரு வார்த்தைகளிலும் சந்தியால் எழுத்துக்கள் மாறுதல் அடையவில்லை. இது இயல்புச் சந்தி எனப்படும்.

3. கால் + அடி = காலடி

இதில் உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் ஒன்றுசேர்ந்து இயல்புச் சந்தி ஆகிறது.

4. சந்தியில் எழுத்துக்கள் தோன்றியும், திரிந்தும், கெட்டும் வருவது **விகாரம்** ஆகும்.

(1) நடு + பாதை = நடுப்பாதை
எறும்பு + கூட்டம் = எறும்புக்கூட்டம் } தோன்றல்

(2) ஆயிரம் + கணக்கான = ஆயிரக்கணக்கான
நான்கு + நிலம் = நானிலம் } திரிதல்

(3) மரம் + வேர் = மரவேர்
தெய்வம் + வணக்கம் = தெய்வ வணக்கம் } கெடுதல்

பின்வரும் சொற்களைச் சந்தி சேர்த்து எழுதவும் :

1. அந்த + குதிரை
2. வாழை + பழம்
3. மரம் + வளர்ந்தது
4. மயில் + இறகு
5. பெரிய + கோவில்
6. இந்த + பை
7. கால் + ஆள்
8. கால் + பலகை

# 8. இரும்பு

பொன், வெள்ளி, இரும்பு, ஈயம், தாமிரம் என்பவை உலோகங்கள் எனப்படும். இவை பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. இந்த ஐந்து உலோகங்களும் "பஞ்ச உலோகங்கள்" எனப்படும். இந்த உலோகங்களிலெல்லாம் இரும்பே நமது வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமானது. நாம் உபயோகிக்கும் பல கருவிகளும் இரும்பினலேயே செய்யப்படுகின்றன.

இரும்பு பூமியினடியில் கல், மண் இவற்றோடு கலந்து இருக்கும். அவ்விதக் கலப்புப் பொருளை வெட்டி யெடுத்து ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு உலையில் வைத்துக் காய்ச்சுவார்கள். அவ்வாறு காய்ச்சினல் இரும்பு உருகித் திரவமாகும். அதிலுள்ள கல், மண், முதலியவற்றை நீக்கி விட்டு, இரும்பை மட்டும் தனியே பிரித்தெடுப்பார்கள். பின்னர், அந்த இரும்பைச் சிறிது கரியுடன் சேர்த்து மறுபடியும் உருக்குவார்கள். அந்த இரும்பு வார்ப்பு இரும்பு எனப்படும். இந்த வார்ப்பு இரும்பினல் தூண்கள், உத்திரங்கள், குழாய்கள் முதலியன செய்யப்படுகின்றன.

மேலும், சுத்தமாகக் காய்ச்சி எடுக்கப்படும் இரும்பு, தேனிரும்பு எனப்படும். இதை உபயோகித்தே பலவிதக் கருவிகளும் செய்யப்படுகின்றன. மண்வெட்டி, அரிவாள், கோடரி முதலிய பொருள்களைத் தேன் இரும்பால் செய்கிறோம். தேன் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அடித்துத் தகடாகச் செய்யலாம்; கம்பிகளாகவும் நீட்டலாம்.

மற்றொருவகை இரும்பு 'எஃகு' எனப்படும். அதை உருக்கு என்றும் சொல்கிறோம். எஃகு உறுதியுள்ளது. அது வளையாது, முறியும் தன்மையுடையது. ஆகவே நுட்ப மான பலகருவிகள் எஃகால் செய்யப்படுகின்றன. ஊசி, பேனா, கத்தி, உளி, கத்தரிக்கோல் முதலியனவும், இரயில்வே

எஞ்சின்கள், பலவகை இயந்திரங்கள், தண்டவாளங்கள், பீரங்கிகள் முதலியனவும் எஃகினாலேயே செய்யப்படுகின்றன.

இரும்பில் சீக்கிரம் துருப்பிடித்துவிடும். துருப்பட்ட இடங்களில் துவாரங்கள் உண்டாகும். துருப்பிடித்த இரும்பு செதில் செதிலாக உதிர்ந்துவிடும். அதன் பலம் குறைந்துபோகும். ஆகவே, இரும்பில் துருப்பிடியாமல் இருக்க அதன்மீது அடிக்கடி எண்ணெய் தடவி வைக்க வேண்டும்.

பூமியிலிருந்து உலோகங்கள் வெட்டி யெடுக்கப்படும் இடங்கள் சுரங்கங்கள் எனப்படும். இரும்பைச் சுத்தம் செய்வதற்கும், உருக்குவதற்கும் நிலக்கரி மிகவும் அவசியமானது. நிலக்கரியும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. இரும்பும் நிலக்கரியும் சேர்ந்து கிடைக்கும் இடங்களில் பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. நமது தேசத்தில் பீகார் மாகாணத்திலும், வங்காளத்திலும், இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. அங்குள்ள ஜெம்ஷெட்பூர் என்னுமிடத்தில் டாட்டா இரும்புத் தொழிற்சாலை நடைபெற்று வருகிறது. உலகத்திலுள்ள பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. சுமார் ஒரு லட்சம் தொழிலாளிகள் அங்கு வேலைசெய்து வருகிறார்கள். முன்பு ஒரு காலத்தில் காடாயிருந்த அந்த இடம் இப்பொழுது சகல வசதிகளுடன் கூடிய புதிய நகரமாக விளங்குகிறது.

மைசூர் இராஜ்யத்தில் பத்திராவதி என்ற இடத்திலும் இரும்புத் தொழிற்சாலை ஒன்று ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் மலைப்பாங்கான சேலம் ஜில்லாவில் பல இடங்களில் இரும்பு அகப்படக்கூடும். அதை வெட்டியெடுத்து, தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நமக்கு வேண்டிய பல சாமான்களையும் நாமே செய்துகொள்ள வேண்டும்.

அதனல் நம் நாட்டில் தொழில்கள் விருத்தியாகும். செல்வமும் அதிகரிக்கும். வேறு நாடுகளிலிருந்து இரும்புச் சாமான்கள் வருவிக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது.

இக் காலத்தில், இரும்புத்தொழில் அதிகமாயுள்ள நாடுகளே உலகத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளன. அமெரிக்க ஐக்கியநாடுகள், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஜப்பான் முதலிய நாடுகளில் இரும்புத்தொழில் அதிகமாக நடைபெறுகிறது. அந்நாடுகளிலிருந்து இரும்பு, எஃகுச் சாமான்கள் உலகத்தின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆதலின் அவை செல்வத்தில் சிறந்து விளங்குகின்றன.

## பயிற்சிகள்

### I. சொற் பயிற்சி

(a) வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள் :

| | |
|---|---|
| உலோகங்கள் | நுட்பமான |
| கருவிகள் | ஏற்றுமதி |
| முன்னேற்றம் | எஃகு |

(b) 'ர' கர, 'ற' கர பேதத்தால் ஏற்படும் பொருள் வேற்றுமையை விளக்கக் கீழ்க்கண்ட வார்த்தைகளை வாக்கியத்தில் அமைத்துக்காட்டு.

| | |
|---|---|
| அரி—அறி | மரம்—மறம் |
| அரம்—அறம் | |

### II. வினாக்கள்

(1) பஞ்ச உலோகங்கள் யாவை?

(2) இரும்பில் எத்தனை வகை யுண்டு?

(3) எஃகினல் செய்யப்படும் பொருள்கள் யாவை?

(4) மண்வெட்டி, கடப்பாரை முதலியவை எதனல் செய்யப்படுகின்றன?

(5) நமது நாட்டின் முக்கிய இரும்புச்சாலை எங்குள்ளது?.

(6) உலகில் இரும்புத் தொழிலுக்குப் பிரசித்திபெற்ற நாடுகள் யாவை?

## III. கட்டுரைப்பயிற்சி

ஒரு எஃகு பட்டாக்கத்தியின் வரலாற்றைப் பற்றி ஐந்து வரிகள் எழுது.

## IV. இலக்கணப் பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள செயப்படு பொருள்களை எழுவாய்களாக மாற்றுக.

உதாரணம்:—குதிரை வண்டியை இழுக்கிறது,
வண்டி குதிரையால் இழுக்கப்படுகிறது.

1. உருக்கை எஃகு என்றும் சொல்லுகிறோம்.
2. நுட்பமான கருவிகளை எஃகால் செய்கிறோம்.

# 9. ஆறு

1. கல்லும் மலையுங் குதித்து வந்தேன்—பெரும்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி யெங்கும்—நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

2, காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை திரவிளை யாடிவந்தேன்.

3. ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன்.

4. பஞ்சையரைத்து நூல் நூற்று வந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்து வந்தேன்
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்து வந்தேன்.

5. அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா.

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

## பயிற்சிகள்

I. வினாக்கள் :

1. ஆறு முதலில் எங்கு ஓடுகிறது?
2. பின்னர் எங்குப் பாய்கிறது?
3. ஆறு செய்யும் வேலை என்ன?
4. ஆற்றினால் நாம் அடையும் நன்மைகள் யாவை?
5. ஆற்று நீரினால் எத் தொழில்கள் நடைபெறுகின்றன?

II. பயிற்சி :— பொருள் கூறு :—

எல்லை, விரிந்த, சமவெளி, ஆயும் மலர் பொழில், நெஞ்சம் உலர்ந்த, அல்லும் பகலும், இறைவன்.

# 10. முத்துக் குளித்தல்

கடலினுள் இருக்கும் முத்தை எடுக்கும் தொழிலுக்கு 'முத்துக் குளித்தல்' என்று பெயர். அத் தொழில் செய்பவர்கள் முத்துக் குளிப்பவர்கள் எனப்படுவர். முத்துக் குளிப்பவர்கள் படகுகளில் ஏறி கடலில் முத்துக்கிடைக்கும் பாகத்திற்குச் செல்வார்கள். அங்கே சென்றதும் அவர்களில் ஒருவன் தன் கால்களில் பெரிய கற்களைக் கட்டிக் கொண்டு கடலில் மூழ்குவான். அவன் இடுப்பில் கட்டிய கயிற்றைப் படகிலிருப்பவர்கள் பிடித்திருப்பார்கள். கல்லின் பளுவால் முத்துக்குளிப்பவன் தரைமட்டத்தை அடைவான். தன்னால் இயன்றவரை சிப்பிகளைத் திரட்டித் தன் முதுகில் கட்டியிருக்கும் கூடைகளில் நிரப்பிக்கொள்வான். பின்னர், கால்களிலுள்ள கற்களை அவிழ்த்து எறிந்துவிட்டு மேலெ மூம்பி வருவான்.

முத்துக் குளிப்பவர்கள் தண்ணீரில் நீண்டநேரம் மூச்சை அடக்கிக்கொண்டிருக்கப் பழகியிருப்பார்கள். மூச்சுத்திணற ஆரம்பித்ததும் கயிற்றை அசைப்பார்கள். அந்த அடையாளத்தை அறிந்து மேலேயுள்ளவர்கள் கயிற்றைப்பிடித்து மேலே இழுப்பார்கள். முத்துக் குளிப்பவர்கள் கொஞ்ச நேரம் இளைப்பாறியதும் மறுபடியும் மூழ்கிச் சிப்பிகளைச் சேகரிப்பார்கள்.

தற்காலத்தில் நீரில் மூழ்குபவர்கள் வெகு நேரம் தண்ணீரில் இருப்பதற்கு அனுகூலமாகப் பிராணவாயுக் குழாய்களை அணிகின்றனர். இரப்பரால் செய்யப்பட்ட உடைகளையும், தண்ணீரில் கண்ணைத்திறந்து பார்ப்பதற்குரிய கண்ணாடிகளையும் அணிகின்றனர்.

முத்துச் சிப்பி சமுத்திரத்தில் உள்ள உயிர் வகைகளில் ஒன்று. அது கிளிஞ்சல் எனப்படும். கிளிஞ்சலின் உடலில் இரண்டு ஓடுகள் இணைந்து இருக்கும். அது அந்த ஓடுகளை

வேண்டும்போது திறக்கவும் மூடவும் கூடும். ஓட்டின் உட்புறத்தில் கிளிஞ்சலின் தசைப்பாகம் இருக்கிறது. ஓட்டின்



வெளிப்புறம் சொரசொரப்பாக இருக்கும். உட்புறம் வழுவழுப்பாக இருக்கும். கிளிஞ்சலின் தசைப் பாகத்தில்தான் முத்து உண்டாகிறது. முத்துச் சிப்பி தன் ஓடுகளைத் திறக்கும்போது சிறுமணல் பருக்கை அதன் உடலுக்குள் புகுந்துவிடும். அது ஓட்டுக்கும் தசைக்கும் இடையில் தங்கும். அதனல், அந்தப் பிராணிக்கு அரிப்பு ஏற்படும். அந்த அரிப்பினல் அது அசைந்து புரளும். அப்பொழுது அதன் உடலிலிருந்து ஒருவகையான வெண்ணிறமுள்ள நீர்

கழிந்து மணலைச் சுற்றிப் படிகிறது. அது உருண்டை வடிவமான பிறகுதான் சிப்பிக்கு அரிப்பு நிற்கிறது. அந்த வெண்ணிறப் பசைதான் நாளடைவில் முத்து ஆகிறது. கிளிஞ்சலில் கசிந்த நீரின் அளவுக்குத் தகுந்தபடி முத்துக் களின் பருமன் இருக்கும். முத்து பளபளப்பான வெண்மை நிறம் உடையது. அது நவரத்தினங்களில் ஒன்று. முதிர்ச்சி அடைந்துள்ள முத்துக்கள் சிறு சுண்டைக்காய் பருமன் இருக்கும். அவற்றை மாலையாகக் கோர்த்து அணிகின்றனர். அவை இலக்ஷக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ளவை. சிறு முத்துக்களின் விலை குறைவாயிருக்கும்.

இலங்கையை அடுத்துள்ள சமுத்திரத்தில் முத்துச் சிப்பிகள் அதிகம். தமிழ் நாட்டில் சோழமண்டலக் கரையை அடுத்தும், தூத்துக்குடிக்கு அருகிலும் முத்துக் குளித்தல் நடைபெறுகிறது. பண்டைக்கால முதலே முத்துக்குப் பிரசித்திப் பெற்றது பாண்டி நாடு.

## பயிற்சிகள்

### I. சொற்பயிற்சி

வாக்கியங்களில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்:—

| | | | |
|---|---|---|---|
| 1. | சேகரித்தல் | 4. | தசை |
| 2. | மூச்சுத்திணற | 5, | அரிப்பு |
| 3. | பளுவு | 6. | கோர்த்து |

### II. வினாக்கள்

1. நவரத்தினங்கள் யாவை?
2. முத்து எவ்வாறு உண்டாகிறது?
3. முத்துக்கள் எங்கே அதிகம் கிடைக்கின்றன?
4. முத்துக்களின் உபயோகம் என்ன?

III. கட்டுரைப்பயிற்சி:— பவளம் எடுத்தலைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

IV. இலக்கணம்: முத்துக் குளிப்பவர், பிரபுக்கள், தேவர்கள் — இம்மூன்று பெயர்ச்சொற்களும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள்.

கற்கள், சிப்பிகள், கடல் இவை மூன்றும் அஃறிணைப் பெயர்ச்சொற்கள்.

தேவர்களும், மனிதர்களும் உயர்திணை எனப்படுவர். மற்ற உயிர் உள்ளவைகளும், இல்லாதவைகளும் அஃறிணை எனப்படும்.

பயிற்சி: பின்வரும் சொற்கள் என்ன திணை எனக்கூறு:—
கால், கயிறு, சமுத்திரம், கிளிஞ்சல், நவரத்தினம், சீமாட்டிகள், அரசர்கள், தலைவர்கள்.

# 11. ஜெம்ஸெட்ஜி டாட்டா

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த கூர்ஜா நாட்டில் நவகாளி என்னும் ஊரில் ஓர் ஏழைப் பார்ஸிக் குடும்பத்தில் ஜெம்ஸெட்ஜி டாட்டா என்பவர் பிறந்தார். அவருடைய தகப்பனருக்கு நவகாளியில் போதிய வருமானம் கிடைக்காமையால் அவ்வூரை விட்டுக் குடும்பத்துடன் பம்பாய் நகர் வந்து சேர்ந்தார். சிறுவன் ஜெம்ஸெட்ஜிக்கு அப்பொழுது வயது பதின்மூன்று. அவன் பம்பாயில் ஒரு பள்ளியில் மூன்று வருஷம் படித்தபிறகு பிரசித்திபெற்ற எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்து உயர்தரக் கல்வி பயின்ருன். அச் சமயத்தில் அவனுடைய தகப்பனுர் ஆரம்பித்து நடத்தி வந்த வர்த்தகம் விருத்தி அடைந்து வந்தது. கல்வியை நிறுத்திவிட்டு வியாபாரத்தில் தமக்கு உதவிசெய்யும்படி ஜெம்ஸெட்ஜியிடம் தகப்பனுர் கூறினுர். சிறுவன், ‘தந்தைசொல் மிக்க மந்திரமில்லை’ என்ற வாக்கை அனுசரித்துத் தகப்பனுருடன் வர்த்தகத் தொழிலில் பிரவேசித்தான்.

அது முதல் ஜெ. என். டாட்டா பல இடங்களுக்கும் பிரயாணம் செய்யலானுர். இருபத்தொரு வயதுள்ள வாலிபரா யிருந்தும் அவர் கடல் கடந்து சீன தேசம் சென்ருர். அங்கு நான்கு வருடகாலம் தங்கினுர். பின்னர் இங்கிலாந்து சென்ருர். அச்சமயத்தில் பம்பாயில் வியாபாரம் குறைந்தது. ஏராளமான பொருள் நஷ்டமும், பல விதக் கஷ்டங்களும் ஏற்பட்டன. ஆயினும் அவர் மனங் கலங்க வில்லை. ‘முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்”, என்றபடி அவர் பலவிதமான தொழில் முயற்சிகளில் ஈடு பட்டார். அவர் பம்பாயில் ஒரு நெசவு ஆலை ஆரம்பித்தார். இங்கிலாந்து சென்று அங்கே ஆலைகள் நடத்தப்படும் முறைகளைக் கற்று வந்தார். பின்னர் நாகப்பூரில் எம்பிரஸ் நெசவுத் தொழிற்சாலையை நிறுவினுர். அந்த ஆலையே இந்தியாவிலுள்ள ஆலைகள் எல்லாவற்றிலும் முதன்மை

பெற்று விளங்கியது. அதிலிருந்து அவருக்கு ஏராளமான இலாபம் கிடைத்தது.

எல்லாக் கைத்தொழில்களுக்கும் ஆதாரமாய் இருப்பது இரும்புத் தொழில். இரும்புத் தொழில் திறமையாக நடப்பதினலேயே இங்கிலாந்து தேசம் பிற தொழில்களிலும் சிறப்புற்று விளங்குகிறது. அதே போன்று நமது தேசத்திலும் இரும்புத் தொழில் சிறந்து விளங்கவேண்டுமென்று டாட்டா விரும்பினர். வங்காள மாகாணத்தில்



ஜெம்ஸெட்பூரில் விசாலமான பூமி தரிசாகக் கிடந்தது. ஜெம்ஸெட்ஜி டாட்டா அங்கு ஓர் இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பித்தார். நாளடைவில் அத் தொழிற்சாலை பெரிதாகி இப்பொழுது டாட்டா நகர் என்ற பெயருடன் பெரிய நகரமாக விளங்குகிறது. அங்குள்ள இரும்பாலையில் நாள் முழுவதும் ஓயாமல் வேலை நடைபெறுகிறது. அங்கு இலக்ஷக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

இப்பொழுது, உலகத்திலுள்ள பெரிய இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளில் ஒன்ருக டாட்டா தொழிற்சாலையும் விளங்குகின்றது.

ஜெம்ஸெட்ஜி டாட்டா ஒரு கொடை வள்ளல். அவர் இந் நாட்டின் கல்விப் பெருக்கத்திற்கும், தொழில் அபி விருத்திக்கும் தமது வருவாயில் பெரும் பகுதியை வழங்கி யிருக்கிறார். பெங்களூரில் அமைக்கப்பட்டிருக்கும் டாட்டா ஆராய்ச்சி சாலைக்கு மட்டும் அவர் முப்பது இலக்ஷம் ரூபாய்க்குமேல் நன்கொடை அளித்துள்ளார்.

ஜெம்ஸெட்ஜி டாட்டா பல பரோபகாரப் பணிகள் செய்து புகழுடன் வாழ்ந்து, முதிர்ந்த வயதில் இறைவன் திருவடி சேர்ந்தார்.

## பயிற்சிகள்

### I. சொற்பயிற்சி:

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்:

இறைவன், கொடைவள்ளல், பரோபகாரம், தொழிற்சாலை, விருத்தி, வருவாய், நன்கொடை, முதன்மை.

### II. வினாக்கள்:

1. ஜெம்ஸெட்ஜி டாட்டா எங்கே பிறந்தார்?

2. அவர் கலாசாலைப் படிப்பை இடையில் நிறுத்திவிடக் காரணம் யாது?

3. அவர் ஏன் இங்கிலாந்து சென்றார்?

4. 'எம்பிரஸ்' நெசவாலை எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

5. டாட்டா இரும்புத் தொழிலில் கவனம் செலுத்தக் காரணம் யாது?

6. டாட்டா நகரில் நடக்கும் தொழில் யாது?

7. 'டாட்டா ஒரு கொடை வள்ளல் எனக் கூறலாம்' எவ்வாறு?

### III. கட்டுரைப் பயிற்சி:

ஜெம்ஸெட்ஜி டாட்டாவைப்போலே கொடைவள்ளலாக விளங்கும் வேறொரு பெரியாரைப்பற்றி ஆறு வாக்கியங்கள் எழுது?

## IV. இலக்கணம்:

உயர்திணை
1. ஜெம்ஜெட்ஜி, தகப்பனார் — ஆண்பால்
2. தாயார், பெண், சீதை — பெண்பால்
3. குழந்தைகள், மனிதர்கள், ஸ்திரீகள்—பலர்பால்

அஃறிணை
1. மாகாணம், கல்லூரி, தொழிற்சாலை—ஒன்றன்பால்
2. மாகாணங்கள், கல்லூரிகள், தொழிற்சாலைகள் — பலவின்பால்

ஆணைக் குறிக்கும் சொல் **ஆண்பால்** எனப்படும்.
பெண்ணைக் குறிக்கும் சொல் **பெண்பால்** எனப்படும்.

ஆண்களிற் பலரையாயினும், பெண்களிற் பலரையாயினும், அவ்விரு பாலாரும் கலந்த பலரையாயினும் குறிக்கும் சொல் **பலர்பால்** எனப்படும்.

அஃறிணைப் பொருளில் ஒன்றைக் குறிக்கும் சொல் **ஒன்றன்பால்** எனப்படும்.

அஃறிணைப் பொருளில் பலவற்றைக் குறிக்கும் சொல் **பலவின் பால்** எனப்படும்.

பால் என்னும் சொல்லுக்குப் பிரிவு என்பது பொருள்.

பால் ஐந்து வகைப்படும்.

**பின்வரும் வார்த்தைகளைப் பால் பிரித்துக் கூறு:**

நாடு, குடும்பம், நகரம், கல்வி, சிறுவன், கஷ்டங்கள், ஆலைகள், தொழில்கள், தொழிலாளர்கள், கொடைவள்ளல், இறைவன்.

# 12. தொழில் (பாட்டு)

1\. இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

2\. மண் ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

— சுப்பிரமணிய பாரதியார்.

**I. வினாக்கள் :**

1\. நாடு முன்னேற நாம் செய்யவேண்டிய தொழில்கள் யாவை?

2\. எக் கலைகளை விருத்தி செய்யவேண்டும்?

**II. அரும்பதங்கள் :**

| | | |
|---|---|---|
| நுமக்கு | = | உமக்கு |
| இழை | = | நூல் |
| விண் | = | ஆகாயம், சுவர்க்கலோகம் |
| புவி | = | பூமி |
| வானவர் | = | தேவர்கள் |

# 13. தளபதி வாஷிங்டன்

ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்கா தேசத்தில் சேனுதிபதியாக இருந்தார். அவர் பெருந்தன்மை வாய்ந்தவர். எல்லோரையும் சமமாக நடத்தும் குணம் உள்ளவர். ஒரு நாள் அவர் தம்முடைய இராணுவ உடைகளை அணியாமல் சாதாரண ஆடை அணிந்து, குதிரை மீது ஏறி நகரத்தைச் சுற்றிப் பார்த்து வந்தார். ஓரிடத்தில் சில போர்வீரர்கள் ஒரு பெரிய கனமான மரத்தை ஒரு மேட்டின்மேல் ஏற்ற முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எவ்வளவு முயன்றும் ஏற்ற முடியவில்லை. அந்த வீரர்களின் அருகில் நின்ற ஜமேதார், தாமும் சேர்ந்து உதவி செய்யாமல் அவர்களை அதட்டி அதிகாரம் செய்து கொண்டிருந்தார். அதைக்கண்ட வாஷிங்டன் தம் குதிரையை விட்டுக் கீழே இறங்கினர். ஆடைகளைக் களைந்து ஒரு புறம் வைத்துவிட்டு,



வீரர்களுடன் சேர்ந்து மரத்தைத் தூக்கினர். அவருடைய உதவியால் மரம் மேடு ஏறிற்று. அவர் ஜமேதாரை நோக்கி, "ஐயா, நீர் மாத்திரம் ஒரு கை கொடுத்திருந்தால், முன்பே இந்தமரம் மேலே போயிருக்குமே" என்று கூறினர். அந்த ஜமேதார் வாஷிங்டனை ஏறஇறங்கப் பார்த்தான்.

வாஷிங்டனை ஜெனரல் என்று அறிந்துகொள்ளாமல் கம்பீரத்துடன், "நான் யார் தெரியுமா? நான் ஒரு ஜமேதார்; சாதாரணப் போர்வீரன் அல்ல" என்று கூறினன். அவனுடைய பெருமையைக் கண்டு வாஷிங்டன் புன்னகை புரிந்தார்.

"ஐயா, ஜமேதாரே! இனி உதவிவேண்டிய சந்தர்ப்பங்களில், எனக்குச் சொல்லி அனுப்பும்; நான் அன்னியன் அல்ல. என்னை ஜெனரல் வாஷிங்டன் என்று சொல்லுவார்கள்" என்று கூறிவிட்டுத் தம் குதிரை மீதேறிப் போய்விட்டார். உண்மையை அறிந்த ஜமேதார் மிகவும் அச்சம் அடைந்தான். தன் குற்றத்தை உணர்ந்து வருந்தினன். ஜெனரல் வாஷிங்டனிடம் சென்று மன்னிப்புக் கேட்டான். வாஷிங்டன் அவனுக்குப் புத்தி கூறி அவனை மன்னித்தார். அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது.

## பயிற்சிகள்

### I. சொற்பயிற்சி

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய சொற்கள்:—

பெருந்தன்மை, இராணுவம், களைந்து, புன்னகை, அன்னியன், கம்பீரம்

### II. வினுக்கள்

1. வாஷிங்டன் எத்தகைய குணம் உள்ளவர்?
2. வாஷிங்டன் ஜமேதாரிடம் யாது சொன்னர்?
3. அவர் செய்த உதவி யாது?
4. ஜமேதார் ஏன் அச்சம் கொண்டார்?

### III. பயிற்சி

இந்த நிகழ்ச்சியை ஜமேதார் உன்னிடம் கூறுவதுபோல் எழுது:

**IV. இலக்கணப் பயிற்சி:** பின்வரும் வாக்கியங்களைப் பன்மையில் அமைக்கவும்:—

1. ஒரு போர் வீரன் ஒரு கனமான மரத்தை மேட்டின் மேல் ஏற்றிக்கொண்டிருந்தான்.
2. அவன் தன்னல் இயன்றமட்டும் முயன்றும் முடியவில்லை.
3. நான் சாதாரணப் போர்வீரன் அல்ல.
4. அவன் தன் குற்றத்தை உணர்ந்து வருந்தினன்.
5. அவன் தன் குதிரை மீதேறிப் போய்விட்டான்.
6. தலைவன் ஆடையைக்களைந்து கீழே வைத்தான்.

# 14. இளந்தமிழனுக்கு

தமிழ னென்ற பெருமை யோடு
தலை நிமிர்ந்து நில்லடா!
தரணி யெங்கும் இணையிலா உன்
சரிதை கொண்டு சொல்லடா!
அமிழ்த மென்ற தமிழி னோசை
அண்ட முட்ட உலகெலாம்,
அகில தேச மக்களுங் கண்(டு)
ஆசை கொள்ளச் செய்துமேல்
கமழ் மணத்தின் தமிழில் மற்ற
நாட்டி லுள்ள கலையெலாம்,
கட்டி வந்து தமிழர் வீட்டில்
கத விடித்துக் கொட்டியே,
நமது சொந்தம் இந்த நாடு
நானி லத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்து வாழ்க நீண்ட நாள்.

— ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

**அரும்பதங்கள் :—** தரணி, நானிலம் — பூமி. அண்டம் — உருண்டை. கமழ் — வாசனை வீசுகின்ற. இணையிலா — ஒப்பில்லாத. கலை — கல்வி, சாஸ்திரம். அகிலம் — எல்லாம். கதவிடித்து = கதவு + இடித்து.

**வினாக்கள் :**

1. தமிழர் செய்யவேண்டிய கடமைகள் யாவை?
2. தமிழர் எவ்விதங்களில் பெருமை அடையலாம்?
3. தமிழ் மொழி எத்தகையது?

## 15. ரேடியோ நிலையம் – (உரையாடல்)

**ஜேசுதாசன்:** தேவநேசா! நீ மாலையில் எங்கே சென்றிருந்தாய்?

**தேவநேசன்:** நான் இன்று மாலை நமது நகர்மன்ற ரேடியோ நிலையத்திற்குப் போயிருந்தேன்.

**தாசன்:** அங்கு என்ன விசேடம்?

**நேசன்:** ரேடியோவில் ஒவ்வொரு நாளும் பல நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

**தாசன்:** இன்று என்ன நிகழ்ச்சி நடைபெற்றது?

**நேசன்:** இன்று சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை பாட்டுக் கச்சேரி இருந்தது. தேசீயப் பாடல்களையும், தேவாரத் தோத்திரப் பாடல்களையும் எவ்வளவு உருக்கமாகப் பாடினர் தெரியுமா? கேட்கக் கேட்கத் தெவிட்டாத விருந்தா யிருந்தது.

**தாசன்:** எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை கச்சேரி நடைபெற்றது.

**நேசன்:** ஏழரை மணி முதல் ஒன்பது மணி வரை நடைபெற்றது.

**தாசன்:** அதற்குமுன் என்ன நடந்தது?

**நேசன்:** வழக்கப்படி மாலை ஐந்து மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. முதலில் கிராம நிகழ்ச்சி; பின்னர், பருத்திச் செடி பயிர் செய்வதைப் பற்றி ஓர் அரிய உபந்நியாசம்; அடுத்து, உணர்ச்சி ததும்பும் ஒரு சிறு நாடகம். இவை ஏழு மணி வரை நடைபெற்றன. அதன் பின்னர், சில இசைத் தட்டுகள் வைக்கப் பட்டன. ஏழேகால் மணிக்கு உலகச் செய்திகள் தமிழில் அறிவிக்கப்பட்டன. கொரியாவில் நடக்கும் போரைப்பற்றிய விவரங்களை அறிய ஆவலுடன் நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அந்தச் சில்லறைச் சண்டை மூன்றாவது உலக யுத்தமாக மூண்டு விடுமோ என்று அனைவரும் கவலையுடன் இருக்கின்றனர்.

**தாசன்:** உலகத்தின் பல பாகங்களிலும் நடக்கும் நிகழ்ச்சிகளை ரேடியோ தெரிவிக்கிறது மிகவும் நன்மையே. ஆனால், அச்செய்திகள் எப்படி நமக்கு வந்து சேருகின்றன?

**நேசன்:** சென்னை, திருச்சி போன்ற சில நகரங்களில் ரேடியோ ஒலிபரப்பும் நிலையங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அங்கு சப்தம் வெளிப் போகாத முறையில் அறைகள் கட்டப்பட்டிருக்கும். அறையில் ஒலி அனுப்பும் கருவி இருக்கிறது: அந்தக் கருவிக்கு முன் உட்கார்ந்து பேசவோ பாடவோ செய்வார்கள் அந்தச் சப்த அலைகள் வானத்திலுள்ள ஈதர் என்னும் அணுக்களின் மூலமாகப் பரவுகின்றன. நாம் ரேடியோ கருவி வைத்திருந்தால் அது அந்த ஒலி அலைகளைப் பிடித்து நமக்குக் கொடுக்கிறது. மின்சார அலைகள், ரேடியோப் பெட்டியில் வந்ததும் சப்தமாக மாறிப் பேச்சாகவோ, பாட்டாகவோ நமக்குக் கேட்கிறது.



(ரேடியோப் பெட்டி)

**தாசன்:** ரேடியோ வேறு எவ்விதங்களில் பயன்படுகிறது?

**நேசன்:** ரேடியோ மிகவும் உபயோகமுள்ள கருவி. ஒரு கப்பல், கடலில் அபாயத்துக்குள்ளானல் கப்பல் தலைவன் அந்தக் கப்பலில் உள்ள ரேடியோ மூலம் கரையிலிருப்பவர்களுக்கும், மற்றக் கப்பல்களுக்கும் நிலைமையை அறிவிப்பான். அதனல் உதவி கிடைத்துக் கப்பல் காப்பாற்றப்படும். வியாபாரத்திற்கும் ரேடியோ மிகவும் உபயோகப்படுகிறது. பொருள்களின் விலைகள், செய்தித்தாள்களில் வருவதற்கு முன்பே, ரேடியோ மூலம் தினந் தினம் அறிவிக்கப்படுகின்றன. மாணவர்களுக்கு அறிவைப் புகட்டும் சொற்பொழிவுகள் பல, அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன. அவைகளைக் கேட்டு நாம் பயனடையலாம்.

**தாசன்:** நண்பா! வந்தனம். இன்றுதான் ரேடியோவின் முக்கியத்தை நான் தெரிந்துகொண்டேன். இனிமேல் நாம் ரேடியோ நிகழ்ச்சிகளை அடிக்கடி சென்று கேட்போம்.

## பயிற்சிகள்

### I. சொற்பயிற்சி

வாக்கியங்களில் அமைத்துப் பழகவேண்டிய சொற்கள்—ரேடியோ நிலையம். நிகழ்ச்சிகள், உபந்நியாசம், சொற்பொழிவுகள், தெவிட்டாத விருந்து.

### II. கேள்விகள்

1. ரேடியோ செய்திகளை எவ்வாறு ஒலி பரப்புகிறது?
2. ரேடியோவின் உபயோகங்கள் யாவை?
3. கல்வி முன்னேற்றத்திற்கு ரேடியோ எவ்விதம் பயன்படுகிறது?

III. கட்டுரைப் பயிற்சி :

ரேடியோவைப் பற்றிப் பின்வரும் குறிப்புகளின் உதவியால் பத்து வாக்கியங்களில் ஒரு வியாசம் எழுது.

1. ரேடியோ மிகவும் உபயோகமான கருவி.

2. இத்தாலி தேசத்து 'மார்க்கோனி' என்பவரால் அது கண்டுபிடிக்கப்பட்டது.

3. செய்திகள் எவ்வாறு அனுப்பப்படுகின்றன ?

4. ரேடியோவின் உபயோகங்கள்.

IV. இலக்கணம் :

1. நான், யான் — தன்மை ஒருமை
நாம், நாங்கள், யாம், யாங்கள் — தன்மைப் பன்மை.

2. நீ ———— முன்னிலை ஒருமை
நீர், நீங்கள், நீவிர் — முன்னிலைப் பன்மை

3. அவள், அவன், அது — படர்க்கை ஒருமை
அவர், அவர்கள், அவை, அவைகள் — படர்க்கைப் பன்மை.

ஆகவே தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடம் மூன்று வகைப்படும்.

# 16. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் 1820-ம் ஆண்டில், இங்கிலாந்து தேசத்தில் புகழ்பெற்ற ஒரு குடும்பத்தில் பிறந்தார். நைட்டிங்கேல் அம்மையார் இளமையிலேயே நன்றாகக் கல்வி கற்றுச் சிறந்த அறிவாளியாக விளங்கினர். அவருடைய தந்தையார் நைட்டிங்கேலின் இளமைப் பருவத்திலேயே அவரைத் தம்மோடு பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். ஆதலின், அவருக்கு உலகத்தைப் பற்றிய பொது அறிவு அதிகம் உண்டாயிற்று.



நைட்டிங்கேல் அம்மையார் இளகிய மனம் உடையவர். எளிய மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தித் தம்மாலான உதவிகளை அவர்களுக்குச் செய்து வந்தார். எளியவர்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்களுடைய நன்மை தீமைகளைப் பற்றி விசாரித்து ஆறுதல் கூறினர்.

நைட்டிங்கேல் அம்மையாரை மகாராணியாரின் சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென்று அவருடைய தகப்பனர் விரும்பினர். ஆனல் நைட்டிங்கேல் அம்மையார் அதை

விரும்பவில்லை. வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகளுக்கு உதவி செய்தல், சமூக சீர்திருத்தம் செய்தல் முதலிய காரியங்களிலேயே அவருடைய கவனம் சென்றது.

அவர் ஜெர்மனி தேசம் சென்று, அங்கு கைஸர்வாழ் என்னும் நகரில் உள்ள வைத்தியசாலையில் மூன்று மாத காலம் தாதியாக இருந்து, தாதித் தொழிலின் நுட்பங்களையும், வைத்தியசாலையை நிர்வகிக்கும் முறைகளையும் நன்கு தெரிந்துகொண்டார். பின்னர், இலண்டன் நகரம் திரும்பியதும் சீமாட்டிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த வைத்தியசாலையில் தாதி வேலையில் அமர்ந்து, அந்த வைத்தியசாலையின் நிர்வாகத்தைச் சீர்திருத்தி, அதன் முழுப்பொறுப்பையும் தாமே ஏற்றுச் சிறப்பாக அதை நடத்திவரலானர்.

இச்சமயத்தில் ஆங்கிலேயருக்கும், இரஷியருக்கும் போர் மூண்டது. க்ரைமியா என்னும் தீபகற்பத்தில் போரிட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேய வீரர்கள் விஷஜுரத்தாலும், விஷ பேதியாலும் மிகவும் கஷ்டப்பட்டனர். அங்குப் போரில் காயமடைந்த வீரர்களுக்குச் சிகிச்சைக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ஸ்கூடாரி என்ற நகரில் இருந்த இராணுவ வைத்தியசாலை சரியான முறையில் நடத்தப்படவில்லை. இதனல் இங்கிலாந்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. பிறருக்குத் தொண்டுசெய்ய வேண்டுமென்று ஆர்வங்கொண்ட நைட்டிங்கேல் அம்மையார் ஸ்கூடாரி சென்று வேலை செய்ய ஒப்புக்கொண்டார். தம்முடன் முப்பத்தேழு தாதிகளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். தங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

ஸ்கூடாரியை அடைந்ததும், நைட்டிங்கேல் அம்மையார் அந்த வைத்தியசாலையின் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் தாமே ஏற்றுக்கொண்டார். அதனை ஒழுங்குபடுத்துவதில் தம் முழு கவனத்தையும் செலுத்தினர்.

நோயாளிகளுக்கு வேண்டிய சுத்தமான உடை கொடுக்கவும் நல்ல உணவுப் பொருளை அளிக்கவும் ஏற்பாடு செய்தார். போர்முனைகளிலிருந்து காயமடைந்து வந்த நோயாளிகளை உடனே கவனித்துச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார். வைத்தியசாலையில் இருந்த அசுத்தங்களை அப்புறப்படுத்திச் சுத்தமாக்கினர்.

இரவும், பகலும் ஓய்வில்லாமல் ஒவ்வொரு வேலையையும் தாமே மேற்பார்த்து வந்தார். ஒவ்வொரு நோயாளியையும் தாமே நேரிற் பார்த்து வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். அவருடைய அன்புகனிந்த பார்வையும், இனிய வார்த்தைகளும் நோயாளிகளுக்கு மிகவும் ஆறுதல் அளித்தன. அவர்கள் தினமும் அவருடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தனர். இரவு நேரத்தில் யாவரும் படுக்கச் சென்ற பின்னர், அம்மையார் கையில் ஒரு விளக்கை ஏந்திக்கொண்டு, ஒவ்வொரு நோயாளியிடமும் செல்லுவார். தூக்கமின்றி சங்கடப் பட்டுக்கொண் டிருக்கும் நோயாளிகளுக்கு ஆறுதல்மொழி கூறுவார். அதனல் நைட்டிங்கேல் அம்மையாருக்கு "விளக்கேந்திய அம்மையார்" என்ற பெயர் ஏற்பட்டது.

நைட்டிங்கேல் அம்மையார் தமது உடல் நலத்தைக் கூட பொருட்படுத்தாமல், பிறருடைய கஷடங்களைப் போக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய சேவையை மெச்சி, விக்டோரியா மகாராணியார் அவருக்கு ஓர் இரத்தினப் பதக்கத்தை வெகுமதியாக அளித்தார்.

அவர் இங்கிலாந்து திரும்பியதும் அவருக்குச் சன்மானம் செய்ய ஒரு நிதி திரட்டப்பட்டது. அந்த நிதியை நைட்டிங்கேல் அம்மையார் தம் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளவில்லை. தாதித் தொழிலைக் கற்பிக்கும் ஸ்தாபனத்தை அமைப்பதில் அதைச் செல விட்டார். தாதித் தொழிலின் முக்கியத்தை உலகத்திற்கு எடுத்துக்காட்டி, அதற்கு மிகுந்த சிறப்பை உண்டாக்கியவர்

நைட்டிங்கேல் அம்மையாரே. அம்மையார் கடும் உழைப்பால் உடல்நலம் குன்றி இறந்தார். ஆயினும், அவர் புகழ் இன்னும் குன்றாமல் இருந்து வருகிறது. நைட்டிங்கேல் அம்மையார் தன்னலங் கருதாது பிறர் நலத்துக்காக உழைத்த பேருபகாரி என்று போற்றப்படுகிறார்.

### பயிற்சிகள்

**I. சொற்பயிற்சி:**

(a) வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய சொற்கள்:—

சேவை, சமூக சீர்திருத்தம், நிர்வாகம், ஈடுபடுத்த, பரபரப்பு, அன்பு கனிந்த, ஸ்தாபனம், தொண்டு, பேருபகாரி.

(b) எதிர்ப்பதம் கூறு:— இளமை, எளியவர், சுத்தமான, இனிய, தன்னலம்.

**II. வினாக்கள்:**

1. நைட்டிங்கேல் தாதித் தொழிலை எங்குக் கற்றார்?
2. அவர் ஸ்கூடாரியில் செய்த சேவை யாது?
3. அவர் நோயாளிகளுக்கு எவ்விதம் ஆறுதல் அளித்தார்?
4. "விளக்கேந்திய அம்மையார்" என்ற பெயர் அவருக்கு ஏற்படக் காரணம் யாது?
5. நைட்டிங்கேல் நிதி எவ்வாறு உபயோகிக்கப்பட்டது?

**III. கட்டுரைப் பயிற்சி:**

கஸ்தூரிபாய் காந்தியின் வாழ்க்கையைப் பற்றிக் கீழ்கண்ட குறிப்புகளின் உதவியால் ஆறு வாக்கியங்கள் எழுது:—

சமூக சேவை, தேச சேவை, கணவருடன் ஈடுபட்டார் — எளிய வாழ்க்கை மேற்கொண்டார் — எளியாரின் துன்பத்தைப் போக்க அல்லும் பகலும் பாடுபட்டார் — சுயநலம் சிறிதும் கருதாமல் சிறைச்சாலையில் உயிர் நீத்தார்.

## IV. இலக்கணம்:

பெயர்ச் சொல்லோடு சில உறுப்புகள் சேர்வதால் அதன் பொருள் வேறுபடுகிறது.

1. நைட்டிங்கேல் பெரிய உபகாரி.
2. நைட்டிங்கேலை எல்லோரும் விரும்பினர்.
3. நைட்டிங்கேலால் தாதித் தொழில் முன்னேற்றம் அடைந்தது.
4. நைட்டிங்கேலுக்கு பேரும் புகழும் உண்டாயின.
5. நைட்டிங்கேலின் சிறந்தவர் யாருமில்லை.
6. நைட்டிங்கேலுடைய வாழ்க்கை யாவரும் பின்பற்றத் தக்கது.
7. நைட்டிங்கேலிடம் பல அரிய குணங்கள் அமைந்திருந்தன
8. நைட்டிங்கேலே! நின் புகழ் ஓங்குக.

மேலே உள்ள எட்டு வாக்கியங்களிலும் 'நைட்டிங்கேல்' என்னும் சொல்லின் இறுதியில் வேற்றுமையைக் குறிக்கும் உருபுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அவை வேற்றுமை உருபுகள் எனப்படும். வேற்றுமை எட்டு வகைப்படும்.

| | |
|---|---|
| முதல் வேற்றுமை :— | — யாதொரு மாறுபாடும் இல்லாத பெயர்ச் சொல். |
| இரண்டாம் வேற்றுமை:— | — ஐ. |
| மூன்றும் வேற்றுமை :— | — ஆல், ஒடு, உடன், |
| நான்காம் வேற்றுமை :— | — கு. |
| ஐந்தாம் வேற்றுமை :— | — இல், இன், இருந்து. |
| ஆறும் வேற்றுமை :— | — அது, உடைய. |
| ஏழாம் வேற்றுமை :— | — இல், இடத்தில், கண். |
| எட்டாம் வேற்றுமை :— | — பெயரையுடைய பொருளை நேராகக் கூப்பிடுதல் (ராமா! வா) |

## V. இலக்கணப் பயிற்சி:

இந்தப் பாடத்தில் முதல் இரண்டு பத்திகளில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி அவை என்ன வேற்றுமை என்பதை எழுதவும்.

# 17. மகாத்மாவின் குணாதிசயங்கள்

மகாத்மா காந்தியிடம் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய சிறந்த பண்புகள் பல உள. அவற்றுள் சிலவற்றை இங்கே கூறுவோம். அவர் எப்போதும் வேகமாகவே நடப்பார். அவர் கூனிக் குனிந்து அமர்வது இல்லை. எப்பொழுதும் நிமிர்ந்தே அமர்வார். அவர் மேசை, நாற்காலி போட்டு அதில் அமர்ந்து எழுதுவது கிடையாது. மடியில் வைத்துக் கொண்டுதான் எழுதுவார். எழுதியதைத் திரும்பப் படிக்காமல் அனுப்பமாட்டார். ஒரு தபால் கார்டு எழுதினாலும், அதைத் திரும்பப் படித்துத் திருத்த



வேண்டியதைத் திருத்தித்தான் அனுப்புவார். அவருடைய கையெழுத்து அழகாக இராது. இளமையிலேயே, அழகாகக் கையெழுத்து எழுதிப் பழகவில்லையே என அவர் வருந்தினார்.

எதுவும் சுத்தமாயும், ஒழுங்காயும் இருப்பதை அவர் விரும்புவார். அவருடைய ஆடைகளும் மற்றப் பொருள் களும் சுத்தமாகவும் அழகாகவுமிருக்கும்.

காந்தி எதைச் செய்தாலும் திர யோசித்தே செய்வார். தாம் பேசுகிற வார்த்தைகளை யோசித்தே பேசுவார். அவர் எழுதுவதிலும், பேசுவதிலும் பயனில்லாத வார்த்தை ஒன்று கூட இராது. பிறர் மனம் புண்படும்படி பேசவேமாட்டார். ஆனால், கள்ளங் கபடமின்றித் தம் மனத்தில் பட்டதைச் சொல்லுவார்.

எல்லாருடனும் சந்தோஷமாகப் பேசுவார். எப்படிப் பட்ட வேலையில் ஈடுபட்டிருந்தாலும், குழந்தைகள் வந்தால் அவர்களுடன் விளையாடுவார். எல்லாக் காரியங்களையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்வார். இரவில் சிறிது நேரமே தூங்குவார். தம் வேலைகளைத் தாமே செய்வார். அவர் இராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண்டே தம்மைப் பார்க்க வந்தவர்களுடன் பேசுவார்.

ஏழைகளிடத்திலும், தாழ்த்தப்பட்டவர்களிடத்திலும் அவருக்கு அன்பு அதிகம். அவர் ஹரிஜனங்களிடையே வசித்துவந்தார். அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற் காக அல்லும் பகலும் பாடுபட்டார்.

நாட்டின் விடுதலை இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தினர். தேச சேவையிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார். தேச ஒற்றுமைக்காகவே தமது உயிரையும் கொடுத்தார். அவரை தேசத்தின் பிதா என்றும் மகாத்மா என்றும் மக்கள் போற்றுகிறார்கள்.

### பயிற்சிகள்

**I. சொற்பயிற்சி:**

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்.

| | |
|---|---|
| பண்புகள் | ஹரிஜனங்கள் |
| புண்படும்படி | அல்லும் பகலும் |
| கள்ளங் கபடமின்றி | இயக்கம் |
| திரயோசித்து | அனுவசியம் |

II. வினுக்கள்

1. காந்தி எப்படி அமர்வார்?
2. அவர் எதற்காக வருந்தினுர்?
3. அவர் பேச்சும் எழுத்தும் எவ்வாறு இருக்கும்?
4. மக்கள் அவரை ஏன் போற்றுகிறுர்கள்?

III. இலக்கணம்

எண் ஒருமை பன்மை என இருவகைப்படும். ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒருமை. (உ-ம்) மரம். பல பொருள்களைக் குறிக்கும் சொல் பன்மை (உ-ம்) மரங்கள்.

பயிற்சி:

1. கீழேகண்ட சொற்களில் ஒருமைச் சொற்கள் யாவை? பன்மைச் சொற்கள் யாவை?

பண்புகள், மேசை, நாற்காலி, கையெழுத்து, ஆடைகள், குழந்தைகள், இரவு, உணவு, வேலைகள், இராட்டினம், ஏழைகள், மக்கள்.

2. பின்வரும் சொற்றொடர்களிலுள்ள பெயர்ச் சொற்களின் உருபுகளை எடுத்துக்காட்டி அவை இன்ன வேற்றுமை என்று எழுது:—

1. காந்தியிடம் நாம் காணக்கூடிய சிறந்த பண்புகள் பல உள.
2. காந்தி எப்படிப்பட்ட வேலையில் ஈடுபட்டிருந்தாலும் குழந்தைகளுடன் விளையாடுவார்.
3. காந்தி எல்லாக் காரியங்களையும் குறித்த நேரத்தில் செய்வார்.
4. ஏழைகளிடத்தில் காந்திக்கு அதிக அன்பு உண்டு.
5. ஹரிஜனங்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காகக் காந்தி பாடுபட்டார்.

# 18. செய்தித்தாள்

## (பத்திரிகைபற்றி உரையாடல்)

ராமு: தம்பி! இதோ இன்றைய செய்தித்தாள் இருக்கிறது, இப்பொழுதுதான் வந்தது. நீ படித்து விட்டுக் கொடு.

கோபு: அண்ணு! இது நமக்கு எதற்கு? இதைப் படிப்பதால் என்ன பயன்? பெரியவர்கள் அல்லவா பத்திரிகை படிக்கவேண்டும்.

ராமு: தம்பி! அப்படிச் சொல்லாதே. இதில் நீயும் படிக்கத்தக்க விஷயங்கள் இருக்கின்றன. விளையாட்டுப்பகுதி இருக்கிறது. உலக சமாச்சாரங்கள் இருக்கின்றன. சிறுகதைகள் உள்ளன. பெரியோரின் பிரசங்கங்களும் இதில் உள்ளன.

கோபு: இதைப் படிப்பது கடினமாக இருக்கிறதே! எங்கே தொடங்கவேண்டும், எங்கே முடிக்கவேண்டும் என்பதே தெரியவில்லையே!

ராமு: முதலில் படிப்பது கடினமாகத்தானிருக்கும். ஆனல் வழக்கமாகப் படித்து வந்தால் மிகவும் சுலபமாகி விடும்.

கோபு: இங்கே பல ஊர்களின் பெயர்கள் காணப்படுகின்றனவே! அவை ஏன்?

ராமு: அவை அந்நிய நாட்டுச் செய்திகள். நம் நாட்டின் பல நகரங்களின் முக்கிய செய்திகளும் அங்கே வெளியிடப்பட்டுள்ளன. நம் ஊரில் ஒரு மோட்டார் விபத்து நேர்ந்த தென்ருல், அது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். உன் பள்ளிக்கூடப் பரிசு வி[illegible] விவரங்களைப் பத்திரிகையில் படிக்க நீ விரும்புவா[illegible] யல்லவா?

கோபு: இவற்றையெல்லாம் சென்னையிலுள்ள பத்திரிகைக் காரர்கள் எவ்வாறு தெரிந்து கொள்கிருர்கள்?

ராமு: இந்தப் பத்திரிகை முழுவதும் ஒருவராலேயே எழுதப்பட்டதல்ல. பல இடங்களிலும் நிருபர்கள்

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பத்திரிகை ஆசிரியருக்கு உடனுக்குடன் எழுதி அனுப்புவார்கள். மிக்க அவசரமான செய்திகளைத் தந்தி மூலமாக அனுப்புவார்கள். பத்திரிகை ஆசிரியர் செய்திகளைத் தொகுத்து அவற்றை வெளியிடுவார். அயல்நாட்டுச் செய்திகளைச் சேகரித்து அனுப்புவதற்காகச் சில செய்தி ஸ்தாபனங்களும் இருக்கின்றன.

கோபு: இந்தப் பக்கத்தில் வியாபார விளம்பரங்கள் போடப்பட்டிருக்கின்றனவே? இவற்றால் பயன் என்ன?

ராமு: "வர்த்தகத்தின் வெற்றி விளம்பரத்தில் இருக்கிறது" என்பதைக் கேட்டிருக்கிறாயா? கண்ணைக் கவரும் விளம்பரங்களின் மூலம் வியாபாரிகள் தங்கள் சரக்குகளைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்றனர். முக்கியப் பட்டினங்களில் சாமான்களின் விலைவாசிகள் பத்திரிகைகளின் மூலம் விளம்பரம் செய்யப்படுகின்றன. அதை அனுசரித்துக் கிராமங்களிலுள்ள வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்க முடிகிறது.

கோபு: விளையாட்டுப் போட்டிகளை ஏன் பத்திரிகைகளில் போடுகிறார்கள்.

ராமு: நீ ஹாக்கிப் போட்டிப் பந்தயங்களைப் பார்க்கப் போவதில்லையா? அதைப் பார்ப்பதில் எவ்வளவு ஆனந்தம் அடைகிறாய்? அதைப்போல உலகின் பல பாகங்களிலும் பிரபல ஆட்டக்காரர்கள் போட்டி விளையாட்டுக்கள் நடத்தும்பொழுது, பொதுமக்கள் யாவரும் அதன் முடிவுகளை ஆவலுடன் கவனித்து வருகின்றனர்.

கோபு: பத்திரிகைகள் எல்லாம் தினசரி பிரசுரிக்கப்படு கின்றனவா?

ராமு: இல்லை. பத்திரிகைகளில் பலவிதம் உண்டு. சில தினசரிப் பத்திரிகைகள், சில வாரப் பத்திரிகைகள், சில மாதத்திற் கொருமுறை வெளிவரும் மாதப் பத்திரிகைகள்.

கோபு: அண்ணா! பத்திரிகை படிப்பது அறிவு வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் என்று தெரிந்துகொண்டேன். இனிமேல் நானும் ஒழுங்காகப் பத்திரிகை படிக்கப் போகிறேன். நம் வீட்டின் பக்கத்தில் உள்ள வாசகசாலையில் ஓர் அங்கத்தினனாக என் பெயரை இன்றே பதிவு செய்துகொள்ளுகிறேன்.

ராமு: தம்பி! நல்லது, அப்படியே செய்.

## பயிற்சிகள்

**I. சொற் பயிற்சி:**

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய சொற்கள்:

பத்திரிகை, பிரசுரிக்கப்படும், ஆசிரியர், ஊதியம், உடனுக் குடன், சம்பவங்கள், பதிவு செய்துகொள்ளுதல்.

**II. வினாக்கள்:**

1. பத்திரிகை ஆசிரியருக்குச் செய்திகள் எவ்வாறு கிடைக் கின்றன?
2. தினசரிப் பத்திரிகைகளில் எத்தகைய செய்திகள் வெளி யிடப்படுகின்றன?
3. பத்திரிகை படிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
4. பத்திரிகையில் ஏன் விளம்பரங்கள் வெளியிடப்படு கின்றன?
5. இரண்டு பத்திரிகைகளின் பெயர்களைக் கூறு.

III. கட்டுரைப் பயிற்சி:

உங்கள் பள்ளிக்கூடத்தில் சுதந்திர தின விழா நடந்ததைப் பற்றிப் பத்திரிகைக்கு எழுதுவதுபோல் எட்டு வரிகளில் ஒரு கட்டுரை எழுதவும்.

IV. இலக்கணம்:

1. பத்திரிகை நேற்று **வந்தது.**
2. நான் செய்தித்தாள் **வாசிக்கிறேன்.**
3. அவன் செய்தித்தாள் **வாசிப்பான்.**

இம் மூன்று வினைச்சொற்களும் மூன்று காலங்களைக் குறிக்கின்றன.

**வந்தது** என்னும் சொல் இறந்தகாலம்.
**வாசிக்கிறேன்** என்னும் சொல் நிகழ்காலம்.
**வாசிப்பான்** என்னும் சொல் எதிர்காலம்.
எனவே காலங்கள் மூன்று வகைப்படும்.
வினைமுற்றுக்கள் மூன்று காலங்களிலும் வரும்.

# 19. பத்திரிகைச் செய்தி

*28—6—50*

**வன மகோற்சவ வாரத்தில் மரங்களை நட்டு, அவைகளைப் பேணி வளருங்கள்.**

**பொது மக்களுக்கு முதல் மந்திரியின் வேண்டுகோள்.**

ஜுன் 27.

'தேசமெங்கும் அடுத்த வாரம் தேசீயத் திருவிழாவாகக் கொண்டாடப்படும். அந்த வாரத்தில் ஏராளமான மரங்கள் நடப்படும்' என முதல் மந்திரி குமாரசாமி ராஜா விடுத்திருக்கும் அறிக்கையில் கூறுகிருர். 'சென்ற பல ஆண்டுகளாகக் காடுகள் அழிந்து வந்திருப்பது காரணமாய் சிதோஷ்ண நிலை அடியோடு மாறிவிட்டது. தண்ணீர்த் தட்டுக்கும் நிலவளக் குறைவுக்கும் இது காரணமாகி இருக்கிறது' என முதன் மந்திரி குறிப்பிடுகிருர்.

'காடு அழிப்பு வேலை துவக்கத்தில் சிறுகச் சிறுக நடந்துவந்து இன்று மாகாணத்தின் சமுதாயப் பொருளாதார அமைப்பையே பாதிக்கும் நிலைமையை அடைந்திருக்கிறது. தற்போதுதான் மரங்களின் அருமையை நாம் நன்கு அறிய ஆரம்பித்திருக்கிருேம் என முதல் மந்திரி தனது அறிக்கையில் கூறுகிருர்.

மரங்களினுல் நாம் பல வித அனுகூலங்கள் அடைகிருேம் என்பது ஒருபுறமிருக்க, மாபெரும் காடுகளில் தான் இந்தியாவின் அறநெறிகள் பிறந்தன. நம் நாட்டின் பழைய வரலாறு காடுகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

நம் மூதாதையர் காடுகளின் உபயோகத்தை நன்கு உணர்ந்திருந்தினர். மரங்களைப் பேணியதோடு அவற்றை முறையாகவும் நட்டுக் காப்பாற்றி வந்தனர். அசோகச் சக்கரவர்த்தி சாலைகளின் இருபுறங்களிலும் ஆலமரங்கள் நட்டார்

என வரலாறு கூறுகிறது. துரதிர்ஷ்டவசமாக கவனிப்பின்மையாலும் போர்கள் காரணமாகவும் காடுகள் அழிந்து விட்டன.

காடுகள் அழிவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் நாம் தற்போது ஈடுபட்டிருக்கிறோம். சென்ற இரண்டு வருட காலமாக, சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது மரம் நடும் பணி நடந்துவருகிறது. ஆனால், ஆகஸ்டு மாதத்தில் நடப்படும் மரங்களில் பல, பருவக் கோளாறு காரணமாகப் பட்டுப் போகின்றன. ஆகவேதான், பருவ மழை ஆரம்பமாகும் ஜுலை மாதம் மரம் நடுவதற்கேற்ற மாதம் எனத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

மாகாண மக்கள் இந்த மகோற்சவத்தின் போது மரங்கள் நட்டு அவற்றைத் தொடர்ந்து பேணிக் காக்க வேண்டும். விவசாய, காட்டிலாக்கா அதிகாரிகள் இவ் விஷயத்தில் தேவையான எல்லா உதவியையும் அளிப்பார்கள்.

## பயிற்சிகள்

**வினாக்கள் :**

I. (1) மரம் நடுவதற்கு ஏற்ற காலம் யாது?

(2) காடுகள் அழியக் காரணங்கள் யாவை?

(3) காடுகள் அழிந்ததால் ஏற்பட்டுள்ள தீமைகள் யாவை?

(4) எந்த அரசாங்க இலாக்காக்கள் மரம் நடும் விஷயத்தில் உதவி அளிப்பார்கள்?

II. உன் ஊரில் நடந்த மரம் நடும் விழாவைப்பற்றிப் பத்திரிகைக்கு ஒரு செய்திக் குறிப்பு எழுது.

# 20. வீர கட்டபொம்மு

நம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அழகிய வீர பாண்டியன்புரம் என்னும் ஊரை ஆண்டுவந்த ஜெகவீர பாண்டியன் என்னும் சிற்றரசரின் தளபதியாக வீர கட்டபொம்மன் என்பவர் இருந்தார். இவருடைய வீரத்தை மெச்சிய அரசர் இவரைக் "கெட்டிபொம்மு" என்றழைத்தார். இப்பெயரே நாளடைவில் "கட்டபொம்மு" என்று மாறி விட்டது. ஜெகவீர பாண்டியனுக்குப்பிறகு கட்டபொம்முவே அரசரானார்.



வீர கட்டபொம்மன் அரசரான பிறகு ஒருநாள் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார். வேட்டையில் ஒரு முயலை ஏழு நாய்கள் துரத்திச் சென்றன. அம் முயல் ஓரிடத்தை அடைந்ததும் திடீரென்று திரும்பி வேட்டை நாய்களை எதிர்த்து நின்றது. இதைக் கண்ட கட்டபொம்மன் அந்த இடம் சக்திபெற்றதாய் இருக்கவேண்டும் என்று கருதி, அந்த இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டி, அதைத் தமது பாட்டனாரின் பெயரால் "பாஞ்சாலங்குறிச்சி" என்று அழைத்தார்.

அந்தக் கட்டபொம்முவின் மரபில் நாற்பத்தேழாவது மன்னராக வந்தவர்தான் சரித்திரப் பிரசித்தி பெற்ற வீரர் "கட்டபொம்மு" என்பவர். இவர் 1760-ம் ஆண்டு, ஜனவரி மாதம் பிறந்தார். இவருக்கு வீரபாண்டியன் எனப் பெயரிட்டனர்.

வீரபாண்டியன் தமது முப்பதாவது வயதில் பாஞ்சாலங் குறிச்சி மன்னர் ஆனர். அக்காலத்தில் தென்னடு முழுவதும் ஆர்க்காட்டு நவாபுக்கு உட்பட்டிருந்தது. சிற்றரசர்கள் நவாபுக்கு ஒழுங்காகக் கப்பம் செலுத்தாமல் இருந்தார்கள். அதனல் நவாபு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து ஏராளமான தொகை கடன் வாங்க வேண்டியிருந்தது. அதற்குப் பதிலாகச் சிற்றரசர்களிட மிருந்து தமக்கு வரவேண்டிய கப்பத்தைக் கம்பெனியாரே வசூலித்துக்கொள்ளும் உரிமையை அவர்கட்கு அளித்தார். வாணிபம் செய்யவந்த ஆங்கிலேயர்கள் வரிவசூல் செய்யும் அதிகாரிகளாக மாறினர்கள். படை வலியும் சூழ்ச்சித் திறனுமுடைய ஆங்கிலேயரை எதிர்க்க முடியாத பாளையக் காரர்கள் அனைவரும் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டச் சம்மதித்தனர். ஆனல், கட்டபொம்மு அந்நிய ஆதிக்கத் துக்குக் கீழ்ப்படிய விரும்பவில்லை. ஆகவே, அவர் கம்பெனியாருக்குக் கப்பம் கட்ட மறுத்தார்.

வெள்ளையர்கள் அவரை இணங்கச் செய்யப் பல முயற்சிகள் செய்து பார்த்தனர். ஆனலும் கட்டபொம்மு கீழ்ப்படிய மறுத்தார். ஆண்டுகள் பல சென்றன. கடைசி யாக ஆங்கிலேயர் படைவலிமையால் கட்டபொம்முவை அடக்கத் தீர்மானித்தனர்.

திருநெல்வேலிக் கலெக்டரான ஜாக்ஸன் என்பவர் கட்டபொம்முவுடன் சமாதானம் செய்துகொள்வதாகக் கூறித் தம்மை வந்து பார்க்கும்படி அவருக்கு அழைப்பு அனுப்பினர். கட்டபொம்மு அவரது அழைப்பை ஏற்றுத் திருநெல்வேலி சென்றார். கலெக்டர் துரை கட்டபொம்முவை வஞ்சமாகச் சிறைசெய்ய வேண்டுமென்று சூழ்ச்சி செய்திருந்தார், ஆதலின் வந்தவரை மரியாதையாக வரவேற்காமல் அவமதிப்பாக நடத்தினர். மேலும் கப்பம்

செலுத்திக் கீழ்ப்படியாவிட்டால் சிறையில் இருக்கவேண்டும் என்றும் பயமுறுத்தினர். அவருடைய படைவீரர்கள் கட்டபொம்முவைக் கைதுசெய்ய முயன்றனர். உடனே கட்டபொம்மு வாளை உருவினர். எதிர்த்தவர்கள் யாவரையும் வெட்டி வீழ்த்தினர். பிறகு தம்பிமார்களுடன் வெளியேறிப் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தார்.

கம்பெனியார் கட்டபொம்முவை எவ்விதத்திலும் அடக்கித் தங்கள் கௌரவத்தை நிலைநாட்டத் தீர்மானித்தனர். மேஜர் பானர்மென் என்னும் படைத்தலைவர் ஒரு சேனையுடன் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகையிட்டார். பீரங்கிகள் கோட்டைமீது குண்டுமாரி பொழிந்தன. கட்டபொம்முவும், அவருடைய சகோதரரும், படைவீரரும் வீராவேசத்துடன் போர் புரிந்தனர். ஆயினும், ஆங்கிலேயரின் பீரங்கிகளை எதிர்த்து நிற்க முடியவில்லை. முடிவில் கட்டபொம்மு தமது சகோதரருடன் தந்திரமாகக் கோட்டையைவிட்டு வெளியேறினர்.

கட்டபொம்மு கோட்டையில் இல்லை என்பதை அறிந்த ஆங்கிலேயப் படைகள் தைரியமாகக் கோட்டைக்குள் பிரவேசித்தன. பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டையைத் தகர்த்துத் தரைமட்டமாக்கின.

தப்பிச்சென்ற கட்டபொம்மு புதுக்கோட்டை மன்னரிடம் அடைக்கலம் புகுந்தார். புதுக்கோட்டை மன்னர் அவருடைய நண்பர்போல் நடித்து, அவரை ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுத்தார். கட்டபொம்முவும் அவருடைய சகோதரர்களும் ஆங்கிலேயரால் கைதுசெய்யப் பட்டனர். கட்டபொம்முவைக் குற்றவாளி என்று ஆங்கிலேயர் தீர்ப்புக் கூறினர். கோவில்பட்டித் தாலுகாவில் கயத்தாறு என்னுமிடத்தில் கட்டபொம்மு தூக்கிலிடப் பட்டார்.

இவ்விதமாக, கட்டபொம்மு இந்திய சுதந்திரப்போரை முதன்முதலாகத் தமிழகத்தில் தொடங்கித் தம் உயிரைத் தியாகம் செய்தார். அவர் இறந்து நூற்றைம்பது ஆண்டுகளாகின்றன. ஆயினும் அவருடைய வீரமும் புகழும் இன்றும் நிலைத்திருக்கின்றன.

## பயிற்சிகள்

I. சொற் பயிற்சி :—

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய சொற்கள்:—

சிற்றரசன், தளபதி, கப்பம், உரிமை, வஞ்சகம், கௌரவம், வீராவேசம், அரசர் மரபு, வாணிபம், சூழ்ச்சித்திறன்.

II. கேள்விகள் :

1. பாஞ்சாலங்குறிச்சி யாரால் கட்டப்பட்டது?
2. ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கவேண்டிய காரணம் யாது?
3. கட்டபொம்முவைக் காட்டிக்கொடுத்தது யார்?
4. கட்டபொம்முவின் புகழ் இன்னும் நிலைத்திருக்கக் காரணம் யாது?

III. கட்டுரைப் பயிற்சி:

கட்டபொம்முவின் வாழ்க்கை வரலாற்றை எட்டு வாக்கியங்களில் சுருக்கி எழுது.

IV. இலக்கணப் பயிற்சி:

பின்வரும் வாக்கியங்களில் தகுந்த வினைச் சொற்களை அமைக்கவும்:—

1. ஜகவீர பாண்டியனுக்குப் பிறகு கட்டபொம்முவே——
2. வீர கட்டபொம்மன் ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குச்——————
3. வேட்டையில் ஒரு முயலை ஏழு நாய்கள் துரத்திச்——
4. அவருடைய புகழ் இன்னும்————
5. வீர கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற வீரராக என்றும் போற்றப்——

# 21. பண்டிகைகள்

நம்முடைய தேசத்தில் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய பல மதத்தினர் இருக்கின்றனர். ஒவ்வொரு மதத்தினரும் சில திருவிழாக்கள் கொண்டாடுகின்றனர். அந்தத் திருவிழாக்கள் அல்லது பண்டிகைகளின் கருத்துக்களை உணர்ந்துகொண்டால், வேற்றுமை உணர்ச்சிகள் நீங்கிச் சமூக ஒற்றுமை ஏற்படக்கூடும்.

பொங்கல் பண்டிகை: இது இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் முக்கியமானது. நம்முடைய தேசம் விவசாயத்தையே முக்கியத் தொழிலாக உடையது. தொன்றுதொட்டே விவசாயிகள் பயிர் விளைவுக்கும், சகல வாழ்வுக்கும் சூரியனே காரணம் என்று அறிந்து அதனை வணங்கி வருவாராயினர்.

அவர்கள் பயிர் செய்த நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, மஞ்சள், கிழங்குகள், ஆகியவை விளைந்து அறுவடையாகும் சமயம் இப்பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். தை மாதம், முதல் தேதியன்று பொங்கல் பண்டிகை கொண்டாடப் படுகிறது. சகல வளங்களையும் தங்களுக் களித்த சூரிய பகவானுக்குப் புது நெல் குத்திப் புதுப்பானையில் பொங்கலிடுகிறார்கள்.

பொங்கல் பண்டிகையை நன்றி தெரிவிக்கும் பண்டிகை எனலாம். கரும்பு, கதலிப்பழம், மஞ்சள், கிழங்கு முதலியன கடவுளுக்கு நிவேதனமாகப் படைக்கப்படுகின்றன. ஆடவரும், பெண்டிரும் புதிய ஆடை அணிந்து, பொங்கல் விருந்துண்டு ஆநந்தம் அடைகின்றனர்.

பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. பயிர்த் தொழிலுக்கு உதவி புரியும் எருதுகளுடைய நலத்தைக் கோரி, இந்த விழா நடைபெறுகிறது. மாட்டுத் தொழுவங்களின் சுவர்களும், தரையும் சுத்தம் செய்யப்படுகின்றன. கால் நடைகள் சுத்தமாகக் குளிப்பாட்டப்படுகின்றன. மாடுகளின் கொம்புகளின் மேல வர்ணங்கள் தீட்டப்படுகின்றன. அவைகளுக்கு நல்ல தீனி அளிக்கப்படுகிறது. கடவுளுக்குப்

பொங்கலிட்ட பின்னர், மாடுகள் அவிழ்த்து விடப்படு கின்றன. சில இடங்களில் கால் நடைகளின் ஓட்டப் பந்தயங்களும் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டார் இந்தப் பண்டிகையை மிகவும் முக்கியமாகக் கருதுகின்றனர்.

**மோகரம்:** இது முஸ்லீம்கள் கொண்டாடும் முக்கியமான பண்டிகைகளில் ஒன்று. இஸ்லாம் மதத்தை ஏற்படுத்திய முகமது நபியின் பேரர்களாகிய அஸேன், உஸேன் என்ப வர்களின் மரணத்தின் ஞாபகார்த்தமாக இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது. நபி நாயகத்தின் பேரர்கள், தங்கள் பாட்டனாரின் ஏராளமான சொத்துக்களை அனுப வித்து வந்தனர். அவர்கள் மீது, பாக்தாத் மன்னரான காலிப் பொறாமை கொண்டு, ஒரு சைனியத்தை அனுப்பி அவர்களைத் தாக்கினார். மூத்தவரான அஸேன் சண்டையில் மாண்டார். இளையவரான உஸேன் தப்பியோடி, ஒரு படை யைத் திரட்டி, காலிப்பின் சேனைகளை எதிர்த்துப் போராடி னார். அன்ன ஆகாரமின்றிப், பத்து தினங்கள் போராடி யும், பத்தாவது தினத்தில் கொல்லப்பட்டார்.

அந்தத் தினம் முஸ்லீம்களால் துக்க தினமாகக் கொண்டாடப்படுகின்றது. முஸ்லீம்கள் பத்து தினங்கள் விரதமிருந்து பிரார்த்தனை நடத்துகின்றனர். பத்தாவது தினத்தன்று துக்ககரமான பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர்வலமாக வருகின்றனர்.

**கிறிஸ்மஸ்:** இது கிறிஸ்தவர்கள் கொண்டாடும் மிக முக்கியமான பண்டிகை. ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 25-ம் தேதியன்று இது கொண்டாடப்படுகிறது. இயேசுநாதர் பிறந்த சுப தினத்தின் ஞாபகார்த்தமாக இது கொண்டாடப்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகைக்குச் சில தினங்களுக்கு முன், கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளை வெள்ளையடித்து, பூக்கள், பச்சிலைகள், மின்சார விளக்குகள் இவற்றால் அலங்கரிக்கின்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தின நாள் மாலையில், கிறிஸ்தவர்கள் ஆலயத்தில் கூடி, பாடல்கள் பாடி ஆனந் திப்பார்கள். இரவில் சிறுவர்கள் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டு, வீடு வீடாகச் சென்று

மக்களை மகிழுவிப்பார்கள். கிறிஸ்மஸ் பண்டிகை யன்று அதிகாலையில் நாலு அல்லது நாலரை மணிக்குப், பலவித பூக்களினுலும், பச்சிலைகளினுலும், தீபங்களினுலும் அலங் கரிக்கப்பட்ட தேவாலயங்களில் தொண்டர்கள் கூடிக் கடவுளை ஆராதிப்பார்கள். ஆராதனை முடிந்தபின், எல் லோரும் அவரவர் வீடுகளுக்குச் சென்று, விருந்து அருந்தி மகிழ்வர். பின்னர் நண்பர்களிடமிருந்தும், உற்றூர் உறவின ரிடமிருந்தும் வந்திருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்திகளை வாசித்து அகமகிழ்வர். ஏழைகளுக்குத் தானதர்மம் செய்து அவர்களையும் மகிழ்விப்பர். மாலையில் சிறுவர்களுக்கு விளையாட்டுக்கள் வைத்து, அவர்களுக்குப் பரிசுகளும் தின் பண்டங்களும் வழங்கி அவர்களை மகிழ்விப்பர். கிறிஸ்மஸ் நாள் முதல் ஜனவரி முதலாம் தேதி வரை கிறிஸ்தவர்களின் வீடுகளில் கொண்டாட்டமும், குதூகலமும் மிகுதியாக இருக்கும்.

## பயிற்சிகள்

### I. சொற் பயிற்சி

வாக்கியங்களில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்:-

| | | |
|---|---|---|
| மதத்தினர் | சுபதினம் | குதூகலம் |
| திருவிழா | அருந்தி | நிவேதனம் |
| தொன்றுதொட்டு | அகமகிழ்வர் | சமூக ஒற்றுமை |
| ஞாபகார்த்தம் | வழங்க | விரதம் |

### II. வினுக்கள்

1. நம்தேசத்தில் வாழும் மூன்று முக்கிய மதத்தினர் யாவர்?
2. பிற மதத்தவர்களுடைய பண்டிகைகளின் கருத்துக்களை நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் யாது?
3. பொங்கல் பண்டிகை, மொகரம் கிறிஸ்மஸ் இவை ஏன் கொண்டாடப் படுகின்றன?

III. கட்டுரைப் பயிற்சி:

நீ கொண்டாடிய ஒரு பண்டிகையைப் பற்றிப் பத்து வரிகள் எழுது

IV. இலக்கணப் பயிற்சி:

வாக்கியங்களை முடித்தெழுது :—

1. நான் கடவுளை வணங்குகிறேன்
2. நாங்கள் கடவுளை ?
3. நீ கடவுளை ?
4. நீங்கள் கடவுளை ?
5. அவன் கடவுளை ?
6. அவள் கடவுளை ?
7. அது கடவுளை ?
8. அவர்கள் கடவுளை ?
9. அவைகள் கடவுளை ?

# 22. ஒற்றுமை—(பாட்டு)

1. தெய்வம் பலபலச் சொல்லி—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்,
உய்வதனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்

2. யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டா

3. வண்ணங்கள் வேற்றுமை பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை இல்லை,
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்

4. அன்பென்று கொட்டுமுரசே! மக்கள்
அத்தனை பேரும் நிகரே
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்றே கண்டால்.

சி. சுப்பிரமணிய பாரதியார்.

## I. கேள்விகள் :

1. மூடர் யார்?
2. தெய்வம் எங்குள்ளது?
3. மனிதர் யாவரும் ஒன்றே. எவ்வாறு?
4. இன்பங்கள் பெருக வழி யாது?

# 23. இயேசுநாதரின் பொன் மொழிகள்

இயேசுநாதர் தமது போதனையாலும், செயலாலும் மக்களுக்கு நல்வழியைக் காட்டினர். பெருந் திரளான மக்கள் அவரது அரிய போதனையைக் கேட்பதற்காக, அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். தாம் பேசுவது



எல்லோருக்கும் நன்ருகக் கேட்கும் பொருட்டு அவர் ஒரு மலைமீது ஏறி உட்கார்ந்தார். ஜனங்கள் அவரைச் சுற்றிலும் அமர்ந்து, அவர் சொல்லும் புத்திமதிகளை

ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். அச் சமயத்தில் அவர்களுக்கு இயேசுநாதர் பின் வரும் பொன்மொழிகளை உபதேசித்தருளினர்.

1. ஆவியில் தரித்திரர் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
2. துயரப்படுவோர் பாக்கியவான்கள்; அவர்கள் தேற்றப்படுவார்கள்.
3. சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.
4. நீதியின்மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள்.
5. இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
6. இருதயத்தில் சுத்தமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.
7. சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்; அவர்கள் கடவுளின் புத்திரர் எனப்படுவார்கள்.
8. நீதியினிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருப்பதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்.

### பயிற்சிகள்

**I. சொற்பயிற்சி:**

வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்:— போதனை, பாக்கியவான்கள், ஆவல், துயரப்படுவோர், தரிசிப்பவர்கள், பொன்மொழி.

**II. கேள்விகள்:**

1. இயேசுநாதரை மக்கள் ஏன் பின்தொடர்ந்தனர்?
2. இயேசுநாதர் அருளிச்செய்த உபதேச மொழிகளுள் நான்கைக் கூறு?
3. கடவுளின் தரிசனம் யாருக்குக் கிடைக்கும்?
4. யார் கடவுளின் புத்திரர் என அழைக்கப்படுவர்?

III. இலக்கணம்:

'இயேசுநாதர் தம் போதனையாலும், செயலாலும் மக்களுக்கு நல்வழியைக் காட்டினர்'. இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது. அவை ஒவ்வொன்றிற்கும் சொல் இலக்கணம் கூறு:—

ஒரு பெயர்ச் சொல்லின் வகை, திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகியவற்றைச் சொல்வதையே, சொல் இலக்கணம் கூறுதல் என்று சொல்கிறோம்.

IV. இலக்கணப் பயிற்சி: கீழ்வரும் வாக்கியங்களை வினாக்களாக மாற்று:—

1. அவர் ஒரு மலைமீது ஏறி உட்கார்ந்தார்.
2. கடவுள் பரிபூரணர்.
3. இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்.
4. அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.

# 24. நிறுத்தக் குறிகள்

நாம் வாசிக்கும்பொழுது, நிறுத்தக் குறிகளைக் கவனித்து வாசித்தல் வேண்டும். நாம் வாசிக்கும் வாக்கியத்தின் பொருள் நன்றாக விளங்குவதற்காகப் பல நிறுத்தக் குறிகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த அடையாளங்களுள் முக்கியமானவை முற்றுப்புள்ளி, முக்கால் புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி என்பனவாம். இவை தவிர வினாக்குறி, உணர்ச்சிக்குறி என வேறு இரண்டு குறிகளும் உள.

. இது முற்றுப்புள்ளி. ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இப் புள்ளி இடப்பட்டிருக்கும். அது ஒரு பூரணமான நிறுத்தலைக் குறிப்பது. இந்தப் புள்ளி வரும் இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

: இது முக்கால் புள்ளி. இந்த அடையாளம் உள்ள இடங்களில் மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

; இது அரைப்புள்ளி. இதற்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

, இது காற்புள்ளி எனப்படும். இது எல்லாவற்றிலும் சுருக்கமான நிறுத்தக் குறி. இந்த அடையாளம் உள்ள இடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். கண் இமைக்கும் கால அளவுக்கு மாத்திரை என்று பெயர்.

? இது வினாக்குறி எனப்படும். கேள்வி வாக்கியங்களின் முடிவில் இக் குறியை அமைக்கிறோம். இக்குறி இட்ட இடத்தில் முற்றுப் புள்ளி இட்ட இடத்தைப்போல் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். இக் குறியிட்ட வாக்கியங்களைக் கேள்வி கேட்பது போன்று வாசிக்க வேண்டும்.

! இது உணர்ச்சிக் குறி. ஆச்சரியம், துக்கம் முதலிய வற்றைக் குறிக்கும் வார்த்தைகளின் முடிவிலும், வாக்கியங் களின் முடிவிலும் இது அமைக்கப்படுகிறது. இக் குறியிட்ட இடத்தில் அந்த உணர்ச்சிக்கேற்ப வாசிக்கவேண்டும். நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

## பயிற்சிகள்

### I. சொற் பயிற்சி:

வாக்கியத்தில் உபயோகித்துப் பழகவேண்டிய வார்த்தைகள் :- ஆச்சரியம், துக்கம், உணர்ச்சி, அடையாளம்.

### II. கேள்விகள்:

1. முக்கியமான நான்கு நிறுத்தக் குறிகள் யாவை ?
2. அவை ஒவ்வொன்றும் எதனைக் குறிப்பிடுகின்றன ?
3. வினாக்குறி எங்கே இடப்படுகின்றது ?
4. உணர்ச்சிக்குறி எதனைக் குறிப்பிடுகிறது ?
5. ஒரு மாத்திரை நேரம் என்பது என்ன ?

### III. பயிற்சி: பின்வரும் வாக்கியங்களில் தகுந்த இடங்களில், காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறிகளை அமைக்கவும் :—

1. ஆ இது எவ்வளவு அழகான பறவை
2. நல்ல ஜாதி மாடுகள் மைசூர் கராச்சி கத்தியவார் குண்டூர் முதலிய இடங்களில் வளர்க்கப்படுகின்றன
3. இந்தப் பேனா எங்கே வாங்கினாய்
4. நாய் அன்னியர்களைக் கண்டால் குரைக்கிறது

# 25. வீர சிவாஜி

விந்தியமலைக்குத் தெற்கிலிருந்து மைசூர் வரையில், மேற்குத்தொடர்ச்சி மலையின் இருபுறங்களிலும் வியாபித்துள்ள நாடு மகாராஷ்டிரம் என்பதாகும். அங்கு வசித்து வரும் ஜாதியினர் மகாராஷ்டிரர் எனப்படுவர். மகாராஷ்டிரர் பலசாலிகளாயும் சிறந்த போர்வீரர்களாயும் விளங்கினர்கள். அவர்கள் குதிரைச்சவாரி செய்வதில் வல்லவர்கள். மகாராஷ்டிரத்தில் ஒவ்வொரு குன்றின் மீதும் ஒரு கோட்டை இருந்தது. அக் கோட்டையின் தலைவன் சுற்றிலுமுள்ள கிராமங்களை ஆண்டுவந்தான். மகாராஷ்டிரர் தட்சிணத்தில் ஆண்டுவந்த முகம்மதிய சுல்தான்களிடம் போர்வீரர்களா யிருந்தனர்.

மகாராஷ்டிரரை ஒன்றுபடுத்தி, அவர்களைச் சிறந்த தேசாபிமானிகளாகச் செய்தவர் சிவாஜி என்னும் வீரர். அவர் ஷாஜி பான்ஸ்லே என்பவரின் புதல்வர். ஷாஜி பான்ஸ்லே, பீஜப்பூர் சுல்தானிடம் சேனைத்தலைவராக இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் ஜீஜீபாய். சிறு வயதில் சிவாஜி தமது தாயாருடன் பூனு என்னும் நகரில் வசித்துவந்தார். சிவாஜிக்குத் தயாரிடம் பிரியம் அதிகம். அவர் தமது தாய் சொல்லைத் தட்டுவதே யில்லை. ஜீஜீபாய் அவருக்கு இராமாயணம், மகாபாரதம் முதலிய கதைகளைச் சொல்லிவந்தார். அக்கதைகளில் வரும் சிறந்த வீரர்களைப் போலத் தாமும் ஒரு வீரராக விளங்கவேண்டுமென்று சிவாஜி விரும்பினர். அவர் சிறுவயதிலேயே குதிரையேற்றம், வில்வித்தை, வாள் வித்தை முதலியவற்றில் நன்கு பயின்று சிறந்த போர் வீரர் ஆனர். அவர் தேசாபிமானமும், தெய்வ பக்தியும் உடையவர். யாருக்கும் அடிமைப்படாத சுதந்திர இந்து இராஜியத்தை ஏற்படுத்த அவர் தீர்மானித்தார். சிவாஜி தம்மைப் போன்ற பல வாலிபர்களுடன் சேர்ந்து, குதிரை மீதேறி, மலைப் பிரதேசங்களில்

சுற்றியலைவார். அதனால், அவருக்கு மகாராஷ்டிர நாட்டிலுள்ள மலைக் குகைகள் எல்லாம் நன்கு தெரிந்திருந்தன.

தமது பத்தொன்பதாவது வயதில் அவர் ஒரு சிறு சேனையைத் திரட்டிக்கொண்டு பல கோட்டைகளைக் கைப்பற்றினர். பீஜப்பூர் சுல்தான் அவரை அடக்க முயன்ருன். ஆனால், சிவாஜி பீஜப்பூர் சேனையைச் சுலபமாகத் தோற்கடித்தார். சிவாஜியின் கீர்த்தி நாளுக்குநாள் அதிகரித்தது.

மொகலாயச் சக்கரவர்த்தியான ஔரங்கசீப் அவரை அடக்க ஒரு பெருஞ்சேனையை அனுப்பினர். சிவாஜியின்



சிறிய சேனை அதை எதிர்க்கமுடியவில்லை. ஆகவே, சிவாஜி தந்திரத்தால் அதைத் தோற்கடிக்கத் தீர்மானித்தார்.

சிவாஜி மாறுவேடம் பூண்டு, மொகலாயச் சேனைத் தலைவன் இருந்த வீட்டிற்குள் சென்று, அவனைத் திடீரென்று தாக்கினர். தலைவன் உயிர்தப்பி ஓடினன். தலைவனில்லாத அவனது சேனை, மகாராஷ்டிர சைனியத்தால் தோற்கடிக்கப்பட்டுச் சிதறிவிட்டது.

சிவாஜி பல வெற்றிகளை அடைந்தார். மகாராஷ்டிரரை ஒற்றுமைப்படுத்தினர். அவர்களைச் சிறந்த வீரர்களாகவும், தேசாபிமானிகளாகவும் செய்தார். சிவாஜி மகாராஜாவாக முடிதரித்து ஆறு ஆண்டுகள் சிறப்பாக அரசு புரிந்தார். குடிகள் அவருடைய ஆட்சியில், பல நன்மைகளைப் பெற்றனர். அவர் கல்விச்சாலைகளுக்கும், கோவில்களுக்கும் ஏராளமான பணத்தைச் செலவிட்டார். அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது.

## பயிற்சிகள்

### I. சொற்பயிற்சி:

வாக்கியங்களில் அமைத்துப் பழகவேண்டிய சொற்கள் :—

வியாபித்துள்ள, தேசாபிமானி, சுயேச்சை, சைனியம், கீர்த்தி, வல்லவர்கள், தழைத்தோங்கியது, முடிதரித்து.

### II. கேள்விகள்:

1. மகாராஷ்டிரர் யாவர்?
2. சிவாஜியின் நோக்கம் யாது?
3. சிவாஜி மொகலாய சேனையை எவ்வாறு தோற்கடித்தார்?
4. அவர் மகாராஷ்டிரருக்குச் செய்த சேவை யாது?

### III. இலக்கணப் பயிற்சி:

(a) கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களைப் பன்மையாக்கி வாக்கியங்களை எழுது.

1. அவன் குதிரைச் சவாரி செய்வதில் வல்லவன்.
2. கோட்டையின் தலைவன் சுற்றியுள்ள கிராமத்தை ஆண்டு வந்தான்.
3. வாலிபன் மலைப் பிரதேசத்திலேயே சுற்றி அலைந்தான்.

(b) அடியிலுள்ள சொற்றொடர்களில் காணும் பெயர், வினை, இடை, உரிச்சொற்களை எடுத்து எழுது.

1. குடிகள் அவருடைய ஆட்சியில் பல நன்மைகளைப் பெற்றனர்.
2. அவர் கல்விச்சாலைகளுக்கும், கோவில்களுக்கும் ஏராளமான பணத்தைச் செலவிட்டார்.
3. அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது.

# 26. தேயிலை

காப்பி, தேயிலை முதலிய பானங்களைத் தற்காலத்தில் தமிழ் நாட்டில் பலர் பருகுகின்றனர். இவை சமீப காலத்தில்தான் நம் நாட்டில் அதிகமாகப் பரவியுள்ளன.

தேயிலை முதன் முதலாகச் சீன தேசத்தில்தான் உண்டாயிற்று. நாளடைவில் அது மற்ற நாடுகளுக்குப் பரவிவிட்டது. தேயிலை மலைச் சாரல்களில் பயிரிடப்படுகிறது.



தேயிலை விதைகளை முதலில் ஓரிடத்தில் விதைப்பார்கள். அவை முளைத்துச் சிறு செடிகள் ஆனதும், அந்த நாற்றுக்களைப் பிடுங்கி வேறு இடங்களில் நடுவார்கள். இரண்டு அல்லது மூன்று அடி தூரத்திற்கு ஒன்று வீதம் குழிகள் தோண்டி, அவற்றில் குழிக்கு மூன்று அல்லது நான்கு கன்றுகள் வீதம் நடுவார்கள்.

மலைச்சாரல்களில் பெய்யும் மழை ஜலத்தால் செடிகள் செழித்து வளரும். தேயிலைச் செடிகள் சாதாரணமாகப் பன்னிரண்டடி உயரம் வரை வளரும். ஆனால், தோட்டக்காரர்கள் தேயிலைச் செடிகள் ஏழடி உயரத்திற்குமேல்

வளராதபடி, அவைகளைக் கத்தரித்து விடுவார்கள்: தேயிலைக் கன்றுகள், வைத்த மூன்ரும் ஆண்டில் பூக்கத் தொடங்கும். அப்பொழுது காணப்படும் இளந்தளிர்கள் பானத்திற்கு ஏற்றவை. இளந்தளிர்களைப் பறித்துப் பக்குவம் செய்வார்கள், வருடத்திற்கு மூன்று முறை இளந்தளிர்களைச் சேகரிப்பார்கள். தேயிலைத் தளிர்களை நிழலில் உலரவைப்பார்கள். உலர்ந்த தேயிலைத் தளிர்களை இருப்புச் சட்டியில் போட்டு வறுப்பார்கள். அவை கருமை நிறம் அடையும். இவ்வாறு பக்குவப்படுத்திய தேயிலையை ஈயத்தாளில் பொட்டலங்களாகக் கட்டியும், பெட்டிகளில் அடைத்தும் விற்பனைக்கு அனுப்புகிறுர்கள்.

நம் இந்தியா தேசத்தில் அஸ்ஸாம் மாகாணத்திலும், இமயமலைச் சாரலில் டார்ஜீலிங் பிரதேசத்திலும், சென்னை மாகாணத்தில் நீலகிரி மலை, சேர்வராயன் மலை, ஆனை மலை, முதலிய மலைச்சரிவுகளிலும் தேயிலை ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. காடுகளை அழித்து, மலைச் சரிவுகளில் தோட்டங்கள் உண்டாக்கப்படுகின்றன. இலங்கைத் தீவிலும், சீன தேசத்திலும் தேயிலை அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது.

தேயிலையை ஒரு பாத்திரத்தில் போட்டுக், கொதிக்கும் தண்ணீரை வேண்டிய அளவுக்கு ஊற்றி இரண்டு நிமிடங்கள் வைத்திருந்தால், அதில் தேயிலையின் சாறு இறங்கிவிடும். உடனே அந்தப் பானத்தை வடிகட்டி, அதில் பாலும் சர்க்கரையும் சேர்த்துப் பருகவேண்டும். தேயிலையை அதிக நேரம் வெந்நீரில் விட்டுவைத்தல் கூடாது. தேயிலைப் பானம் தயார்செய்தபின் அதிக நேரம் கழித்து அதைப் பருகவும் கூடாது.

காப்பி, தேயிலை முதலிய பானங்கள் களைப்பைப் போக்கிச், சுறுசுறுப்பை அளிக்கின்றன. ஆனல், அவற்றை அதிகமாக உபயோகித்தால், அவை ஜீரண சக்தியைக் குறைத்துவிடும். ஆகையால் அவற்றை மிதமாகப் பருகுவதே நலம். குளிர்ந்த சீதோஷ்ணமுள்ள மேல் நாடுகளில் வசிக்கும் மக்களுக்குச் சூடான தேனீர்ப் பானம் இன்றியமையாத தேவைகளுள் ஒன்று.

## பயிற்சிகள்

I. சொற்பயிற்சி:

(a) வாக்கியத்தில் அமைத்துப் பழகவேண்டிய வார்த்தைகள்: பானங்கள், பருகுகின்றனர், மலைச்சாரல், விற்பனை, இன்றியமையாத, களைப்பு, ஜீரணசக்தி.

(b) எதிர்ப்பதம் கூறு:- தற்காலம், நிழல், கருமை, மிதமாக.

II. கேள்விகள்:

1. தேயிலை எவ்விடங்களில் அதிகம் உண்டாகிறது?
2. தேயிலை பயிரிடப்படும் நாடுகளில் மூன்று கூறு.
3. தேயிலைப்பானத்தின் பயன் யாது?
4. தேயிலைப் பானம் தயார் செய்யும் விதம் யாது?

III. இலக்கணம்: ஒரு வாக்கியத்தில் முடிந்த தொழிலைக் குறிக்கும் சொல்லுக்கு **வினைமுற்று** என்று பெயர். 'நாம் தேயிலை பருகுகிறோம்' இதில் 'பருகுகிறோம்' என்னும் சொல் முடிந்த தொழிலைக் குறிக்கிறது. அது வினைமுற்று எனப்படும்.

முடிவடையாத தொழிலைக் குறிக்கும் சொல்லுக்கு எச்சம் என்று பெயர். வினைச்சொல்லைக்கொண்டு முடியும் சொல்லை **வினையெச்சம்** என்கிறோம். பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் சொல்லைப் **பெயரேச்சம்** என்று சொல்லுகிறோம்.

(உ-ம்) "தேயிலையை ஒரு பாத்திரத்தில் **போட்டுக்**, கொதிக்கும் தண்ணீரை வேண்டிய அளவு **ஊற்றி** இரண்டு நிமிடங்கள் **வைத்திருந்தால்**, அதில் தேயிலையின் சாறு இறங்கிவிடும்." இந்த வாக்கியத்தில் **போட்டு**, **ஊற்றி**, **வைத்திருந்தால்** என்னும் வினைச்சொற்கள், முடிவடையாத தொழிலைக் காட்டும் வினைச்சொற்கள். இவை வினைச்சொல்லைக்கொண்டு முடிவதால் வினையெச்சங்கள் எனப்படும்.

# 27. நெசவு

நூலை ஆடையாகச் செய்யும் தொழில் நெசவுத் தொழில் எனப்படும். நமது நாட்டில் நெசவுத் தொழில் நெடுநாளாகக் கையாளப்பட்டு வருகிறது. பழங்காலத்தில் மிகவும் மெல்லிய ஆடைகளை நம் முன்னோர் நெய்தனர். அவ்வாடைகளைப் பிறநாட்டு மக்கள் விரும்பி வாங்கிச்



சென்றனர். திருக்குறள் என்னும் சிறந்த நூலை இயற்றிய திருவள்ளுவரின் விருப்பமிக்க தொழில் நெசவுத்தொழிலே. அத்தகைய சிறந்த தொழிலைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்வது நமது கடமையாகும்.

நமது ஆடையை நுட்பமாகக் கவனித்தால், அதில் நெடுக்காகவும், குறுக்காகவும் உள்ள இருவகை நூல்களைக் காணலாம். அதில் நீளமாகச் செல்லும் நூலுக்குப் பாவு நூல் என்றும், குறுக்காகச் செல்லும் நூலுக்கு ஊடு நூல் என்றும் பெயர். இவ்விரண்டு நூல்களின் உபயோகத்தை அடிப்படையாகக் கொண்டே நெசவுத் தொழில் நடக்கிறது.

நெய்தலில், பாவு நூல்களை ஆடை இருக்கவேண்டிய அகலத்தில் பாவாக அமைத்துக் கொள்ளுகின்றனர். இவ்வாறு பாவு அமைத்தலைப் பாவு ஓடுதல் என்பர்.

நெசவாளர் தொண்ணூறு அல்லது நூறு கெஜ நீளத்தில் பாவு அமைக்க வேண்டுமாயின், நீளமான தெருக்களில் இரு கோடிகளிலும் இரண்டு உறுதியான கம்புகளை நாட்டுவார்கள். அவற்றிடையே, ஒரு கெஜ நீளத்தில் இரண்டிரண்டு கம்புகளை நிறுத்துவர். நூல்களை அக் கம்புகளில் ஒன்றுக்கொன்று எதிர்ப்புறஞ் செல்லுமாறு அமைப்பர். இதுவே பாவு ஓடுதலாகும்.

பாவு அமைத்தபின், அவற்றை நெய்தலுக்குத் தயாராக்குமாறு சுருட்டி, நூல்களின் ஒரு நுனியைத் தறியில் அமைந்துள்ள விழுதுகளுடன் இணைத்து விடுகின்றனர். இவ் விழுதுகளில் பாவின் ஒன்றுவிட்ட நூல்களை ஒரு வரிசையிலும், மற்றவற்றை மறு வரிசையிலும் அமைத்துத் தறியின் இரு மிதிகளை மாற்றி மாற்றி மிதிக்கப் பாவின் ஒரு பகுதி மேலும், மறு பகுதி கீழுஞ் செல்லும். அப்பொழுது அவற்றிடையே இடைவெளி உண்டாகும்.

சிறு ஓடங்களில் நூலைச் சுற்றி வைத்திருப்பர். அவ்வோடம் பாவின் ஊடே உண்டாக்கப்படும் வெளியில் இடமிருந்து வலமும், வலமிருந்து இடமுஞ் செல்லுமாறு, தறியின் கைப்பிடி மூலம் நகர்த்தப்படும். இவ்வாறு ஓடத்தின் மூலம் ஊடுநூல் பாவுநூலுடன் இணைக்கப்பட்டு, நெய்தல் தொழில் நடக்கிறது.

நமது நாட்டில் நெய்தலுக்கு வேண்டிய பருத்தி மிகுதியாக இருக்கிறது. அவற்றை இராட்டைமூலம் நூலாக்கி, நெசவு செய்து, ஆடையாக நாம் அணிதல் வேண்டும். நமக்கு வேண்டிய ஆடையை நாமே நெய்து அணிவதில் பெருமை யடைதல் வேண்டும்.

### பயிற்சி

**வினாக்கள் :**

1. நெசவின் சிறப்பைச் சுருக்கி எழுது.
2. பாவு நூல், ஊடு நூல் என்று எவற்றைக் கூறுகிறோம்?
3. பாவு ஓடுதல் என்றாலென்ன?
4. பாவு அமைத்தல் எவ்வாறு?
5. ஓடம் என்பது யாது?

# 28. மாதிரிக் கடிதங்கள்

8/14 கோவில் தெரு,
பாளையங்கோட்டை,
25—6—'50

## 1. பெற்றோர் தினவிழா

பிரியமுள்ள நண்பன் துரைச்சாமிக்கு, வணக்கம், நலம்.

உன் அன்பார்ந்த கடிதம் கிடைத்தது; மிகவும் சந்தோஷம். நேற்று எங்கள் பள்ளிக்கூடத்தில் பெற்றோர் தினவிழாக் கொண்டாடப்பட்டது. திருநெல்வேலித் திருச்சபையின் தலைவர் மகாகனம் செல்வின் அத்தியக்ஷர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பள்ளிக்கூடம் வாழைகள், கொடிகள், தோரணங்கள் ஆகியவற்றால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாணவ மாணவிகள் யாவரும் சுத்தமான ஆடையணிந்திருந்தனர். நகரிலுள்ள பல பிரமுகர்களும், பெற்றோர்களும் சபையில் குழுமியிருந்தனர். மாலை ஐந்து மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாயிற்று. தலைவரை வரவேற்று, எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒரு சொற்பொழிவாற்றினார். தலைவருக்கு ஒரு சிறுவன் மலர் மாலை சூட்டினான். மற்றொருவன் பூச்செண்டு அளித்தான்.

பெற்றோர் தினவிழாவின் முக்கியத்தைப் பற்றித் தலைவர் ஓர் அரிய பிரசங்கம் நிகழ்த்தினார். பின்னர், சிறுமிகள் கோலாட்டம் நடத்திக் காட்டினர். இரு சிறுமிகள் அழகாகப் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். எங்கள் வகுப்புப் பிள்ளைகள், தேகப்பயிற்சி விளையாட்டுகள் செய்து காட்டினர். அனைவருக்கும் சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியன வழங்கப்பட்டன.

தேசிய கீதத்துடன் மாலை ஆறரை மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

உன் அன்புள்ள சிநேகிதன்,
தர்மராஜ்.

மேல் விலாசம்:—

திருவாளர்,
ரா. துரைச்சாமி,
3-15 அரண்மனைத் தெரு,
தஞ்சாவூர்.

## 2. விண்ணப்பக் கடிதம்

4-15 முருகன்குறிச்சி,
பாளையங்கோட்டை,
26—6—'50

பாளையங்கோட்டை
நகர்மன்ற ஆணையாளர் அவர்களுக்கு,

ஐயா,

சமீபத்தில் பெய்த மழையால், முருகன்குறிச்சி நடுத் தெருவில், பல இடங்களில் பாதைகள் அரிக்கப்பட்டுள்ளன. அங்குப் பள்ளங்கள் உண்டாகித் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதனால் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு ஏதுவாகிறது. மேலும் ஜனங்கள் நடமாட்டத்திற்கும், வண்டிகள் போக்குவரத்திற்கும், இடைஞ்சலாகவும் இருக்கிறது. ஆகவே, அந்த இடங்களைப் பழுது பார்த்து வேண்டுவன செய்யும்படித் தங்களை வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
ஜான் சாமுவேல்

## 3. வியாபாரக் கடிதம்

பிள்ளையார்குளம்,
திருநெல்வேலி தாலுகா.
25—6—'50

டயோசிஸன் புத்தக வியாபார நிலையம்,
பாளையங்கோட்டை

ஐயா,

கீழ்க்கண்ட புத்தகங்களைத் தாமதமின்றித் தபால்மூலம் என் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முன் பணம் ரூபாய் ஏழு அனுப்பியுள்ளேன்.

| | | | எண் |
|---|---|---|---|
| 1. | இன்பவாசகம் முதல் புத்தகம் | | 10 |
| 2. | ,, | இரண்டாம் புத்தகம் | 8 |
| 3. | ,, | மூன்றாம் புத்தகம் | 7 |
| 4. | ,, | நான்காம் புத்தகம் | 6 |
| 5. | ,, | ஐந்தாம் புத்தகம் | 6 |
| 6. | திருக்குறள் மூலம் | | 10 |

இப்படிக்கு
தங்களின் உண்மையுள்ள
த. ஆசிர்வாதம்

I. பயிற்சி :

உன் தலைமை ஆசிரியருக்கு ஒரு விடுமுறை விண்ணப்பக் கடிதம் எழுது :—

II. இலக்கணம் :

பேசுவான் — பேசான்
வருவான் — வாரான்
போவான் — போகான்

இவற்றுள் இடது பக்கத்திலுள்ள மூன்று வினைச் சொற்களும் தொழில் நடப்பதைக் குறிக்கின்றன. அவை உடன்பாட்டு வினைச் சொற்கள் எனப்படும். வலது பக்கத்தில் உள்ள மூன்று வினைச் சொற்களும், தொழில் நடவாமையைக் குறிக்கின்றன. அவை எதிர்மறை வினைச்சொற்கள் எனப்படும். கீழ்க்கண்ட வினைச்சொற்களுள் உடன்பாட்டு வினைச் சொற்கள் எவை, எதிர்மறை வினைச் சொற்கள் எவை என்று கூறு:- அனுப்பார், பேசினன், அடித்தேன், எழுவோம், அணிகிறதில்லை, பாடுகிறேன், அமைந்தீர், சிரித்தார், நின்றான், விழுந்தான், பெய்யாது, உண்கிறார்கள், வருகின்றோம்.

---

## கடிதங்களுக்கு மேல் விலாசம் எழுதுதல்

நமக்கு கடிதம் எழுதத் தெரிந்தால் மட்டும் போதாது. நாம் எழுதும் கடிதங்களுக்கு மேல் விலாசம் எழுதவும் தெரியவேண்டும்.

சிலர் அரைகுறையாய் விலாசம் எழுதி அனுப்புகிறார்கள். மற்றும் சிலர் வார்த்தைகளைத் தெளிவாய் எழுதுவதில்லை. அதனால் அக் கடிதங்கள் விலாசத்தாருக்கு உடனே போய்ச் சேர்வதில்லை. சில சமயங்களில் அவை பல இடங்களில் சுற்றி அலைந்து, கடைசியில் காலதாமதமாகி விலாசத்தாரிடம் போய்ச் சேருகிறது.

ஆகவே, நாம் விலாசம் எழுதும் போது சுருக்கமாகவும், தெளிவாகவும், விலாசத்தைப் பார்த்தவுடனே இன்ன ஊரிலிருக்கும் இன்னாருக்குக் கடிதம் போய்ச் சேரவேண்டுமென்பதைத் தபாலாபீசில் உள்ளவர்கள் தெரிந்துகொள்ளும்படியாகவும் எழுதவேண்டும்.

முதல் வரியில் கடிதத்தை நாம் யாருக்கு அனுப்புகிறோமோ அவருடைய சரியான பெயரை எழுதவேண்டும். விலாசத்தார் இருக்கும் ஊர் பல தெருக்களைக் கொண்ட பெரிய ஊரா யிருக்குமானல், இரண்டாவது வரியில் விலாசத்

தாரின் வீட்டு இலக்கமும், தெருவின் பெயரும் எழுதப்பட வேண்டும். விலாசத்தார் இருக்கும் ஊர் சிற்றூராயிருக்குமானால், இரண்டாவது வரியில் வீட்டு இலக்கத்திற்கும் தெருவின் பெயருக்கும் பதிலாக விலாசத்தாரின் தொழிலைக் குறிப்பிடலாம்.

மூன்றாவது வரியில் ஊரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். விலாசத்தார் இருக்கும் ஊரில் தபால் ஆபீஸ் இல்லை யென்றால் அந்த ஊர் எந்தத் தபால் ஆபீசைச் சேர்ந்ததோ அந்தத் தபால் ஆபீசின் பெயர் நான்காவது வரியில் எழுதப்படவேண்டும். தபால் ஆபீசின் பெயரைக் கோடிட்டுக் காட்ட வேண்டும். கடைசியில் ஜில்லாவின் பெயரும் எழுதப்படவேண்டும். சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய பட்டணங்கள், பல தபால் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப் பட்டணங்களிலுள்ளவர்களுக்கு எழுதப்படும் விலாசத்தில், பட்டணத்தின் பேருக்குப் பக்கத்தில் தபால் பகுதியின் இலக்கத்தையும் எழுதவேண்டும். இவ்விதமாக மேல் விலாசம் எழுதியனுப்பினால் கடிதங்கள் தாமதமின்றி விலாசத்தாரிடம் போய்ச் சேரும்.

பட்டணத்திலிருக்கும்
ஒருவருக்கு எழுதும்
மேல்விலாசம்

| | |
|---|---|
| | தபால் முத்திரை |
| திருவாளர். | |
| சி. வீரபாகு, | |
| 6. ராமசாமிநாயக்கர் தெரு, | |
| ஆழ்வார்பேட்டை, | |
| மதராஸ். 18. | |

கிராமத்திலிருக்கும்
ஒருவருக்கு எழுதும்
மேல்விலாசம்

| | |
|---|---|
| | தபால் முத்திரை |
| திருவாளர். | |
| சி. பொன்னையா, | |
| ஆசிரியர், | |
| பேர்ப்பிலான்குளம், | |
| <u>பணகுடி போஸ்ட்,</u> | |
| திருநெல்வேலி ஜில்லா | |

## 29. படம் பார்த்துக் கதை சொல்லல்



## இப்படங்களிலுள்ள குற்றங்களை எடுத்துக் கூறு



# செய்யுட் பகுதி

## I. வாக்குண்டாம்

1. நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

2. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளே சங்கு
சுட்டாலும் வெண்மைதரும்.

3. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

4. நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

5. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

6. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியரென் றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகிவிடும்.

7. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன் நல் மரம்.

8. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானற்போல்—பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த உபகாரங்
கல்லின் மேலிட்ட கலம்.

9. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா —மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

10. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

## II. நல்வழி

1. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெறுக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

2. ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக் கென்னென் றிட்டுண்டிரும்.

3. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

—ஔவையார்.

## III. நீதி வெண்பா

1. ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியா னவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகோர்
தனையடிமை கொண்டவனே தான்.

2. ஈக்கு விடந்தலையி லெய்துமிருக் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்

3. கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலுங்
கர்ப்பூர மாமோ கடலுப்புப்—பொற்பூறும்
புண்ணியரைப் போல் இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

4. உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கள்—முற்றும்
மவுனத்தோர்க் கில்லை வருங்கலகம் துஞ்சாப்
பவுனத்தோர்க் கில்லை பயம்.

5. மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு
கனமொன்று மேலவர்தங் கண். [மொன்றே

## IV. தனிப்பாடல்

1. சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

2. தாயோடு அறுசுவைபோம்; தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான் பெற்ற செல்வம் போம்—ஆயவாழ்வு
உற்ருருடன் போம்; உடன் பிறப்பில் தோள்
பொற்ருலியோ(டு) எவையும் போம். [வலிபோம்

3. பிறப்பித்தோன் வித்தைகளைப் பேணிக் கொடுத்
[தோன்
சிறப்பின் உபதேசஞ் செய்தோன்,—அறப்பெரிய
பஞ்சத்தில் அன்னம் படைத்தோன், பயம் தீர்த்
பஞ்சபி தாக்களென எண். [தோன்

# அரும்பதவுரை

## 1. வாக்குண்டாம்

1. நன்றி - உபகாரம்;
என்று தருங்கொல் - என்று பயனளிக்கும்;

2. சுவை - உருசி.

3. கருமங்கள் - முயற்சிகள்;
ஆகா - வெற்றியடையா.

4. நீரளவேயாகுமாம் - நீரின் உயரத்துக்குத் தகுந்த படியே இருக்கும்;
நுண்ணறிவு - புத்தி கூர்மை;
மேலைத் தவத்தளவே - புண்ணியப் பலன்களுக்குத் தக்கபடி.

5. பேராற்ற லுடையார்க்கும் - மிகவும் திறமையுடைய வருக்கும்.

6. கந்தம் - வாசனை. மண்ணீருமாகாது - கை, கால்களி லுள்ள அழுக்கைக் கழுவக்கூட உதவாது.

உண்ணீர் - சாப்பிடக்கூடிய நீர்.

7. கவையாகிக் கொம்பாகி - பெருங் கிளைகளுடன் கூடி

குறிப்பறிய மாட்டாதவன் - சபையோரின் போக்கை அனுசரித்துப் பேசத் தெரியாதவன்.

8. பாங்கறியா - நன்மை தீமை தெரியாத.
புல்லறிவாளர் - அற்பர்கள்.

9. அடக்கமுடையார் - அமைதியான குணமுடையவர்கள்.
அறிவிலர் - புத்தியற்றவர்.
கடக்கக் கருதவும் - அலட்சியம் செய்யவும்.

10. அற்ற குளத்தின் - தண்ணீர் வற்றிப்போன குளத்தின்
உற்றுழித் தீர்வார் - துன்பம் வந்த காலையில் விட்டுச் செல்பவர்

ஒட்டியுறுவார் - விடாமல் இருப்பவர்.

## II. நல்வழி

2. மாண்டார் - இறந்தவர்.
நாம் போமளவும் - நாம் அவர்களைத் தேடிக் [கொண்டு போமளவும்.

எமக் கென் ' னென் றிட்டுண் டிரும் = எமக்கு என் என்று, இட்டு, உண்டு இரும் (இட்டு-பிச்சை யிட்டு)

3. மானிடரே - மனிதரே; ஆவி - உயிர்; கூடு - சரீரம்.
அனுபவிப்பார் - பணத்தின் பயனை அடைவார்.

## III. நீதி வெண்பா

1. ஆசைக்கடியான் - பேராசையுடையவன்.
ஆசைதனை அடிமை கொண்டான் - ஆசைகளை விட்டவன்.

தப்பாது - சந்தேக மில்லாமல்;

2. பைங்கணரவுக்கு - கொடிய சர்ப்பத்துக்கு;
துர்ச்சனர்—கெட்டவர்; அங்கம்—தேகம்;

3. புண்ணியர் - நல்லவர்; புல்லியர் - அற்பர்;

5. வேறுபட்டவர் - வித்தியாசமா யிருப்பவர்;
மேலவர் - மேன் மக்கள்.

## IV. தனிப் பாடல்

நட்பு —சிநேகிதம்
தயை —இரக்கம்
கொடை —ஈகை
உற்றார் —உறவினர்
தோள்வலி —உடல்பலம்
பேணி —பாதுகாத்து.

Printed at the Hilal Press, Tirunelveli—1954.